ஆசிரியர் உரை

# பொறுப்பை பிறரிடம் ஒப்படைத்தல்

# The Passing of the Baton

Byron Nichols

உலகம் முழுவதிலும் பெரும்பாலான மக்கள் விளையாட்டு நிகழ்ச்சிகளின் ஈர்ப்பால் ஈர்க்கப்பட்டு அதினால் சிறைபிடிக்கப்பட்டிருக்கிறார்கள். அத்தோடு அவர்கள் தங்களை விளையாட்டோடு முழுமையாக ஈடுபடுத்தி வெற்றி தோல்வி களிலும் உணர்வுப்பூர்வமாகக் கலந்துகொள்ளுகிறார்கள்.

எல்லாக் காலகட்டங்களிலும் ஓட்டப்பந்தயங்கள் பிரபலமான விளை யாட்டுப் போட்டியாகவே இருந்து வருகின்றன. மனிதர்களை உள்ளடக்கிய போட்டியாக இருந்தாலும் சரி, மிருகங்கள் அல்லது வாகனங்களை உள்ள டக்கிய போட்டியாக இருந்தாலும் சரி, போட்டியில் ஈடுபடும் வீரர்கள் முழு மூச்சில் வெற்றி பெறத் துடிப்பதால் அங்கே பரவசத்திற்குப் பஞ்சமே இருக்காது. ஆனால், விளையாட்டுப் போட்டியில் பரவசத்தின் உச்சம் வீரர்கள் ஒருவரையொருவர் முந்த முயற்சிக்கும் அந்தக் கடைசி நிமிடம் தான்.

புதிய ஏற்பாடு அவ்வப்போது ஒரு தனிப்பட்ட கிறிஸ்தவனுடைய ஆவிக்குரிய வாழ்வை ஒரு பந்தயமாக அல்லது ஒரு போட்டியாக விவரிக்கிறது. தேவ ஆவியினால் ஏவப்பட்ட மற்ற எழுத்தாளர்களைவிட அப்போஸ்தலனாகிய பவுல் கிறிஸ்துவுக்காக அர்ப்பணிப்போடு வாழும் ஒரு சீஷனுடைய வாழ்க்கைக்கும், ஒரு போட்டியில் பங்கேற்கும் வீரனுடைய வாழ்க்கைக்குமிடையே உள்ள ஒப்புமை களை விவரித்திருக்கிறார். உதாரணமாக, அவர் I கொரிந்தியர் 9:24 ல், " **பந்தயச் சாலையில் ஓடுகிறவர்களெல்லாரும் ஓடுவார்கள்; ஆகிலும், ஒருவனே பந்தயத்தைப் பெறுவானென்று அறியீர்களா? நீங்கள் பெற்றுக் கொள்ளத்தக்கதாக ஓடுங்கள்.** " என்று எழுதினார். பவுல் இதேவிதமாகப் பிலிப்பியர் 2:14 ல் " **நான் வீணாக ஓடினதும், வீணாகப் பிரயாசப்பட்டதுமில்லையென்கிற மகிழ்ச்சி கிறிஸ்துவின் நாளில் எனக்கு உண்டா யிருப்பதற்கு ஜீவ வசனத்தைப் பிடித்துக் கொண்டு, உலகத்திலே சுடர்களைப் போலப் பிரகாசிக்கிற நீங்கள்** " என்று எழுதுகிறார்.

ஓர் ஓட்டப்பந்தயத்தில் ஒரு வீரன் வெற்றிபெறுவதற்கு என்னென்ன முயற்சி களை எடுக்க வேண்டுமோ, என்னென்ன செயல்களைச் செய்யவேண்டுமோ

அவைகளையெல்லாம், விசுவாச ஓட்டத்தில் ஓடுகிற ஒரு கிறிஸ் தவன் கடைப் பிடிக்க வேண்டும். ஆனால், இங்கே நமது பாடம் தனிப் பட்ட கிறிஸ்தவ ஓட்டத்தில் ஒவ்வொருவரும் கடைப்பிடிக்க வேண்டிய காரியங்களை மையமாகப் பேசுகிறது. ஓட்டப்பந்தயத்திற்கும், தனிப்பட்ட கிறிஸ்தவனுக்கு முள்ள ஒப்பீட்டை இன்னும் அதிகப்படுத்தி பெரிய அளவில் அதைக் கிறிஸ்தவத்தோடு பொருத்திப் பார்க்க முடியுமா? நாம் ஜாக்கிரதையாக இதைச் செய்தால் வேத வசனங்களுக்கு எவ்வித பாதிப்புமின்றி இதைச் செய்து முடிக்க முடியும்.

உலகிலுள்ள போட்டிகளில் பெரும்பாலானவைகள் ஒருவருக்கெதிராக மற்றொருவர் போட்டியிடும் தனியாள் அல்லது தனிநபர் போட்டிகளாகத்தான் இருக்கின்றன. ஆனாலும், போட்டியாளர்கள் குழுவாகக் கலந்துகொள்ளும் போட்டிகளும் இருக்கின்றன. இவைகளுள் ஒன்று " தொடர் ஓட்டப்பந்தயம் " என்றழைக்கப்படும் ( Relay Race ). இந்த Relay Race என்பது 4×100 மீட்டர் ஓட்டப்பந்தயமாகும். இது ஒரு குழுவை உள்ளடக்கிய ஓட்டப்பந்தயம். இதில், முதலில் ஓடுபவர் 100 மீட்டர்கள் ஓடி, தன் கையிலுள்ள கோலை அடுத்த 100 மீட்டர் ஓடுகிறவரிடத்தில் கொடுப்பார். இவர் 100 மீட்டர் ஓடி, அந்த கோலை அடுத்த 100 மீட்டர் ஓடுகிறவரிடத்தில் கொடுப்பார். இவர் இறுதியாக 100 மீட்டர்களை ஓடி முடிப்பவரிடம் தன் கையிலுள்ள கோலைக் கொடுப்பார். இவ்வகையான ஓட்டப்பந்தயத்தில் வேகத்தைவிட விவேகம் தான் அவசியமாயிருக்கிறது. அதாவது, இப்பந்தயத்தில் ஓர் அணி வெற்றிபெற வேண்டுமென்றால் கூட்டுமுயற்சி அவசியமாயிருக்கிறது.

நாம் ஒவ்வொருவரும் விசுவாச ஓட்டத்தைத் தனியாக ஓடவேண்டுமென்று வேதவாக்கியங்களில் வெளிப்படுத்தப்பட்டிருப்பது உண்மையாயிருந்தாலும் கூட நாம் மற்றவர்களிடமிருந்து தனிமைப்படுத்தப்படவில்லையென்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். நம் ஓட்டத்தைப் பிறர் காணவேண்டும். நம் ஓட்டம் வெற்றிகரமாக அமைந்தால், நாம் நமக்காக ஓடினாலும் கூட, மற்றவர்கள் மீது நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துகிறவர்களாயிருப்போம்.

நாம் ஓட்டத்தை முடிக்கும் தருவாயில் ஓட்டத்தின்போதே பொறுப்பை நம் குடும்பத்தாருக்கும் ஒப்படைக்கத்தக்கதாகவும், அவர்களும் அந்தத் தொடு கோட்டை மனதில் கொண்டவர்களாகத் தொடர்ந்து ஓடத்தக்கதாகவும் அவர் களை ஆயத்தப்படுத்துவது அவசியமாயிருக்கிறதல்லவா? நாம் வித்தியாசமான குடும்பங்களின் மத்தியில் வாழுகிறபடியால், குடும்பங்களில் ஆவிக்குரிய தன் மையிலுள்ள வித்தியாசங்களை நம்மால் காணமுடிகிறது. சில குடும்பங்களில்

விசுவாசமும், நீடிய பொறுமையும் ஒரு தலைமுறையிலிருந்து அடுத்த தலைமுறைக்கு அப்படியே மாற்றிவிடப்படுகிறது. ஆனால், சில குடும்பங்கள் எப்போதுமே கர்த்தருக்கு உண்மையாய் இருப்பதில்லை. ஏன் அப்படி நடக்கிறது? நிச்சயமாகவே அதற்கான காரணங்களில் ஒன்று, முந்தைய தலைமுறையினர் பக்திக்கடுத்த காரியங்களை அடுத்த தலைமுறையினருக்குக் கற்றுக் கொடுக்கவில்லை என்பதாகத்தான் இருக்கிறது.

குடும்பங்களில் நாம் காணும் காரியங்கள் சபைகளிலும் நடப்பதை நாம் காண்கிறோம். சில சபைகளில் அங்கத்தினர்கள் விசுவாச ஓட்டத்தை ஓடும்போது அவர்களுடைய தொடர் வெற்றிக்காக அர்ப்பணிப்புடன் இருப்பதையும், ஒவ்வொரு கிறிஸ்தவனும் பிசாசுக்கு எதிராகத் திறமையாகவும், தீர்மானத்துடனும் போராடுவதற்குத் தேவையான போஷாக்கு, உடற்பயிற்சி போன்றவைகளை அளிக்க மூப்பர்கள் தங்களை ஆயத்தமாக்கிக் கொள்வார்கள். அப்போது ஒரு தலைமுறையிலிருந்து மற்றொரு தலைமுறைக்கு பக்திக்காரியங்கள் பரிமாறப்படுகிறது. அதனால் சபை எப்போதுமே பலமடையும்.

தேவன் தாமே அருமையான வெற்றிக்கிரீடத்தால் நம்மை ஆசீர்வதிப்பாராக!

✝

---

★ ***மனிதர்கள் உங்களைப் பற்றி தவறாகப் பேசினார்கள் யாருமே அதை நம்பாதபடி வாழ்ந்து காட்டுங்கள்.***

★ ***ஒருவருடைய இல்லத்தில் கிறிஸ்து வெளியே வைக்கப்பட்டால், உள்ளே ஏதோ பிரச்சனை இருக்கிறது என்று அர்த்தம்.***

★ ***நாம் நம் கவலைகளை தேவனுடைய கரங்களில் வைக்கும்போது அவர் தம்முடைய சமாதனத்தை நம் இருதயங்களில் வைக்கிறார்.***

# இயேசு இல்லாப் பயணம்

## Journey without Jesus

E.Z.S. Rajanayagam

**பொ**துவாகவே பயணங்கள் பற்றி பல பார்வை உண்டு. அவரவர் தத்தம் நிலைகளில் நின்று, இப்பூமியில் தங்கள் பயணம் பற்றிய பார்வையை அமைத்துக் கொள்கின்றனர்.இவர்கள் எல்லோரையும் நாம் இரண்டு வகையாகப் பிரித்து விடலாம் . முதல் வகையினர், மாம்ச எண்ணம் கொண்ட வர்கள். மற்றவர்கள், ஆவியின் சிந்தையுடையவர்கள், மாம்ச எண்ணம் கொண்டவர்கள், பூவுலகப் பயணங்கள் ஒருபோதும் முடிவதில்லை என்று பலமாக வாதிடுவர். ஆவியின் சிந்தையுள்ளவர்களோ, அது அப்படியல்ல முடிந்தே தீரும் என்று அடித்து ஆதாரத்துடன் சொல்வர். இவர்களின் கருத்துக்கள், இப்படிக் கடுமையாக வேறுபடுவதற்கு காரணம், பயணங்கள் பற்றிய இவர்களின் அடிப்படைக் கண்ணோட்டமே, ஆவியின் சிந்தையுடையவர்களின் அணுகு முறை, மாம்ச எண்ணங்கொண்டவர்களோடு ஒரு போதும் இசைந்து போகாது. சொல்லப்போனால், அது இசைந்து போகவுங் கூடாது.

இயேசுவானவர் தமது 12 வயதில், தன்னுடைய பூமிக்குரிய பெற்றோர்களுடன் எருசலேமுக்கு மார்க்கப் பயணம் மேற்கொண்டார் என்று லூக். 2:41-52 வசனப் பகுதியில் காணலாம்.இப்பயணம், அவர் தமது வாழ்க்கையில் மேற்கொண்ட முதல் தூரப் பயணமாக இருக்கக் கூடும். ஒரு யூத ஆண் பிள்ளை, தனது 12-ம் வயதை எட்டும்போது, நியாயப்பிரமாணத்தின் மகன் என்ற சிறப்பைப் பெறுகிறான். அதுமுதல் அவன், நியாயப் பிராமணத்தின் படி நடக்கக் கடமைப்படுகிறான். அப்படி, இயேசுவானவர் தமது 12 வது வயதை அடைந்த போது, பக்தியுள்ள யூத குடும்பத்தார் செய்யும் பொதுவான வழக்கத் தின்படியாக, தமது தாயாகிய மரியாளோடும், வளர்ப்பு தந்தையாகிய யோசேப் போடும், உறவின் முறையாரோடும், மற்றும் ஊராரோடும், பஸ்கா பண்டிகை யில் கலந்து கொள்வதற்காக எருசலேம் பட்டணம் சென்றார். ஏனைய எல்லா ரோடும் சேர்ந்து மார்க்கக் கடமைகளை நிறைவேற்றிய இயேசுவானவர், ஊர் திரும்பும் நேரம் வந்தபோது, மற்றவர்களோடு தானும் சேர்ந்து கொள்ளாமல், எருசலேமிலேயே தங்கிக் கொண்டார்.

இப்படி, இயேசுவானவர் அவர்களுடன் இல்லாமல் போனது, பிள்ளையின் தவறு என்று சொல்வதை விட, பெற்றோரின் கவனக் குறைவு என்று கூறுவதே சரியானது. எப்படியெனில், பயணத்திற்கான ஆயத்தமும், பயணத்திற்கெனத் தங்களைச் சரி பார்த்துக்கொள்ளுதலும் இவர்களிடம் இல்லாமல் போய்விட்டது. பிரயாணம் போகிற எல்லோரும், தாங்கள் புறப்படு வதற்கு முன்பாக எல்லாம் சரியாக இருக்கிறதா என்று உறுதி செய்து கொள்ள வேண்டும். அப்படி உறுதி செய்வது பயண தூரத்தையும், பயணத்தின் தன்மையையும், கூடப் பயணிப் பவர்களையும் பொறுத்து, ஒரு முறைக்கு இரு முறையும், சில நேரங்களில் பல முறையும் கூட இருக்கும். அதுவும் பிள்ளை, குட்டிக ளுடன் செல்லும்போது கேட்வே தேவையில்லை. பொருள்களைப் பற்றிய அக்கறை இரண்டாமிடத் திற்குத் தள்ளப்பட்டு, குழந்தைகளைப் பற்றிய கவலை முதலிடம் பெற்று விடும். ஆனால், அக்காரியத்தில் இயேசுவின் தாயும், யோசேப்பும் தங்கள் பங்கில் கோட்டைவிட்டது நன்றாகவே தெரிகிறது.

உண்மை நிலை தெரிந்தவுடன் பதறியடித்து அவரைத் தேடிக் கொண்டே எருசலேமுக்குச் சென்றனர். இங்கே வசனம் சொல்வதைக் கவனியுங்கள். அவர் பிரயாணக்காரரின் கூட்டத்திலே இருப்பாரென்று நினைத்து, ஒரு நாள் பிரயாண தூரம் வந்து, உறவின் முறையாரிடத்திலும் அறிமுகமானவர்களிடத்திலும் அவரைத் தேடினார்கள். காணாததினாலே, அவரைத் தேடிக்கொண்டே எருசலே முக்குத் திரும்பிப் போனார்கள் " ( லூக். 2:44,45). தேடிக்கொண்டு என்று வசனம் சொல்லாமல் " தேடிக்கொண்டே " போனார்கள் என்று வசனம் கூறுகிறது. அதாவது, எதிர்ப்பட்ட எல்லாக் கூட்டதிலும், கண்ணில் பட்ட எல்லோரி டத்திலும் கேட்டுச் சென்றுள்ளார்கள். ஆகவே தான், மரியாள், ...., இதோ, உன் தகப்பனும், நானும் விசாரத்தோடே உன்னைத் தேடினோமே என்று அவரைக் கண்டபோது கூறியுள்ளாள்.

சரி, எருசலேமிலே இயேசு என்ன செய்தார் என்பது இப்பயண ஆய்வின் நோக்கமல்ல. மாறாக, எருசலேம் பயணத்திலே இயேசுவின் தாயும், யோசேப்பும், செய்வதைப் போன்ற பெருந்தவறுகள், இன்றைய கிறிஸ்தவத்தில் நடந்து கொண்டிருக்கிறதென்பதை எடுத்துக்காட்டி, அதைச் சீர்செய்ய முயற்சிப்பதே குறிக்கோள்.

## I தங்கள் பயணத்தில் இயேசு இருப்பதாக நினைத்துக் கொண்டனர். (வ.44)

மரியாளும், யோசேப்பும் எருசலேமிலிருந்து திரும்பி வந்த பயணம்

கற்றுத்தரும் முதல் பாடம், இயேசுவானவர் தங்களுடன் இருப்பதாக ஒருவன் நினைக்க வாய்ப்புண்டு என்பது.

இயேசு தங்களுடன் இல்லாமலே அவர் இருக்கிறார் என்று எண்ணியதற்கு இரண்டு காரணங்கள் இருக்க முடியும். முதலாவது, மற்றவர்கள் சொன்னதை அப்படியே ஏற்றுக்கொண்டது. அடுத்தது, உண்மையை உறுதி செய்யத் தவறி யது. அவர்கள் செய்த இந்த இரண்டு தவறுகளினிமித்தம் அவர்கள் இயேசு இல்லாப் பயணத்தை மேற்கொள்ள நேர்ந்தது.

அருமையானவர்களே, இன்றைக்குத் தங்களைக் கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக்கொள்கிற அநேகரின் ஆவிக்குரிய பயணம், இந்த யோசேப்பு, மரியாள் போன்றவர்களின் எருசலேம் பயணம் போன்றே உள்ளது. பரலோகத்திற்கான தங்களுடைய ஆவிக்குரிய பயணத்தில், இயேசுவானவரும், அவர் தந்த புதிய ஏற்பாட்டு உபதேசங்களும் அவர்களுடன் இல்லவே இல்லை. ஆனால் , இயேசுவான வரும் தங்களோடிருக்கிறார், அவருடைய உபதேசமும் தங்களோடிருக்கிறது என்ற நினைப்பு மாத்திரம் உள்ளது. தேவனுடைய காரியத்தில், வெறுமனே நினைப்பு மாத்திரம் வெற்றியைத் தந்து விடாது.

உதாரணமாக, இஸ்ரவேலர்கள் ஆயி பட்டணத்தின் மீது தொடுத்த போரை கவனித்துப் பாருங்கள் (யோசுவா 7ம் அதி), எரிகோ பட்டணத்தின் மீது அவர்கள் பெரும் வெற்றி கண்டபோது, தேவன், அவர்களோடிருந்தார். ஆனால், தேவ னுடைய கட்டளைக்குக் கீழ்ப்படியாமல், சாபத்தீடானதில் துரோகம் செய்ததினால், ஆயி பட்டணத்தை மேற்கொள்ள அவர்கள் சென்றபோது, தேவன் அவர் களுடன் இருக்க வில்லை. ஆனால், இஸ்ரவேல் புத்திரர், தேவன் தங்களோ டிருக்கிறார் என்று அவர்களாகவே நினைத்துக் கொண்டு, யுத்தத்திற்கு சென்று படு தோல்வியுடன் திரும்பி வந்தனர்.

இன்றைக்கு அநேகருடைய நிலை இப்படித்தான் இருக்கிறது. ஆனால், இயேசுவானவர் ஒருவனுடன் இருப்பதற்கு, கர்த்தாவே, கர்த்தாவே என்று கூப்பிடுவது மாத்திரம் போதாது. மாறாக, அவர் விதித்திருக்கிற நிபந்தனை களுக்குக் கீழ்ப்படிய வேண்டும். அது என்ன என்கிறீர்களா? அவரே சொல்வதைக் கவனியுங்கள். " ....ஒருவன் என்னில் அன்பாயிருந்தால், அவன் என் வசனத்தைக் கைக்கொள்ளுவான், அவனில் என் பிதா அன்பாயிருப்பார்; நாங்கள் அவனிடத்தில் வந்து, அவனோடே வாசம் பண் ணுவோம் " (யோவான் 14:23) எவ்வளவு எளிமையான நிபந்தனை பாருங்கள். புதிய ஏற்பாட்டிலே அவர் வெளிப்படுத்தியுள்ள வசனங்களுக்குக் கீழ்ப்படிய வேண்டும். அவ்வளவு தான். அப்படிக் கீழ்ப்படிந்தால் அவர் நம்முடனே கூட இருப்பார்.

ஆகவே, அவர் நம்முடன் இல்லாமலே, இருக்கிறதாக நினைத்து, இந்த ஆவிக்குரிய பயணத்தை மேற்கொண்டு, இறுதியில் இழந்து போகாதபடி, அவருடைய புதிய ஏற்பாட்டு உபதேசங்களுக்குக் கீழ்ப்படிந்து, அவர் நம்முடன் வாசம் செய்ய அனுமதித்து, நித்திய வாழ்வைப் பெற்றுக்கொள்வோம்.

**II தங்கள் பயணத்தில் இயேசுவைத் தவறான இடத்தில் தேடினர் ( வ.44 )**

மரியாளும், யோசேப்பும் எருசலேமிலிருந்து திரும்பி வந்த பயணம், கற்றுத் தருகின்ற இரண்டாவது பாடம், இயேசுவானவரை அவர் இல்லாத இடத்தில் ஒருவன் தேட வாய்ப்புண்டு என்பது.

அன்பானவர்களே, அங்கே மரியாளும், யோசேப்பும் செயல்பட்ட விதம் இன்றைய கிறிஸ்தவர்களின் செயல்பாட்டை அப்படியே பிரதிபலிப்பதாக உள்ளது. ஆம் இன்றைய யதார்த்த சூழலை அப்படியே எடுத்துக் காட்டுகிறது. கிறிஸ்துவைத் தேட விரும்புகிறவர்கள், அவருடைய உபதேசத்தைப் பின்பற்ற விரும்புகிறவர்கள், அவரும், அவருடைய உபதேசமும் எங்கு இல்லையோ அங்கு தேடி அலைந்து கொண்டுள்ளார்கள். யோசேப்பும், மரியாளும் அவரைப் பிரயாணக்காரரின் கூட்டத்தில் தேடினதுபோல மக்கள் பெருமளவில் கூடுகின்ற இடங்களில் அவரும், அவருடைய உபதேசமும் இருக்குமென்று நினைக் கின்றனர். அவர்கள் உறவின் முறையாரிடத்தில் தேடினது போல தங்க ளுக்கு வேண்டப்பட்ட, தங்கள் அபிமானிகளாக இருக்கும் குருமார்கள் மற்றும் பாஸ்டர் களிடத்தில் மற்றும் அவர்கள் செய்யும் உபதேசங்களில் அவர் இருப்பார் என்று நினைக்கின்றனர். இன்னும் அவர்கள், அறிமுகமானவர்களிடத்தில் தேடினது போல, அநேகரால் அறியப்பட்ட, வரம் பெற்றவர்கள் என்று தங்களுக்குத்தாங் களே அழைத்துக் கொள்வோர்களிடத்தில், அவரும் அவருடைய உபதேசமும் இருக்குமென்று நினைக்கிறனர். ஆனால், மரியாளும், யோசேப்பும் தங்கள் அறிவின்படியாகச் செய்த முயற்சிகள் எல்லாம் எப்படி வீணானதோ, அது போலத்தான் இயேசுவையும், அவருடைய உபதேசத்தையும் தங்கள் விருப்பத் தின்படியாகவும், மாந்த அறிவின்படியாகவும் தேடுவது. தேவன் ஒருபோதும் நம்முடைய கணக்கிலே அடங்கமாட்டார். ஆம், நம்முடைய ஞானம், அறிவு என்பவைகள் அவருக்கு முன்பாகப் பைத்தியமாயிருக்கிறது. ஆகவே, நம்முடைய அறிவின்படியாக அவரைக் காணமுடியாது என்பதைத் தயவு செய்து தெரிந்து கொள்ளுங்கள்.

இயேசு கிறிஸ்துவையும், அவருடைய உண்மையான உபதேசத்தையும் பின்பற்ற விரும்பும் தேவப்பிள்ளையே, நீ அவரை எங்கே தேடிக் கொண்டுள்

ளாய்? அவர் உன்னுடன் பிரயாணம் செய்ய வேண்டுமென்று விரும்புகிறாயே, அவருடைய உபதேசம் உன்னிடத்திலே இருக்கிறதா? அவரை வாரந்தோறும் ஆராதித்துக் கொண்டிருக்கிறாயே உன்னுடைய ஆராதனையில் அவர் இருக்கிறாரா? உன்னுடைய ஆராதனை அவர் சொன்ன படி, ஆவியோடும், உண்மையோடும், இருக்கிறதா? எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதைப் பிடித்துக்கொள் என்று உனக்கு கட்டளையிடப்பட்டிருக்கிறதே, (I தெச. 5:21) என்றைக்காவது உன் ஆவிக்குரிய வாழ்வில் நீ செய்து கொண்டிருக்கிற காரியங்களைச் சோதித்துப் பார்த்திருக்கிறாயா? எண்ணிப்பார்.

## III தங்கள் பயணம் ஆரம்பித்த இடத்திற்கே திரும்பினர்

மரியாளும், யோசேப்பும் எருசலேமிலிருந்து திரும்பி வந்த பயணம் கற்றுத் தருகின்ற மற்றுமொரு பாடம், தவறவிட்ட ஒன்றை கண்டு பிடிக்க ஆரம்பித்த இடத்திற்கே திரும்பிச் செல்ல வேண்டுமென்பது.

அன்பானவர்களே, இன்றைக்கு கிறிஸ்தவத்திலே காணப்படுகிற இத்தனை பிரிவினைகளுக்கும், ஒவ்வொரு பிரிவினரும் செய்கின்ற முரண்பாடான உபதேசங்களுக்கும் அடிப்படைக் காரணம் என்ன? ஏன், இவ்வளவு குழப்பங்கள்? முதல் நூற்றாண்டிலே, கி.பி 30 வது வருடத்தில் எருசலேம் பட்டணத்திலே, பெந்தெகொஸ்தே நாளில் இயேசுவானவர் வாக்களித்தபடி ஸ்தாபிக்கப்பட்ட சபையையும், அன்றைக்கும், அதைத் தொடர்ந்தும் அப்போஸ்தலர் களைக் கொண்டு பரிசுத்த ஆயானவராலே கொடுக்கப்பட்ட உபதேசத்தை யும் நாம் தவற விட்டுவிட்டோம். இயேசுவை எருசலேமிலே விட்டுவிட்டு, யோசேப்பும், மரியாளும் வழி நெடுகத் தேடினதுபோல, எருசலேமிலே ஸ்தாபிக்கப்பட்ட சபையையும், எருசலேம் சுவிசேஷத்தையும் நாம் விட்டுவிட்டு, அதை நாம் ரோமிலும், இங்கிலாந்திலும், அமெரிக்காவிலும் தேடிக்கொண்டுள்ளோம்! எருசலேமுக்குப் போய்த் தேடுவதைக் காட்டிலும், வழிநெடுகத் தேடுவது, மரியாளுக்கும், யோசேப்புக்கும் சுலபமாயிருந்தது போல, நமக்குத் தோதாகத் தெரிகின்ற இடங்களில், எருசலேமின் சபையையும், எருசலேம் சுவிசேஷத்தையும் தேடுவது சுலபமாயிருக்கிறது. ஆனால், அதிலே என்ன பிரயோஜனம்? சொல்லுங்கள்!

இயேசு உன் வாழ்க்கையில் வேண்டுமானால், அவர் கட்டின சபை உன் வாழ்க்கையில் வேண்டுமானால், அவர் கொடுத்த உபதேசம் உனக்கு ஆத்தும இரட்சிப்பைக் கொடுக்க வேண்டுமானால், அந்த ஆத்தும இரட்சிப்பு உனக்கு சமாதானத்தையும், ஆசீர்வாதத்தையும் கொண்டுவர வேண்டுமானால், அந்த இரட்சிப்பு உனக்கு பரலோக பாக்கியத்தைப் பெற்றுத்தர வேண்டுமானால், நீ

எருசலேமின் சபையையும், எருசலேமின் சுவிசேஷத்தையும் கண்டுபிடித்தே ஆக வேண்டும். எருசலேமின் சபையாகிய கிறிஸ்துவின் சபைதான், இயேசு கிறிஸ்து, கி.பி 30 ல் கட்டின உண்மையான சபை. ஒருவேளை, இன்றைக்கு, எந்தவொரு பிரிவு சபையில் நீங்கள் அங்கமாக இருந்தாலும், அது கி.பி. 30 க்குப் பிறகு, எருசலேமுக்கு வெளியே மனிதனால் கட்டப்பட்ட சபையாகவே இருக்கும். அதைப்போலவே, நீ விசுவாசித்து (மாற்கு 16:15) மனந்திரும்பி (அப்.2:38) இயேசு கிறிஸ்து தேவனுடைய குமாரனென்றும் அறிக்கையிட்டு ( அப்.8:38 ) பாவமன்னிப்புக்கென்று தண்ணீரில் மூழ்கி ஞானஸ்நானம் ( கொலோ 2:12; தீத்து 3:5) பெற்றிருந்தால் மாத்திரமே, உன் இரட்சிப்பு எருசலேம் சுஷசேஷத்தின் படியானது. வேறு வகையில் நான் இரட்சிக்கப்பட்டிருக்கிறேன் என்று நீ எப்படிக் கூறினாலும் அது எருசலேம் சுவிசேஷத்தின் படியானதல்ல. இது நிச்சயம்.

ஆகையால், அருமையானவர்களே, இயேசு கிறிஸ்துவின் சபையையும், அவருடைய மூல உபதேசத்தையும் நாம் தவறவிட்டுவிட்டு வேறு எங்கேயாவது அதைத் தேடிக்கொண்டிருப்போமானால் நம்முடைய வீணான முயற்சிக்கு இன்றே முடிவுகட்டிவிட்டு, எருசலேமின் சபையாகிய கிறிஸ்துவின் சபைக்கும், எருசலேமின் உபதேசமாகிய புதிய ஏற்பாட்டின் உபதேசத்திற்கும் திரும்புவோம். ஆமென்!

✝

---

## அந்த நாள்...

அது உக்கிரத்தின் நாள்

அது இக்கட்டும் இடுக்கமுமான நாள்

அது அழிவும் பாழ்க்கடிப்புமான நாள்

அது இருளும் அந்தகாரமுமான நாள்

அது மப்பும் மந்தாரமுமான நாள்.

# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| பொறுப்பை பிறரிடம் ... | Byron Nichols | ... 1 |
| இயேசு இல்லாப் பயணம் | Rajanayagam | ... 4 |
| வழிவிலகிச் செல்லுதல்... | Jerry bates | ... 12 |
| பழைய ஏற்பாட்டில் கிறிஸ்து | Louis Rushmore | ... 17 |
| பரலோகத்திற்குப் பல வழிகள் ... | J.C. Choate | ... 22 |
| கிறிஸ்துவை சிலுவையில் ... | P.C. Philemon Rajah | ... 25 |
| நீங்களும் போய்விட ... | B. Arjunan | ... 28 |
| அப்போஸ்தலப் பட்டம் | E.Z. Selvanayagam | ... 31 |
| ஜீவனை விரும்பி நல்ல நாட்களை... | Benny Martin | ... 35 |
| **தேவன்** | **God** | |
| சிங்கமும் ஆட்டுக்குட்டியும் | Hugo Mc Cord | ... 39 |
| பழைய ஏற்பாட்டில் இயேசு | Betty Burton Choate | ... 43 |
| தேவனுடைய மகத்துவம் | Maxie B. Boren | ... 47 |
| **தேவனுடைய வார்த்தை** | **The word of God** | |
| மரிக்கும் மனிதனுக்கான ... | Bill Dillon | ... 49 |
| தேவன் என்றால் அவர் என்ன ... | Rick Cunningham | ... 51 |
| வேதாகமம் | Tommy Hagewood | ... 52 |
| **இரட்சிப்பு** | **Salvation** | |
| மனந்திரும்புதல் நான்கு ... | Charles Hodge | ... 54 |
| தீர்மானத்தின் பள்ளத்தாக்கு | Clarence Deloach | ... 57 |
| கிறிஸ்துவுக்குள் ஆசீர்வாதங்கள் | Owen D. Olbricht | ... 59 |
| அமெரிக்காவின் மிசோரியை... | John Deffenbaugh | ... 62 |
| **சபை** | **The Church** | |
| தேவனுடைய விசேஷித்த ஜனம் | Jimmy Clark | ... 65 |

**வாழ்வதற்கான உபதேசம்** — **Doctrine to Live by**

| | | |
|---|---|---|
| ஜோதிடம் | Evan Adair | ... 69 |
| இப்படியிருப்பது என் ஜனத்துக்கு | Mike Mays | ... 71 |

**செயலில் கிறிஸ்தவம்** — **Christianity in Action**

| | | |
|---|---|---|
| உங்களில் அநேகர் போதக... | Bonnie Rushmore | ... 73 |
| ஒரு சந்திப்பு என்ன செய்தது | Pat Stephenson | ... 77 |
| ஒருவரையும் சுட்டிக்காட்டாமல் | Max Patterson | ... 79 |

**ஆராதனை** — **Worship**

| | | |
|---|---|---|
| சபை கூடிவருதலை விட்டுவிடுதல் | Wayne Barrier | ... 82 |
| வாகனம் நிறுத்துமிடத்திலிருந்து | Bruce Mc Larty | ... 84 |
| ... நவீனகால விக்கிரகாராதனை | Ronald Bryant | ... 86 |

**அனுதின கிறிஸ்தவ வாழ்க்கை** — **Daily Christian living**

| | | |
|---|---|---|
| தேவனுக்கான அனுதின சேவை | Charles Box | ... 89 |

**கிறிஸ்தவ இல்லம்** — **The Christian home**

| | | |
|---|---|---|
| விவாகரத்தைத் தடுக்க ... | Jerry A. Jenkins | ... 95 |
| நம்முடைய இல்லங்களின் ... | Jimmy Young | ... 97 |

**வசனப் பகுதி பாடங்கள்** — **Textual studies**

| | | |
|---|---|---|
| நீங்கள் கேட்டுக்கொள்வ... | T. Pierce Brown | ... 103 |
| எளிதில் உடைந்துபோகக் ... | Curtis Camp | ... 107 |

# வழிவிலகிச் செல்லுதல்: அதன் காரணமும், வைத்தியமும்

# Apostasy : Its Cause and Cure

Jerry Bates

**வ**ழிவிலகிச் செல்லுதல் என்பது கர்த்தருடைய சபையில் நீண்டகாலமாக மிகப் பெரிய பிரச்சனையாக இருந்து வருகிறது. அது தொடர்ந்து மிகப்பெரிய பிரச்சனையாக இருக்குமென்று நான் யூகிக்கின்றேன். இதற்கான காரணம் என்னவென்பதைக் குறித்தும் அதற்கான தீர்வு என்னவென்பதைக் குறித்தும் அதிகநேரம் விவாதிக்கப்பட்டிருக்கிறது. இந்த சோக நிலைமைக்கு இறுதிப் பதிலளிக்க நான் துணியவில்லை. ஆனால், பெரும்பாலும் கண்டுகொள்ளப் படாத ஒரு காரியத்தைக் குறித்து நீங்கள் ஆழ்ந்து சிந்திக்கும்படி இதை உங்களுக்கு முன்பாக வைக்கிறேன்.

இக்கேள்வியைக் குறித்து நாம் ஆழ்ந்து யோசித்துக் கொண்டிருக்கும்போது இஸ்ரவேல் தேசத்தை நாம் உதாரணமாக எடுத்துக் கொள்வோம். எபிரெயர் மூன்று அல்லது நான்கு அதிகாரங்களில் எபிரெய எழுத்தாளர், கர்த்தருடைய சபை திரும்பவும் தங்கள் பழையநிலைக்குப் போகக்கூடாது என்று இஸ்ரவேல் தேசத்தை ஓர் எச்சரிப்பாக, அந்த எபிரெய கிறிஸ்தவர்களுக்கு முன் வைத்தார். இந்த மூன்றாம் அதிகாரத்தில் கிறிஸ்தவர்களைப் பற்றித்தான் சொல்லப் பட்டிருக்கிறது. அவர்கள் வெளிப்படையாகவே பரம அழைப்புக்குப் பங்குள் ளவர்களாகிய பரிசுத்த சகோதரர் என்று அழைக்கப்பட்டிருக்கிறார்கள் ( 3:1 ). மறுபடியும், 3:12 ல் சகோதரர் என்று அழைக்கப்படுகிறார்கள். இந்த எபிரெய கிறிஸ்தவர்களுக்கு கிறிஸ்துவை விட்டுவிட்டு, மோசேயின் பிரமாணத்தைப் பின்பற்றும்படியான ஒரு சோதனை ஏற்பட்டது. ஆனாலும், அவர்கள் அப்படிச் செய்தால், அவர்கள் நாடுகின்ற பலனை இழந்து போவார்கள். ஆகவே, இஸ்ர வேலர்களுக்கு நடந்தவைகள் நினைவுபடுத்தப்பட்டது.

தேவன் இஸ்ரவேலர்களை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து மீட்டார். அவர்கள் எவ்வித யுத்தத்தையும் செய்யவில்லை. கர்த்தர் அவர்களுக்காக யுத்தம் செய்தார். அவர்கள் அவைகளைப் பார்த்தார்கள். ஆனால், அவர்கள்

தேவனிடத்தில் அதிகமான விசுவாசம் வைக்க அவைகள் காரணமாயிருக்கவில்லை. மாறாக தங்கள் இருதயங்களைக் கடினப்படுத்தினார்கள். மேலும், அவர்கள் கானான் தேசத்தின் மதிலால் சூழப்பட்ட பட்டணங்களை எதிர்கொண்ட போது எகிப்துக்குத் திரும்ப விரும்பினார்கள். தேவன் செய்த பெரிய காரியங்களை அவர்கள் கண்டிருந்தபோதும்கூட கானானின் சவால்களை எதிர்கொள்ள அவர் போதுமானவரல்ல என்றும் எண்ணினார்கள்.

இஸ்ரவேலர்கள் அவிசுவாசத்தினால் அதிகப் பாதிப்புக்குள்ளாக்கப்பட்டனர். அவர்கள் தேவனிருப்பதை நம்பாமலில்லை. மாறாக, தேவன்மீது, போதுமான விசுவாசம் வைக்கவில்லை. அதுவே, அவர்கள் தேவனுடைய வார்த்தைக்குச் செவிகொடாமல், நம்பிக்கையற்ற மனிதனுடைய வார்த்தைக்குச் செவிகொடுக்க வைத்தது. அதனால், தேவன் அந்த ஒட்டுமொத்த சந்ததியையும் வனாந்திரத்தில் சங்காரம்பண்ணி அவர்கள் பல நூண்றாண்டுகளாக எதிர்பார்த்த கானான் தேசத்திற்குள் பிரவேசியாதபடி செய்தார்.

இஸ்ரவேலர்கள் ஏன் கானானுக்குள் பிரவேசிக்க முடியவில்லை? எபிரெயர் 4 : 6ல், கீழ்ப்படியாமையினால் அவர்கள் கானானுக்குள் பிரவேசிக்கவில்லை என்று வெளிப்படுத்தப்பட்டிருந்தாலும் கூட, 3 : 19 ல், அவிசுவாசத்தினால் அவர்கள் கானானுக்குள் பிரவேசிக்கவில்லையென்று சொல்லப்பட்டிருக்கிறது. அவிசுவாசம் அல்லது தேவனிடத்தில் விசுவாசமில்லாததுதான் கீழ்ப்படியாமைக்கு மூல காரணமாயிருக்கிறது. இஸ்ரவேல் தேவனை மனதளவில் விசுவாசித்தது ஆயினும் தேவன் அவர்களோடு பகலில் மேகஸ்தம்பமாகவும், இரவில் அக்னி ஸ்தம்பமாகவும் இருந்தார். ஆனாலும், மனதளவில் தேவனை ஏற்றுக்கொண்டது விசுவாசமாகவோ, கீழ்ப்படிதலாகவோ மாறவில்லை.

தேவன் தம்முடைய வாக்குத்தத்தங்களை நிறைவேற்ற வல்லவர் என்று அவர்பேரில் போதுமான விசுவாசத்தை இஸ்ரவேல் வைக்கவில்லை. அவர்கள் தேவனுடைய வல்லமையின் மாபெரும் அடையாளங்களைக் கண்டார்கள். இருந்தபோதிலும், தரிசித்து நடவாமல் விசுவாசித்து நடக்கும் திறனை அவர்கள் வளர்த்துக்கொள்ளவில்லை. அவர்கள் தொடர்ந்து எகிப்துக்குத் திரும்பவே விரும்பினார்கள் அவர்கள் ஏன் மறுபடியும் அடிமைத்தனத்தை விரும்பினார்கள் என்று நம்மால் புரிந்துகொள்ள கடினமாயிருக்கிறது. ஏனென்றால், மீண்டும் ஒரு கடினமான சூழ்நிலைக்குள் கடந்துசெல்வதை நம்மால் கற்பனை செய்து பார்க்கவே முடியாது.

எபிரெயர் 3:13 பாவத்தின் வஞ்சனையைக் குறித்துப் பேசுகிறது. பாவமானது இஸ்ரவேலர்கள் எகிப்திலே பட்டபாடுகளை மறக்கச் செய்து அங்கே

அவர்கள் புசித்தமாம்சத்தையும். மரக்கறிகளையும் மட்டும் நினைவில் தங்கும்படி செய்தது. அநேகமாக அவர்கள் கூடாரங்களில் குடியிருப்ப தைவிட நிலையான வீடுகளில் குடியிருக்க விரும்பியதுபோல் தெரிகிறது.

இது, நாம் தேவனைவிட்டுவிட்டு பாவ வாழ்க்கைக்கு மறுபடியும் திரும்பும் சோதனையில் நமக்கு எப்படி சம்பந்தப்படுகிறது? நம்மில் பலர் தேவனுக்கு உண்மையாக ஊழியம் செய்ய அர்ப்பணிப்பதில்லை. அதிலும் குறிப்பாக சபை யிலே வளர்க்கப்பட்ட நம்மில் பலரும் கூட ஊழியத்திற்கென்று முழுமையாக அர்ப்பணிப்பதில்லை. உங்கள் பெற்றோர்களும், மூதாதையர்களும் ஒரு வேளை கிறிஸ்தவர்களாக இருக்கலாம். அதன் காரணமாக நீங்கள் பிறந்த திலிருந்தே தேவனுடைய சித்தத்தைக் குறித்துப் போதிக்கப்பட்டிருப்பீர்கள். ஆரா தனைக்குப் போவது, கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெறுவது போன்ற வைகளை நீங்கள் குடும்ப அங்கத்தினர் என்கிற முறையில் செய்திருப்பீர்கள்.

ஆயினும் வாழ்க்கையின் ஏதாவதொரு கட்டத்தில் தேவனிடத்தில் மனதார நம்மை நாம் அர்ப்பணிக்கவேண்டும். இஸ்ரவேல் ஜனங்களில் பெரும் பாலானோர் அந்த அர்ப்பணிப்பை ஒருபோதும் செய்யவில்லை. அவர்கள் பிறப்பால் இஸ்ரவேலர்களாயிருந்தார்கள். தேவனிடத்தில் விசுவாசம் வைப்ப தென்பது தேசம் மற்றும் சமுதாயத்தின் பிரஜைகளாக ஒவ்வொருவரும் செய்த ஓர் காரியமாயிருந்தது. ஆயினும் மனதளவில் அவர்கள் ஏற்றுக்கொண்ட காரியங்கள் அவர்களுடைய இருதயத்திற்குள் செல்லவில்லை. ஏனென்றால் மதிலால் சூழப்பட்ட கானான் தேசத்தில் அவர்கள் தடைகளை எதிர்கொண்டபோது தேவனுடைய வாக்குத்தத்தங்களை விட மனித ஞானத்திற்குத்தான் அவர்கள் செவிகொடுத்தனர்.

நம்முடைய அர்ப்பணிப்பு இருதயத்திலிருந்து வரவில்லையென்றால் நாம் தடைகளை எதிர்கொள்ளும்போது இஸ்ரவேலர்களைப் போல் தான் செய்வோம். சோதனைகளும், பாடுகளும் கிறிஸ்தவத்தின் அங்கமாக இருக்கிறபடியால், அவைகளினால் நாம் தாக்கப்படும்போது, பாவம் நமக்கு சொற்ப நேர சந்தோ ஷத்தை மாத்திரமே தருகிறது. நாம் தற்காலிகமான காரியங்களைக் கடந்து விசு வாச வாழ்வின் முடிவைக் காணத்தக்க ஞானத்தையும், தைரியத்தையும் கொண் டிருக்க வேண்டும். நாம் அநித்தியமான பாவசந்தோஷங்களை அநுபவிப்ப தைப்பார்க்கிலும் தேவனுடைய ஜனங்களோடே துன்பத்தை அநுபவிப்பதையே தெரிந்துகொண்ட மோசேயைப் போலிருக்கவேண்டும் (எபி. 11:25).

இஸ்ரவேல் ஜனங்கள் ஒருபோதும் தேவனிடத்தில் முழுமையான நம்பிக்கை வைக்க கற்றுக்கொள்ளவில்லை. அதனால், தேவன் தங்களைக்

கானான் தேசத்தில் வெற்றிசிறக்கச் செய்வார் என்பதை அவர்களால் நம்பமுடிய வில்லை. நாம் தேவன்மீதும், அவருடைய வாக்குத்தத்தங்கள் மீதும் வைத்திரும் நம்பிக்கையை அழிக்க சாத்தான் தொடர்ந்து முயற்சிப்பான். நம்மில் பலருக்கு தேவனுடைய உதவி தேவை அல்லது தேவன் உதவிசெய்வார் என்னும் நம்பிக்கை இல்லை. அதனால் எல்லாவற்றையும் நம் விருப்பப்படி செய்ய முயற் சிக்கிறோம். ஆனால், தேவன் எல்லாவற்றையும் பொருள்படும் படியாகத்தான் செய்கிறார். இதைப் பலர் சந்தேகிப்பதால், தேவன் எவைகளைத் தடைசெய்கி றாரோ அவைகளைச் செய்கிறார்கள் அல்லது தேவன் எவைகளைச் செய்யும் படிச் சொல்லுகிறாரோ அவைகளைச் செய்யத் தவறுகிறார்கள். நாம் தேவன்மீது நம்பிக்கை வைப்பதற்குப் பதிலாக, மக்கள்மீது நம்பிக்கை வைப்பதற்கு தொடர்ச்சியாக சோதிக்கப்படுகிறோம். தேவன்மீது நமக்கிருக்கும் விசுவாசக் குறைச்சல் அவருடைய சித்தத்திற்கு நாம் கீழ்ப்படியாமல் போகக் காரண மாகிறது.

கிறிஸ்தவர்கள் தொடர்ந்து ஒருவரையொருவர் உற்சாகப்படுத்திக் கொண்டேயிருக்கவேண்டும். எபிரெயர்கள் நாள்தோறும் ஒருவருக்கொருவர் புத்தி சொல்லும்படியாக அறிவுறுத்தப்பட்டனர் ( எபி.3:13 ). இன்று என்னப்படு மளவும் நாடோறும் ஒருவருக்கொருவர் புத்தி சொல்லுங்கள் என்று சொல்வதைக் கவனியுங்கள். இது புத்தி சொல்வதின் அவசரத்தையும், முக்கியத்துவத்தையும் வலியுறுத்துகிறது. நாம் நாடோறும் ஒருவருக்கொருவர் புத்தி சொல்லவேண்டும். தம்மைப் பின்பற்றுபவர்கள் தனியாட்களாக இருக்கத் ஒருபோதும் தேவன் விரும்புவதில்லை. மாறாக, அவர் தம்பிள்ளைகள் மற்றவர் களோடு சேர்ந்து வழக்கமான அடிப்படையில் தினமும் ஒருவருக்கொருவர் புத்தி சொல்ல வேண்டுமென்று எதிர்பார்க்கிறார்.

தேவனைப் பின்பற்றும்போது சோர்வடைவது என்பது எளிதான காரிய மாகும். பழைய ஏற்பாட்டில் கிட்டத்தட்ட எல்லாப் பரிசுத்தவான்களும் சோர்வின் பாதையைக் கடந்து வந்திருக்கிறார்கள். அந்தியோகியா பட்டணத்திலுள்ள ஜனங் கள் கர்த்தரிடத்தில் திரும்பினதைக் கேள்விப்பட்ட எருசலேம் சபையார் உடனே பர்னபாவை அவர்களிடத்தில் அனுப்பினார்கள். அப்படி அனுப்பினதன் மற்று மொரு நோக்கம் ஒருவருக்கொருவர் புத்தி சொல்வதற்குத்தான் ( அப். 11: 19-23 ). நாம் சபைகூடிவருவதன் ஒரு நோக்கம் அவர்களுக்குப் புத்தி சொல்வதற்கு என்று சொல்லப்பட்டிருக்கிறது (எபி.10:24). இன்று நாம் இதை அப்படியே மாற்றிவிட்டோம். எப்படியெனில், நாம் ஒருவருக்கொருவர் புத்தி சொல்வதற்காக சபை கூடாமல் சபை கூடும்படியாக ஒவ்வருக்கொருவர் புத்திசொல்லிக் கொண்டிருக்கிறோம்.

நாம் தேவனைவிட்டு வழிவிலகாமலிருப்பதற்கான இரண்டு காரணங்களை

நாம் பார்த்தோம். அதில் ஒன்று, தேவனுக்கு ஊழியஞ்செய்ய முழுமையாக நம்மை அர்ப்பணிப்பது. இரண்டாவது, சக கிறிஸ்தவர்களிடமிருந்து தொடர்ந்து உற்சாகத்தைப் பெறுவது. இஸ்ரவேலர்கள் இவை இரண்டிலும் தோல்வியடைந்தார்கள். அதனால், தேவனுக்கு உண்மையாயிருப்பதிலும் தோல்வியடைந்தார்கள். நாம் ஒருபோதும் அவர்களுடைய மாதிரியைப் பின்பற்ற வேண்டாம்.

" ஆகையால், அந்த திருஷ்டாந்தத்தின்படி ஒருவனாகிலும் கீழ்ப்படியாமையினாலே விழுந்து போகாதபடிக்கு நாம் இந்த இளைப்பாறுதலில் பிரவேசிக்க ஜாக்கிரதையாயிருக்கக் கடவோம் " (எபிரெயர் 4 : 11).

✞

## பரலோகராஜ்யம்

பரலோகராஜ்யம் தன் ஊழியக்காரரிடத்தில் கணக்குப் பார்க்க வேண்டுமென்றிருந்த ஒரு ராஜாவுக்கு ஒப்பாயிருக்கிறது. அவன் கணக்குப்பார்க்கத் தொடங்கினபோது. பதினாயிரம் தாலந்து கடன்பட்டவன் ஒருவனை அவனுக்கு முன்பாகக் கொண்டு வந்தார்கள். கடனைத்தீர்க்க அவனுக்கு நிர்வாகம் இல்லாதபடியால், அவனுடைய ஆண்டவன் அவனையும் அவன் பெண்ஜாதி பிள்ளைகளையும், அவனுக்கு உண்டான எல்லாவற்றையும் விற்று, கடனைத் தீர்க்கும்படிக் கட்டளையிட்டான். அப்பொழுது அந்த ஊழியக்காரன் தாழ விழுந்து, வணங்கி : ஆண்டவனே! என்னித்தில் பொறுமையாயிரும், எல்லாவற்றையும் உமக்குக் கொடுத்துத் தீர்க்கிறேன் என்றான். அந்த ஊழியக் காரனுடைய ஆண்டவன் மனதிரங்கி அவனை விடுதலைபண்ணி, கடனையும் அவனுக்கு மன்னித்துவிட்டான். அப்படியிருக்க அந்த ஊழியக்காரன் புறப்பட்டுப்போகையில், தன்னிடத்தில் நூறு வெள்ளிப்பணம் கடன்பட்டிருந்தவனாகிய தன் உடன் வேலைக்காரரில் ஒருவனைக் கண்டு, அவனைப் பிடித்து, தொண்டையை நெரித்து : நீ பட்ட கடனை எனக்குக் கொடுத்துத் தீர்க்கவேண்டும் என்றான். அப்பொழுது அவனுடைய உடன் அவன் வேலைக்காரன் அவன் காலிலே விழுந்து : என்னிடத்தில் பொறுமையாயிரும், எல்லாவற்றையும் உமக்குக் கொடுத்துத் தீர்க்கிறேன் என்று, அவனை வேண்டிக்கொண்டான் ( மத்தேயு 18 : 23 – 29 ).

# பழைய ஏற்பாட்டில் கிறிஸ்து
# Christ in the Old Testament

Louis Rushmore

**ப**ழைய ஏற்பாட்டில் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவைப் பற்றி தீர்க்க தரிசனம் ஏதாவது இருக்கிறதா அல்லது பழைய ஏற்பாட்டின் நாட்களிலே கிறிஸ்து சரீரப்பிரகாரமாக இருந்தாரா என்றும், மற்றும் கிறிஸ்துவின் நித்தியத்தன்மை பற்றியும் அநேகருடைய மனதில் பலவிதமான கேள்விகள் எழுகின்றன. இயேசு கிறிஸ்து இப்பூமியில் மனிதப்பிறவி எடுப்பதற்கு முன் பாகவே தாம் இருந்ததை இவ்விதமாகச் சொன்னதின் மூலம் உறுதி செய்கிறார். " ஆபிரகாம் உண்டாகிறதற்கு முன்னாலே நான் இருக்கிறேன் என்று மெய் யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் " (யோவான்.8:58; யாத். 3:14 ) என்று. மேலும், கிறிஸ்து " பிதாவே உலகம் உண்டாகிறதற்கு முன்னே உம்மிடத்தில் எனக்கு உண்டாயிருந்த மகிமையினாலே இப்பொழுது நீர் என்னை உம்மிடத்திலே மகிமைப்படுத்தும் " என்றும் சொல்லியிருக்கிறார் (யோ வான்.17:5). கிறிஸ்து உலகத்தோற்றத்திற்கு முன்பாகவே இருக்கிறார் அல்லது இருந்து வருகிறார். அவர் பிதாவாகிய தேவனுக்கும், பரிசுத்த ஆவியான வருக்கும் சமமாக இருந்து வருகிறார் (எபி.1:2; கொலோ.1:16; II பேது.1:18-20; யோவா.1:1-3,14,18; ஆதி.1:2) தேவத்துவத்தில் அதாவது தேவனுடைய தன்மை களையும், குணாதிசயங்களையும் சமமாகப் பெற்ற வராகவும், நித்தியத்தன்மை யுடையவராகவும், மூவருள் ஒருவராகவும் இருக் கிறார் (அப்.17:29; ரோமர் 1:20; பிலி 2:6; கொலோ 2:9 ) கிறிஸ்து தேவத்துவத் தில் அங்கம் வகிப்பதாலும், நித்தியமானவராக இருப்பதாலும் பழைய ஏற்பாட்டில் தீர்க்கதரிசனங்களிலோ அல்லது இப்பூமியில் அவர் மனிதப்பிறவி எடுப்பதற்கு முன்பாகவோ கிறிஸ்துவைக் கண்டறிவதில் எவ்வித ஆச்சரியமுமில்லை.

பழைய ஏற்பாட்டின் பக்கங்களைப் பகுத்தறியும் நோக்கில் அதன் பக்கங்

களைப் திருப்பிப்பார்க்கும் ஒருவரால், நாம் இயேசு கிறிஸ்துவானவராக அறியப் பட்டிருக்கிறவரைப் பற்றிய நித்திய தன்மையைக் காணமுடியும். இதற்கு ஒரு மிகச்சிறந்த மாதிரி என்னவென்றால், பழைய ஏற்பாட்டு யூதர்களும், இன்றைய கிறிஸ்தவர்களும் ஏற்றுக்கொள்ளும் வண்ணமாக, இரட்சகர் எந்தப்பட்டணத்தில் பிறப்பார் என்பதற்கு ஆதாரமாக எவ்வித தயக்கமுமின்றி சுட்டிக்காட்டுவதற்கு வசனங்கள் உள்ளன ( மத்.2:4-6; யோவா.7:42 ) மேலும், " எப்பிராத்தா என்னப்பட்ட பெத்லகேமே நீ யூதேயாவிலுள்ள ஆயிரங்களுக்குள்ளே சிறியதாயிருந்தும் இஸ்ரவேலை ஆளப்போகிறவர் உன்னிடத்திலிருந்து புறப்பட்டு என்னிடத்தில் வருவார்; அவருடைய புறப்படுதல் அநாதிநாட்களாகிய பூர்வத்தினுடையது (மீகா 5:2).

வரப்போகும் மேசியாவாகிய கிறிஸ்துவைப் பற்றிய ஓர் அற்புதமான தீர்க்கதரிசனமாக, மீகதீர்க்கதரிசி, அவருடைய புறப்படுதல் அநாதிநாட்களாகிய பூர்வத்தினுடையது ( மீகா.5:2 ) என்று விவரிக்கிறார். ஆகவே, இந்த வாக்கியத்தை மனதில் கொண்டவர்களாய் நாம், நம் கர்த்தராகிய இயேசுகிறிஸ்து இப்பூமியில் ஒரு கன்னியில் வயிற்றில் கர்ப்பந்தரித்துப் பிறந்தது அவருடைய தொடக்கமல்ல என்பதைச் சரியாகப் புரிந்து கொள்ளவேண்டும். ஏனென்றால், அவருடைய புறப்படுதல் அநாதிநாட்களாகிய பூர்வத்தினுடையது என்னும் சொற்றொடர், அவர் ஏற்கனவே இருக்கிறார் என்றும், அவர் நித்திய நித்தியமாய் இருக்கிறாரென்றும், அவருக்கு ஆரம்பமும், முடிவுமில்லையென்றும் அடையாளப்படுத்துகிறது.

மேலும், பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனங்கள், புதிய ஏற்பாட்டில் கிறிஸ்துவில் எப்படி நிறைவேறினது என்பதை குறித்து ஆராய்ந்த வேத வல்லுநர்களான J.J.Turner மற்றும் Edward P. Myers போன்றோர், பழைய ஏற்பாட்டில் கர்த்தர் என்று நாம் காணும் வார்த்தைகளெல்லாம் புதிய ஏற்பாட்டில் இயேசுகிறிஸ்துவில் நிறைவேறியதைக் கண்டறிந்து தங்கள் கருத்துக்களைப் பதிவு செய்தனர். எனவே, பரிசுத்த ஆவியானவர், இயேசு பழைய ஏற்பாட்டில் கர்த்தராகக் குறிப்பிடப்பட்டிருக்கிறார். ஆகவே, அவர் தேவன் தான் என்னும் உண்மையை உறுதி செய்ய சாட்சி கொடுக்கிறார். இன்னும், மற்றுமொரு தேவ வல்லுநரான Roy H. Lanier என்பவர், பழைய ஏற்பாட்டில் கர்த்தர் எனும் பதம் புதிய ஏற்பாட்டில் இயேசுகிறிஸ்து என்று நாம் முடிவுக்கு வரவேண்டும் என்பதை ஒத்துக்கொள்கிறார். உதாரணமாக, ஏசாயா 40:3 ம் வசனத்தை ஒப்பிட்டுப் பாருங்கள், " கர்த்தருக்கு வழியை ஆயத்தப்படுத்துங்கள், அவாந்தர வெளியிலே நம்முடைய தேவனுக்கு பாதையைச் செவ்வை பண்ணுங்கள் " என்று வனாந்தரத்திலே கூப்பிடுகிற சத்தம் உண்டாயிற்று மத் 3:1-3

வசனங்களில், " அந்நாட்களில் யோவான்ஸ்நானன் யூதேயாவின் வனாந்தரத்தில் வந்து: மனந்திரும்புங்கள், பரலோகராஜ்யம் சமீபத்திருக்கிறது என்று பிரசங்கம் பண்ணினான். கர்த்தருக்கு வழியை ஆயத்தப்படுத்துங்கள்: அவருக்குப் பாதைகளைச் செவ்வைபண்ணுங்கள் என்று வனாந்தரத்ததிலே கூப்பிடுகிறவனுடைய சத்தம் உண்டென்று ஏசாயா தீர்க்கதரிசியினால் சொல்லப் பட்டவன் இவனே.

ஒருவர் பழைய ஏற்பாட்டில் கிறிஸ்துவைக் காணமுடியுமா என்று வெறுமனே நினைக்க வேண்டிய அவசியமில்லை. ஏனென்றால், இயேசு கிறிஸ்துதாமே தம்முடைய பிறப்பைப் பற்றியும் அதைத் தொடர்ந்து வரும் பூமிக்குரிய ஊழியத்தைக் குறித்தும் பழைய ஏற்பாடு முன்னறிவித்திருக்கிறது என்று உறுதியாகச் சொன்னார். கிறிஸ்து தாம் உயிர்தெழுந்த பிறகு, தம்முடைய சீஷர்களிடம் இக்காரியத்தைக் குறித்துப் போதித்திருக்கிறார். அப்பொழுது அவர் அவர்களை நோக்கி: தீர்க்கதரிசிகள் சொன்ன யாவையும் விசுவாசிக்கிறதற்குப் புத்தியில்லாத மந்த இருதயமுள்ளவர்களே, கிறிஸ்து இவ்விதமாகப் பாடுபடவும், தமது மகிமையில் பிரவேசிக்கவும் வேண்டியதில்லையோ என்று சொல்லி, மோசே முதலிய சகல தீர்க்கதரிசிகளும் எழுதின வேதவாக்கியங்களெல்லா வற்றிலும். தம்மைக் குறித்துச் சொல்லியவைகளை அவர்களுக்கு விவரித்துக் காண்பித்தார் ( லூக்கா 24:25-27 ). எல்லாத் தீர்க்கதரிசனப் புத்தகங்களின் மையப்பொருள் கிறிஸ்துதான். நீங்கள் பழைய ஏற்பாட்டின் வேதவாக்கியங் களிலுள்ள ஒவ்வொரு பகுதியிலும் கிறிஸ்துவைக் காணமுடியும். மேலும், பழைய ஏற்பாட்டு சட்டப்புத்தகங்களிலும், சங்கீதப் புத்தகங்களிலும், தீர்க்கதரிச னங்களிலும் கிறிஸ்துவைக் காண்பதென்பது எவ்வளவு மகிழ்ச்சியானது என்பதை நினைத்துப் பாருங்கள்.

கிறிஸ்துவின் மரணம் அடக்கம் உயிர்த்தெழுதல் போற்றவைகள் வெகு நாட்களுக்கு முன்பாகவே, அதாவது அவருடைய ஊழியத்தின் ஆரம்ப நாட்க ளிலேயே கிறிஸ்துவானவர் அபிஷேகம் பண்ணப்பட்டவராக தம்முடைய தெய்வீகப் பங்கு என்ன என்பதை ஒரு பழைய ஏற்பாட்டு தீர்க்க தரிசனத்தை தமக்குத்தாமே பொருத்திப்பார்த்து அறிவித்தார். நம் ஆண்டவர் நாசரேத்திலுள்ள ஒரு ஜெப ஆலயத்திற்குள் பிரவேசித்து, வாசிக்க எழுந்து நின்றார்.

அப்பொழுது ஏசாயா தீர்க்கதரிசியின் புத்தகம் அவரிடத்தில் கொடுக்கப் பட்டது. அவர் புத்தகத்தைத் திறந்து வாசித்த வசனப்பகுதி ஏசாயா 61 : 1, 2 ம் வசனங்களில் இடம்பெற்றிருக்கிறது. " கர்த்தருடைய ஆவியானவர் என்

மேலிருக்கிறார்; தரித்திரருக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி என்னை அபிஷேகம்பண்ணினார்...." அப்பொழுது அவர் அவர்களோடே பேசத்தொடங்கி: உங்கள் காதுகள் கேட்க இந்த வேதவாக்கியம் இன்றையத்தினம் நிறைவேறிற்று என்றார் ( லூக்.4:21 ). நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இப்பூமிக்குரிய ஊழியத்தின் ஆரம்பத்திலேயே தம்மை அபிஷேகம்பண்ணப்பட்டவராக, இரட்சகராக வெளிப்படுத்தினார். வேத ஆராய்ச்சியாளர் ஒருவர் " தேவனுடைய வார்த்தையை உள்ளடக்கிய வேதாகமத்தில் கிறிஸ்துவைப் பற்றி சாட்சி கொடுக்காத ஒரு பக்கம் கூட இல்லை " என்று குறிப்பிட்டுள்ளார். பழைய ஏற்பாட்டில் குறிப்பாக மேசியாவைப் பற்றி சுமார் 333 தீர்க்கதரிசனங்கள் இருப்பதாக பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. அவைகளெல்லாம் துல்லியமாக, முழுமையாக கிறிஸ்துவுக்குள் நிறைவேறியிருக்கிறது.

பழைய ஏற்பாடு இயேசு கிறிஸ்துவைப் பற்றிய தீர்க்கதரிசனங்களால் நிரப்பப்பட்டிருந்தாலும், தேவத்துவத்தில் இரண்டாம் நபராகிய கிறிஸ்துவின் கிரியைகள் பழைய ஏற்பாட்டில் வெளிப்படையாகவே தெரிகின்றன. உதார ணமாக, வனாந்தரத்தில் அலைந்து திரிந்த இஸ்ரவேலர்களுக்கு முன்பாக அனுப்பப்பட்ட தூதன் இயேசு கிறிஸ்துதான் என்பது தெளிவாகிறது (யாத். 23:20 ). பழைய ஏற்பாட்டில் நாம் அந்தத் தேவதூதனை கிறிஸ்துவாகத்தான் காண்கிறோம். இஸ்ரவேலர்களை வனாந்தரத்தில் வழிநடத்தின அதே தேவனு டைய குமாரன்தான் இன்றும் பலரை மகிமைக்குள் வழிநடத்தி, தமக்குக் கீழ்ப்படிகிற யாவரும் நித்திய இரட்சிப்பை அடைவதற்குக் காரணராயிருக்கிறார் ( எபி.2:10; 5:9 ). அதேபோல், எரிகிற முட்செடியிலிருந்து பேசும் தூதன் இயேசு கிறிஸ்துதான் ( யாத்.3:2 ). யாத்திராகமம் 3:28 வசனப்பகுதிகளில், எரிகிற முட்செடியிலிருந்து பேசும் தேவதூதன் தேவத்துவத்தில் ஒருவர் என்று சொல்லுகிறது. ஆவியில் ஏவப்பட்ட எழுத்தாளராகிய லூக்கா, அப்போஸ்தலர் புத்தகத்தில் ஸ்தேவான் பேசின வார்த்தைகளைப் பதிவு செய்திருக்கிறார். இது எரிகிற முட்செடியில் பேசி, அலைந்து திரிந்த இஸ்ரவேரர்களுக்கு கட்டளை களைக் கொடுத்த அந்த தேவதூதன் கிறிஸ்துவே என்று உறுதிசெய்கிறது.

" சீனாய் மலையில் தன்னுடனே பேசின தூதனோடும் நம்முடைய பிதாக்களோடுங்கூட வனாந்தரத்திலே சபைக்குள்ளிருந்தவனும் நமக்குக் கொடுக்கும்படி ஜீவவாக்கியங்களைப் பெற்றவனும் இவனே " (அப்.7:38).

தேவத்துவத்தின் இரண்டாம் நபராகிய இயேசு கிறிஸ்துவைக் குறிக்கும் கர்த்தருடைய தூதனானவர் என்னும் பதம் பழைய ஏற்பாட்டின் பக்கங்களில்

வேறு இடங்களிலும் இடம்பெற்றிருக்கிறது. இவ்வார்த்தை முதன் முதலாக ஆதியாகமம் 16 ம் அதிகாரத்தில் இடம்பெற்றுள்ளது. இது ஆகாரின் வாழ்க்கையில் ஏற்பட்ட துன்பத்தின்போது கர்த்தருடைய தூதனானவர் அவளுக்கு முன்பாகத் தோன்றுகிறார் ( ஆதி.16:7-13 ). இங்கே இந்த கர்த்தருடைய தூதனானவர் இயேசு கிறிஸ்துதான் என்று நாம் பார்க்கிறோம். மேலும், கர்த்தருடைய தூதனானவர், ஆபிரகாம் தன் குமாரனாகிய ஈசாக்கை வெட்டும்படிக்குத் தன் கையை நீட்டிக் கத்தியை எடுத்தபோது, பிள்ளை யாண்டான்மேல் உன் கையைப் போடாதே என்று தடுத்தார் ( ஆதி.22:11,18 ). மேலும், கர்த்தருடைய தூதனானவர் ஆபிரகாமின் மீதும், அவனுடைய சந்ததி மீதும் ஆசீர்வாதங்களை வாக்குத்தத்தம் செய்தார் ( ஆதி. 22:16 ). அந்த கர்த்தருடைய தூதனானவர் ஞானக்கன்மலையாம் கிறிஸ்துவே.

✝

---

## உங்கள் லட்சியம் என்ன?

அருமையானவர்களே! வாழ்வில் உங்கள் இலட்சியம் என்ன? ஒரு உத்தியோகம், ஒரு வாகனம், ஒரு குடும்பம், பணம் பட்டம், உயர்ந்த சம்பளம் அல்லது வேறு எது? இவ்வுலகுக்கடுத்த பொருட்களே பலருடைய வாழ்வில் குறியாக இருக்கின்றன. ஆனால், அவைகள் அவர்களை இரட்சிக்க மாட்டாது? மேலும், திருப்தி, மகிழ்ச்சி, நம்பிக்கை எதையும் அவர்களுக்குத் தராது. நீ வாழ்ந்த முறைக்குக் கணக்குக் காட்ட, தேவன் முன்பு நீ நிற்கும்போது, நீ அநுபவித்த மேற்கண்ட உலகக் காரியங்களுக்கு எவ்வித அர்த்தமும் இல்லாமற் போகும். தேவனுக்காக நீ என்ன செய்தாய் என்பதை கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

ஆகவே, உங்கள் இலட்சியம் உயர்ந்ததாக இருக்கட்டும்; உங்கள் இலக்கு எல்லாவற்றிலேயும் மேலானதை நாடுவதில் இருக்கட்டும்; நல்லவற்றை நாடி, தேவனை சந்திக்க ஆயத்தப்படுவோம் ( கொலோ. 3 :1, 2 ).

## பரலோகத்திற்குப் பல வழிகள் இருக்கின்றனவா?

## Are There Many Ways to Heaven?

J.C Choate.

மத உலகில், கிறிஸ்துவில் விசுவாசம் வைப்பவர்கள் மற்றும் மற்ற மதத்தைச் சார்ந்தவர்கள் உட்பட பெரும்பாலானோர் பரலோகத்திற்குப் பல வழிகள் இருப்பதாகச் சொல்கின்றனர். அவர்கள், நாம் பல பாதைகளில் பயணித்தாலும் எல்லோரும் ஒரே இடத்திற்குத்தான் பயணிக்கிறோம் என்றும் விளக்குகிறார்கள். இது, கேட்பதற்கு நன்றாகத் தான் இருக்கிறது. ஆனால் வேதாகமம் அப்படிப் போதிப்பதில்லை.

" நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன் " என்று இயேசு சொன்னார் ( யோவா. 14:6 ). இயேசு கிறிஸ்து இங்கே வலியுறுத்திச் சொல்கிற காரியம் என்னவென்றால், பரலோகத்திற்கு ஒரேயொருவழி தான் இருக்கிறது. அந்தவழி நானே என்று தான் சொல்லுகிறார்.

பரலோகத்திற்குப் பல வழிகள் உண்டு என்று யார் சொன்னது? இயேசு கிறிஸ்து அப்படிச் சொல்லவில்லை. இந்தக் காரியத்தைக் குறித்து வேதாகமம் என்ன சொல்லுகிறதென்பதை அறிந்தவர்களும் அப்படிச் சொல்லவில்லை. பரலோகத்திற்குப் பலவழிகள் உண்டு என்று சொல்பவர்கள் வேத வாக்கியங்களில் காணப்படாத உபதேசங்களை நம்புகிறவர்களும், கிறிஸ்தவம் அல்லாத மற்ற மதங்களில் நம்பிக்கை வைத்திருப்பவர்களும் தான்.

ஒரு சந்தர்ப்பத்தில் இயேசு கிறிஸ்து, " **மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், ஆட்டுத் தொழுவத்துக்குள் வாசல்வழியாய் பிரவேசியாமல், வேறுவழியாய் ஏறுகிறவன் கள்ளனும் கொள்ளைக்காரனுமாயிருக்கிறான்** ( யோவா 10:1 ) என்றார். நான் அப்படிச் சொல்லவில்லை. ஆனால், கிறிஸ்து அப்படிச் சொல்லியிருக்கிறாரே. அவரே பரலோகத்திற்கு வழியாக இருக்கிறார். வேறுவழியாய் ஏறுகிறவன் கள்ளனும் கொள்ளைக்காரனுமாயிருக்கிறான் என்று சொன்னவரும் அவரே. ஏன் அப்படிச் சொன்னார்? ஏனென்றால்,

அந்த நபர் கிறிஸ்து அங்கீகரிக்காத மாற்று வழியை பின்பற்ற முயற்சி செய்கிறார் என்பதால்.

இவ்வுலகில் ஒரு குறிப்பிட்ட இடத்தை அடையப் பல வழிகளில் நாம் பயணிக்க முடியும் என்பது உண்மையாயிருக்கிறபடியால் பெரும்பாலான மக்கள் இதே கருத்தை ஆவிக்குரிய காரியங்களுக்கும் பொருத்திப் பார்க்கின் றனர். ஒரு குறிப்பிட்ட பட்டணத்துக்குச் செல்லும் பல பாதைகளைப் பற்றி யோசிக்கும்போது, நீங்கள் ஒரே பாதையில் மட்டும் தான் பயணிக்கும்படி பணிக்கப்பட்டிருக்கிறீர்கள் என்று வைத்துக்கொள்ளுங்கள். அப்படிப்பட்ட சூழ்நிலையில் நீங்கள் உங்கள் முதலாளியைப் பிரியப்படுத்த வேண்டு மென்றால் அந்த ஒரே பாதையில் மட்டும் தான் பயணிக்க முடியும். நீங்கள் வேறு பாதையில் பயணித்தால் உங்கள் முதலாளியின் விருப்பத்திற்கெதிராக நடப்பது மட்டுமல்லாமல் இறுதியில் பலனையும் இழந்துபோவீர்கள்.

ஆவிக்குரிய ராஜ்யத்திலும் இது உண்மையாயிருக்கிறது. கிறிஸ்து மாத்திரமே வழியாயிருக்கிறார். மாறாக எந்தவொரு மதமும் இரட்சகரையும் தருவதில்லை, பாவமன்னிப்பையும் தருவதில்லை. கிறிஸ்துமாத்திரமே வழியாக இருக்கிறபடியால், அவர் மனிதர்கள் மத்தியில் வாழும்படியாகவும். சிலுவையில் மரிக்கும்படியாகவும் அடக்கம்பண்ணும்படியாகவும், உயிர்த் தெழும்படியாகவும். நம் பாவங்களுக்காக கிரயம் செலுத்தும்படியாகவும், இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து அவருக்குக் கீழ்ப்படிகிற யாவரையும் தேவனோடு ஒப்புரவாக்கும்ப டியாகவும் இவ்வுலகத்திற்கு வந்தார். இயேசு கிறிஸ்து இத்தகைய கிரயத்தைச் செலுத்தியிருக்கிறபடியால், தாம் இரட்சித்து பரலோகத்திற்கு அழைத்துச் செல்லப்படுகிறவர்கள் இன்னின்ன பிரகாரமாகச் செய்ய வேண்டும் என்று சொல்ல எல்லா உரிமையும் அவருக்கு உண்டு. இந்த விஷயத்தில் பல வழிகள் இல்லை. ஒரே வழிதான் உண்டு. அந்த வழி இயேசுவே!



வேதவாக்கியங்களின்படி நமக்கு இரட்சிப்பைக் கொண்டுவர என்ன வழியை வைத்திருக்கிறார்? முதலாவது, " ஆகையால், நீங்கள் உங்கள் பாவங்க ளில் சாவீர்கள் என்று உங்களுக்குச் சொன்னேன்; நானே அவர் என்று நீங்கள் **விசுவாசியாவிட்டால்** உங்கள் பாவங்களிலே சாவீர்கள் " ( யோவா. 8:24 ) என்று அவர் தெளிவாகச் சொல்லியிருக்கிறார். ஒருவர் இரட்சிக்கப்பட வேறென்ன அவசியமாயிருக்கிறது?

**" நீங்கள் மனந்திரும்பாமற் போனால் எல்லாரும் அப்படியே கெட்டுப்போவீர்கள் "** (லூக். 13:3 ). இரட்சிக்கப்பட விரும்புகிறவர்களுக்கு வேறு ஏதாவது அவசியப்படுகிறதா? " மனுஷர் முன்பாக என்னை **அறிக்கை பண்ணுகிறவன்** எவனோ அவனை நானும் பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் முன்பாக அறிக்கை பண்ணுவேன் " ( மத். 10:30 ). கிறிஸ்துவின் மரணத்தின்போது சிந்தப்பட்ட இரத்தம் நம் பாவங்களுக்கான கிரயத்தைச் செலுத்தியது. நம் பாவங்கள் மன்னிக்கப்படும்படி அந்த இரத்தத்தோடு எப்படி நாம் தொடர்பை ஏற்படுத்த முடியும் ? " **கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா? மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரி லிருந்து எழுப்பப்பட்டது போல நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்துகொள்ளும்படிக்கு, அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனேகூட அடக்கம் பண்ணப்பட்டோம் "** ( ரோமர் 6:3,4 ; அப். 2:47 ). ஞானஸ்நானம் பெற்றவர் சம்பந்தமாக இவ்விதம் சொல்லப்பட்டிருகிறது, " இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அனுதினமும் **சபையிலே** சேர்த்துக்கொண்டு வந்தார் " என்று.

எபேசியர் 4:4,5 ம் வசனங்களில், ஒரே தேவன், ஒரே கர்த்தர், ஒரே ஆவி, ஒரே விசுவாசம், ஒரே ஞானஸ்நானம், ஒரே சரீரம் மற்றும் ஒரே நம்பிக்கையைப் பற்றிப் பேசுகிறது. ஆராதிப்பதற்கும் ஒரே வழிதான் உண்டு. வாழ்வதற்கும் ஒரே வழிதான் உண்டு. அதாவது, மரணபரியந்தம் தேவனுக்கு உண்மையாயிருப்பது தான் அந்த ஒரே வழி ( யோவா. 4:24; வெளி.2:10 ). அதே போல் ஒரே நியாயத்தீர்ப்பும், ஒரே பரலோகமும், ஒரே நரகமும் உண்டு ( எபி. 9:27; மத். 25:46 ) இவைகளெல்லாம் உண்மையாயிருக்க பரலோகம் போவதற்கு ஏன் பல வழிகள் இருக்க வேண்டும்? பரலோகம் போவதற்கு ஒரு வழிக்குமேல் இருப்பது சாத்தியமா ?

இயேசு கிறிஸ்து, " **கேட்டுக்குப்போகிற வாசல் விரிவும் வழி விசாலமுமாயிருக்கிறது ; அதின் வழியாய்ப் பிரவேசிக்கிறவர்கள் அநேகர்; ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமும் வழி நெருக்கமுமாயிருக்கிறது; அதைக் கண்டுபிடிக்கிறவர்கள் சிலர்** ( மத். 7:13,14 ) என்று சொன்னார்.

நீங்கள் எந்த வழியில் பயணிக்கிறீர்கள்? கிறிஸ்து தான் உங்கள் வழியாய் இருக்கவேண்டுமென்று நாங்கள் வலியுறுத்துகிறோம். அந்த வழிதான் நம்மை இவ்வுலகத்திலிருந்து பரலோகத்திற்கு அழைத்துச் சென்று தேவனோடு ஒப்புரவாக்கி என்றென்றும் வாழச் செய்யும்!!

✞

# கிறிஸ்துவை சிலுவையில் அறைந்தது எது?

# What Crucified Christ?

P.C. Philemon Rajah

**1.** யார் கிறிஸ்துவை சிலுவையில் அறைந்தது? என்ற கேள்வி,

அறிவு சார் மக்களுக்கானது. அவரை அறைந்தவர்கள் மரித்துப் போய் விட்டார்கள். எது கிறிஸ்துவை சிலுவையில் அறைந்துது? என்ற கேள்வி தான் மிகவும் பொருத்தமான கேள்வி. ஏனெனில் இயேசு கிறிஸ்துவை சிலுவையில் அறைய காரணமாகிய பாவங்கள் இன்றும் உயிருள்ளதாய் இருக்கிறது.

நாம் செய்யும் பாவங்களினால், இன்றும் கிறிஸ்துவாகிய தேவகுமாரனை சிலுவையில் அறைவதற்கு சாத்தியமுள்ளது (எபி 6:6).

இயேசுவின் எதிரிகள் அவரை சிலுவையில் அறைந்தனர்; ஆனால், எப்படிப்பட்ட குணங்கள் அல்லது எது அவர்களை அப்படி செய்ய வைத்தது.

**பொறாமை :** இது, மாம்சத்தின் செயல் ஆகும் ( கலா 5:19-21 ). பொறாமையினாலே ஒப்புக்கொடுத்தார்கள் என்று பிலாத்து அறிவான் ( மத் 27:17).

பொறாமை என்பது அதிருப்தியினால் உண்டாகும் உணர்வு ஆகும்.

அன்புக்கு பொறாமையில்லை (1 கொரி 13:4)

பொறாமைப்படும் நபர் பாவம் செய்கிறார்.

யோசேப்பின் உடன் பிறந்தவர்கள் இதற்குச் சரியான உதாரணம் (ஆதி 37).

சவுல் ராஜா ( 1 சாமு 16 ), மூத்த குமாரன் ( லூக் 15 ) இன்னும் நிறைய நபர் களையும் உதாரணமாகச் சொல்லலாம்.

**பேராசை :** இயேசுவை சிலுவையில் அறைந்ததற்கு பேராசையும் காரணம்.

பேராசை கொண்ட ( Greed ) யூதாஸ், யூதமததலைவர்களின் கூட்டுச்சதியில் சேர்ந்து, ஆண்டவர் இயேசுவை விற்றுப்போட்டான் ( மத் 26:14-16).

பணத்திற்காக எதையும் செய்வோர் எப்பொழுதுமே இவ்வுலகில் இருப்பது ஆச்சரியமானதல்ல.

இப்படி தனக்குப் பணம் வந்தால் போதும், என் விருப்பம் நிறைவேறினால் போதும், எனக்கு பணம் வரும் வழி எதையும் அழித்துவிடக் கூடாது என்று சிறிது அளவு கூட கவலைபடாதோர் ஆகிய பலர் இன்றும் வாழ்கின்றனர்.

( உ.ம் ) பிராந்தி, சாராய வியாபாரிகள், போதைமருந்து கொடுத்து தீமை செய்வோர், பரத்தையர் ( விபசாரம் செய்வோர் ) பற்றிய படங்கள், மனிதர்கள் மறைவிடத்தில் செய்யும் உறவுகளை பிரபல்யப்படுத்துவோர், பொய்கூறுவோர், திருடுவோர், ஏமாற்றுகிறோம் என்று தெரிந்தும் அதைச் செய்வோர் எல்லாரும் பேராசை கொள்வோர் தான்

1. தீமோ 6:10 " பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது; சிலர் அதை இச்சித்து, விசுவாசத்தைவிட்டு வழுவி, அநேக வேதனைகளாலே தங்களை உருவக் குத்திக்கொண்டிருக்கிறார்கள் ".

**அறியாமை :**

அறியாமை கிறிஸ்துவை சிலுவையில் அறைந்தது :

பேதுரு கூறினார் : 'சகோதரரே, நீங்களும் உங்கள் அதிகாரிகளும் அறியாமையினாலே இதைச்செய்தீர்களென்று அறிந்திருக்கிறேன்' (அப் 3:17).

1 கொரி 2:8 ' அதை இப்பிரபஞ்சத்துப் பிரபுக்களில் ஒருவனும் அறியவில்லை : அறிந்தார்களானால், மகிமையின் கர்த்தரை அவர்கள் சிலுவையில் அறையமாட்டார்களே '.

அறியாமையை ஒரு சாக்குபோக்காகக் கருத முடியாது.

அப் 17:30 அறியாமையுள்ள காலங்களைத் தேவன் காணாதவர் போலிருந்தார்; இப்பொழுதோ மனந்திரும்ப வேண்டுமென்று எங்குமுள்ள மனுஷரெல்லாருக்கும் கட்டளையிடுகிறார்.

**கோழைத்தனம் :** இதுவும் இயேசுவை சிலுவையில் அறைந்தது :

1. மத் 26:56 " சீஷர்களெல்லாரும் அவரைவிட்டு ஓடிப்போனார்கள் " இவர்கள் மறுதலித்து ஓடிப்போனார்கள்.

2. மத் 26:58 பேதுரு இயேசுவை தூரத்திலே பின் தொடர்ந்தான்.

3. பிலாத்து: மக்களின் தயவு வேண்டும் என்பதால், கைகழுவி இயேசுவை சிலுவைக்கு அறைய அனுப்பினான் (மத் 27:15-26).

ஜெப ஆலயத்தலைவர்கள் சிலர் இயேசுகிறிஸ்துவை விசுவாசித்தனர். ஆனாலும், அறிக்கையிடவில்லை (யோவா 12:42,43).

இப்படிப்பட்ட கோழைத்தனம், தைரியங் குறைவு, முடிவு எடுக்க முடியாமை ஆகியவையே கிறிஸ்துவை சிலுவையில் அறைய வைத்தது.

இதை வாசிக்கிற நாம் மேற்சொன்ன பாவங்களை நமது வாழ்விலிருந்து நீக்கி, சுத்தம் செய்வோம்.

பொறாமை, பேராசை, அறியாமை, கோழைத்தனம் போன்றவைகள் நம் இருதயத்தில் இருக்கின்றதா? இருந்தால் நாம் மீண்டும் அவரை சிலுவையில் அடிக்கிறோம்.

நிச்சயமாக, தேவனுடைய ஒரே பேரான குமாரனாகிய கிறிஸ்துவை சிலுவையில் அடிப்பதைவிட, இந்தத் தரமற்ற குணங்களை நம்மை விட்டு கழித்துவிடுவோம்.

தேவன் நம்மை அவர் வசனத்தில் வழிநடத்தி, ஆசீர்வதிப்பாராக !

✝

# நீங்களும் போய்விட மனதாயிருக்கிறீர்களோ?

## You also Want To Go Away?

B. Arjunan

இயேசுவானவர் ஒரு முறை கப்பர்நகூமிலுள்ள ஜெப ஆலயத்தில் உபதேசிக்கையில் அவருடைய சீஷர்களில் அநேகர் இது கடினமான உபதேசம் என்றார்கள். அதுமுதல் அவருடைய சீஷரில் அநேகர் அவருடனேகூட நடவாமல் பின்வாங்கிப் போனார்கள். ஆகையால் " **இயேசு பன்னிருவரையும் நோக்கி: நீங்களும் போய்விடமனதாயிருக்கிறீர்களோ** என்றார் " (யோவா 6:67). உபதேசம் அவர்களுக்குப் பிடித்தாற்போல் இல்லாதபடியால் இது கடினமான உபதேசம் என்று பின்வாங்கிப்போனார்கள். இன்றைக்கும் ஒவ்வொருக்குபிடிததாற்போல பிரசங்கியார்கள் பிரசங்கம் செய்தால் மிகவும் நன்றாயிருக்கிறது என்பார்கள். ஒரு நோயாளியை சுகப்படுத்துகிற வைத்தியன், நோயாளிக்கு பிடித்தார்ப்போல வைத்தியம் செய்தால் அந்த நோய் சுகமாகுமா? நோயாளி நோயாளியாக வேதானிருப்பான். அதைப்போல ஆண்டவர் இயேசுவின் உபதேசம் என்று சொன்னார்கள். ஆகையால், பன்னிருவரையும் நோக்கி நீங்களும் போய்விட மனதாயிருக்கிறீர்களோ என்று கேட்டார். சபைகளிலும், ஒரு குடும்பம் பின் வாங்கிப்போனால் அவர்களைப் பார்த்து மற்றவர்களும் பின்வாங்குகிறார்கள். சத்தியம் என்னசொல்லுகிறது, நாம் சத்தியத்தின்படி நடக்க என்ன செய்ய வேண்டும் என்று சிந்திப்பதில்லை. மேலான தேவனுடைய உபதேசங்களை சாப்பிடுவது எனக்கு கசப்பாக இருக்கிறது, ஆகையால் நான் அதை சாப்பிட மாட்டேன் என்று சொல்லுவதைப்போல இருக்கிறது. நாம் ஆவிக்குரிய நன்மை களைப் பெறவேண்டுமானால், ஆண்டவருடைய உபதேசத்தின்படி நடக்க நம்மை அர்ப்பணிக்கவேண்டுமானால் தவிர அவைகள் கடினமானவைகள் என்று சொல்லுவதோ, அதை யார் கேட்பார் என்று சொல்லுவதோ, தேவனுடைய மாபெரும் வல்லமையுள்ள வசனங்களை உதாசினப்படுத்துகிறதாயிருக்கிறது.

ஆண்டவர் இயேசு பன்னிரண்டு பேரையல்லாது 70 பேரை தெரிந்து கொண்டு தாம் போகும் சகல பட்டணங்களுக்கும் இடங்களுக்கும் அவர்களைத் தமக்கு முன்னே இரண்டிரண்டு பேராக அனுப்பினார். " சீஷரை நோக்கி: உங்க ளுக்குச் செவி கொடுக்கிறவன் எனக்குச் செவி கொடுக்கிறான். உங்களை அசட்

டைபண்ணுகிறவன் என்னை அசட்டைப்பண்ணுகிறான். என்னை அசட்டை பண்ணுகிறவன் என்னை அனுப்பினவரை அசட்மைபண்ணுகிறான் என்றார் " (லூக். 10 : 16). இந்த சீஷர்களை ஏற்றுக்கொண்டவர்கள் ஆசீர்வதிக்கப் பட்டார்கள். ஆண்டாவரால் அனுப்பப்பட்டவர்களுக்கு செவிகொடுக்கிறவன் அவருக்குச் செவிகொடுக்கிறான். ஆண்டவரை ஏற்றுக்கொள்வதும், அவருடைய சுத்த சுவிசேஷத்திற்கு தங்களை அர்ப்பணிப்பதும் மாபெரும் காரியமாயிருக்கிறது. உலகமுழுவதும் பொல்லாங்களுக்குள் கிடக்கிறது என்பதை நாம் அறிவோம். இப்படிப்பட்ட உலகத்தில் அவருடைய உபதேசத்தை ஏற்றுக்கொண்டு வரக் கூடிய வர்கள் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் என்றே சொல்ல வேண்டும். வேதமும் " ஒருவன் என் பிதாவின் அருளைப் பெறாவிட்டால் என்னிடத்திற்கு வர மாட்டான் என்று இதினிமித்தமே உங்களுக்குச் சொன்னேன் " என்று இயேசு சொல்லுகிறார் ( யோவா 6:65 ). இன்றைக்கு அநேகர் கர்த்தரிடம் வரவில்லை. அவருடைய அருளைப்பெறவில்லை என்றே சொல்லவேண்டும். தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவன் அவருடைய வசனங்களுக்குச் செவி கொடுக் கிறான். தேவளால் தெரிந்துகொள்ளப்படாதவன் அவருக்கு விரோதியாயிருக் கிறான். சிலர் கொஞ்சகாலம் வந்து நல்லவர்கள்போல நடித்து பின்பு பின்மாற்ற மடைகிறார்கள். இவர்களைப் பற்றி நாம் என்னசொல்வது. இவர்கள் தேவனால் முன்குறிக்கப்படவில்லை என்றே சொல்லவேண்டும். தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களாயிருந்திருப்பார்களேயானால் பின்வாங்கிப் போயிருக்க மாட்டார்களே.

நீங்களும் போய்விடமனதாயிருக்கிறீர்களோ என்று சீஷர்களைப் பார்த்து கர்த்தர் கேட்டவுடனே; சீமோன் பேதுரு: " அவருக்குப் பிரதியுத்தரமாக: ஆண்ட வரே, யாரிடத்தில் போவோம், நித்திய ஜீவவசனங்கள் உம்மிடத்தில் உண்டே. நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நாங்கள் விசுவாசித்தும் அறிந்தும் இருக்கிறோம் என்றான் " ( யோவா 6:68,69 ). அந்த சீஷனின் அறிக்கையைப் பார்த்தீர்களா? யாரிடத்தில் போவோம் என்று கேட்டான். நாம் இந்த உலகத்தில் இரட்சிக்கப்பட வேறு வழி இல்லை. ஒரு மனிதன் எனக்கு இந்த உலகத்தில் தண்ணீர் வேண்டாம். தேவன் உண்டாக்கின காய்கறிகள், நவதானி யங்கள், பழங்கள் ஒன்றும் வேண்டாம் என்று சொல்லி ஒதுக்கிவைத்திட முடியுமா? அதைப்போல நாம் எங்கே போகமுடியும். அவரால் நாம் வாழுகின் றோம். நமக்கு வேண்டிய நித்திய ஜீவத்தண்ணீரை கொடுக்கிறார். இஸ்ரவேலர் இந்த ஜீவத்தண்ணீலை விட்டுவிட்டார்கள் என்று கர்த்தருடைய வேதம் சொல்லு கிறது. அவர் கொடுக்கும் தண்ணீரைக் குடிக்கிறவனுக்கோ ஒருக்காலும் தாக முண்டாகாது. அவனுக்குள்ளே நித்திய காலமாய் ஊறுகிற நீர் ஊற்றாயிருக்கும்.

இவைகளைப் பெற்றுக்கொள்ள உங்களுக்குக் கடினமாயிருக்கிறதா? அல்லது கசப்பாயிருக்கிறதா? அல்லது கடினமான உபதேசமாயிருக்கிறதா? சிந்தியுங்கள். கர்த்தர் நமக்கு எப்பொழுதும் நல்லவராகவே இருக்கிறார். அவருடைய சிருஷ்டிகளைப் பார்க்கும்போது சொல்லிமுடியாத நன்மைகளை நமக்கு கொடுத்துக் கொண்டிருக்கிறது.

இப்படி நம்மை நேசிக்கும் கர்த்தர் ஒருவர் இருக்கும்போது அவருடைய வசனங்களுக்கு நாம் செவிகொடுத்து அவைகளுக்கு கீழ்ப்படிந்து நடக்கவேண்டியது நமது கடமையல்லவா? யோபு என்ற தாசனுக்கு வந்த பாடுகளைப் போல உலகத்தில் ஒருவருக்கும் வந்திருக்க வாய்ப்பு இல்லை. அவ்வளவு கஷ்டங்கள் வந்தபோதும் அவன் சொல்லுகிறான். " **அவர் என்னைக் கொன்றுபோட்டாலும், அவர்மேல் நம்பிக்கையாயிருப்பேன்; ஆனாலும் என் வழிகளை அவருக்கு முன்பாக ரூபகாரம்பண்ணுவேன்** " என்கிறான் ( யோபு 13:15). இப்படிப்பட்ட வார்த்தைகளை சொல்லுவது எளிது. ஆனால், அவனுடைய நிலைமையில் இருந்துகொண்டு இந்தவிதமான வார்த்தைகளை நம்மால் சொல்லமுடியுமா என்றால் நிச்சயமாக முடியாது என்றே சொல்லுவேன். ஏனென் றால், ஒரு மனிதனுக்கு உண்டான எல்லாம் பறிபோனபிறகும் அவன் உயிரோடு இருப்பதைக் காட்டில் சாவதே மேல் என்று எண்ணுவான் அல்லது தேவனை தூஷிக்க முற்படுவான். ஆனால் யோபு அந்தவிதமாக செய்யவில்லை. எல்லாமே போனாலும் அவர் அதாவது தேவன் என்னைக் கொன்றுபோட்டாலும் அவர்மேல் நம்பிக்கையாயிருப்பேன் என்று சொன்னான். ஆக, அவனுடைய நம்பிக்கை எப்படிப்பட்டதென்று பார்த்தீர்களா, அவனுடைய மனைவி இன்னும் நீ உயிரோடு இருப்பானேன் தேவனை தூஷித்து ஜீவனை விடும் என்றாள். பைத்தியக்காரி பேசுகிறது போல பேசுகிறாய். இவ்வளவு நாட்களாக தேவனி டத்தில் நம்மைகளைப் பெற்ற நாம் தீமைகளையும் பெறவேண்டாமோ வென்றான். யாருக்காவது தீமைகளை பெற விருப்பமா? யோபு கஷ்டத்தை ஏற்றுக்கொண்டு கர்த்தரை பின்பற்றுகிறதில் வல்லவனான்.

" என்னோடே இராதவன் எனக்கு விரோதியாயிருக்கிறான், என்னோடே சேர்க்காதவன் சிதறடிக்கிறான் " என்றார் (லூக் 11:23). ஆம், இன்று கர்த்தரோடிராதவர்கள் அவருக்கு விரோதமாயிருக்கிறார்கள். அவருடைய அன்பையும் அரவணைப்பையும் அறியாதவர்களாக இருந்துகொண்டு மேன்மேலும் கேடு உண்டாக்குகிறார்கள். இச்செய்தியை வாசித்துக்கொண்டிருக்கும் அன்பு வாசகரே, நீ அவரோடு இருக்கின்றாயா? அவர் உனக்காக இரத்தம் சிந்தினார். உம்மை பாவத்திலிருந்து மீட்கும்படியாக சிலுவையில் ஒப்புக்கொடுத்தார் என்பதை நீ அறிவாயா?

# அப்போஸ்தலப் பட்டம்

# Apostalic Title

E. Z. Selvanayagam

இன்றைக்கும் சிலர் தங்களை அப்போஸ்தலர்கள் என்று அழைத்துக் கொள்கின்றனர். வேறு சிலர், அதை ஏற்க மறுத்து, அப்போஸ்தலப் பட்டம் மனிதனுடைய விருப்பத்துக்கும் சௌகரியத்துக்கும் சூடிக் கொள்கிற விருது அன்று, அது தேவனுடைய கிருபை வரம், தமது சித்தத்தின்படியும் தேவைக்கேற்பவும் தேவனே பகிர்ந்து கொடுக்கிறார் என்கின்றனர். இதில் யார் சொல்வது சரி என்பதை வேதாகமத்தின் துணைகொண்டு கண்டுபிடிப்போம். என்னோடு கூட வாருங்கள்.

ஏனெனில் மார்க்க சம்பந்தமான காரியங்களுக்கு வேதாகமம் தான் உரைகல். " அப்போஸ்தலன் " என்று தமிழில் மொழி பெயர்க்கப்பட்டுள்ள சொல்லுக்கு மூல மொழியாகிய கிரேக்கத்தில் Apostolos என்ற சொல் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இச்சொல் புதிய ஏற்பாட்டில் சுமார் 80 இடங்களில் வருகிறது. வைத்தியன் லூக்காவும், அப்போஸ்தலன் பவுலும் மட்டும் சுமார் எழுபது முறை இச்சொல்லைப் பயன்படுத்தியிருக்கிறார்கள். இலக்கிய ரீதியில் பார்த்தால் அப்போஸ்தலன் என்ற சொல்லுக்கு " அனுப்பப்பட்டவர் " என்பது தான் உண்மையான பொருள். வேதாகமத்தில் இயேசு கிறிஸ்துவினால் ஏற்படுத்தப்பட்ட அப்போஸ்தலர்கள் தவிர வேறு சில நபர்களும் கூட அப்போஸ்தலன் என்று அர்த்தம் கொடுக்கும் சொற்களாலே அழைக்கப்பட்டிருக்கிறார்கள். ஒரு குறிப்பிட்ட பணியை நிறைவேற்றுவதற்காக சபை அனுப்பி வைக்கிற தூதர்களைக் கூட அப்போஸ்தலர் என்ற அர்த்தத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதற்கு எடுத்துக் காட்டாக பிலிப்புப் பட்டணத்து சபை அனுப்பி வைத்த எப்பாப்பீ ரோதீத்துவைச் சொல்லலாம் (பிலி 2:25). வேறு ஒரு இடத்தில் ஒரு சபை, தர்ம காரியத்துக்காகச் சேகரித்த பணத்தை வேறொரு சபையிலுள்ள ஏழைகளுக்குக் கொண்டு போய்ச் சேர்ப்பதற்காக அனுப்பி வைக்கிற நபர்களைக் கூட அப்போஸ்தலர் என்ற அர்த்தம் கொடுக்கும் ஸ்தானாபதி என்று குறிப்பிடுகிறது. (II கொரி 8:19-23).

எபிரெய நிருப ஆசியர் இயேசு கிறிஸ்துவையே கூட அப்போஸ்தலர் என்று குறிப்பிட்டிருக்கிறார். ( எபி. 3:1 ) ஏனெனில், அவர் தேவனால் பரலோகத்திலிருந்து பூலோகத்துக்கு அனுப்பப்பட்டார். அதுபோல இஸ்ரவேல் மக்களுக்குள் அனுப்பப்பட்ட ஊழியர்களைக் கூட அப்போஸ்தலர்கள் என்று குறிப்பிட்டிருக்கிறது. ( லூக்கா 11:49).

கர்த்தருடைய சகோதரராகிய யாக்கோபையும் ( கலா 1:19,2:9) பவுலின் கூட்டாளியாக இருந்த பர்னபாவையும் ( அப் 14:4-14 ) அன்றோனீக்கையும், யூனியாவையும் கூட அப்போஸ்தலர்கள் என்று அழைக்கிறது (ரோமர் (16:7)). அது அல்லாமல் சீலாவைக் கூட அப்போஸ்தலன் என்று பவுல் கூறுகிறாரா என்று சந்தேகம். (I தெச.2:6) பவுலின் எதிரிகள் கூட கள்ள அப்போஸ்தலர்கள் என்று வர்ணிக்கப்பட்டிருக்கிறார்கள். (II கொரி 11:13).

ஆனால், கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவால் தெரிந்து கொள்ளப்பட்ட அப்போஸ்தலர்கள் சில சிறப்புத் தகுதிகளின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்ட சிறப்புத் தொண்டர்கள். அவர்கள் சில சிறப்புப் பணிகளை நிறைவேற்றுவதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்.

**முதலாவதாக,** அவர்கள் இயேசு கிறிஸ்து விட்டுச்சென்ற மீட்புப் பணிகளை தொடர்ந்து செய்ய வேண்டியும் இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்கு சாட்சியாக இருக்கும்படியாகவும் ஏற்படுத்தப்பட்டவர்கள் ( யோவான் 15:16,27;அப் 1:8,22 2:32, 3:15;4:20,33:5:32;10:39 I யோவான் 1:1-4 ) இயேசு கிறிஸ்துவின் செயல்பாடுகளையும், உயிர்த்தெழுதலையும் அவர்கள் நேரடியாகக் கேட்டும் பார்த்தும் இருந்தார்கள்.

**இரண்டாவதாக** கிறிஸ்துவின் அப்போஸ்தலர்களை இயேசு கிறிஸ்து நேரடியாகத் தேர்வு செய்து கொண்டார் ( லூக்கா 6:13; அப் 1:2; 9:6; 22:16-18 கலா 1:1).

**மூன்றாவது** இந்த அப்போஸ்தலர்கள் இயேசுவின் போதனைகளைக் கூடவே இருந்து நேரடியாகக் கேட்டவர்கள். இப்படி அவர்கள் நேரடியாகக் கற்றுக் கொண்டது போக மீதியை அவரால் அனுப்பப்பட்ட பரிசுத்த ஆவியானவர் மூலமாகக் கற்றுக் கொண்டனர். (யோவான் 16:13; 14:26).

**நான்காவதாக** இந்த அப்போஸ்தலர்கள் ஒரு குறிப்பிட்ட பிராந்திய சபையில் மட்டுமல்ல; அனைத்துச் சபைகளிலும் செல்வாக்குப் பெற்றிருந்தார்கள். அவர்கள் சபையின் ஒரே தலைவராகிய இயேசு கிறிஸ்துவின் சித்தத்துக்குத் தங்களை முற்றிலும் ஒப்புக் கொடுத்து தங்கள் பணிகளைச் செய்தார்கள்.

(யோவான் 13:16, 30:14 :26; 16:12-15 அப் 2:42: I கொரி 4:17; 11:2, 23 14:37 II கொரி 13:10).

**ஐந்தாவதாக** அவர்கள் தாங்கள் கிறிஸ்துவின் அப்போஸ்தலர்கள் என்பதற்கும், தங்கள் செய்திகள் ஆவியினால் ஏவப்பட்டவை என்பதற்கும் ஆதாரமாக அநேக அற்புத அடையாளங்களைச் செய்து உறுதிப்படுத்தி னார்கள். (அப் 2:43 எபி 2:2-4 அப் 5:19; 12:6-9, 9-37-40 8:2-7).

**ஆறாவதாக** அப்போஸ்தலர்கள் மற்றவர்கள் மீது கை வைத்து அற்புதம் செய்யும் வரத்தை அளிக்கும் வல்லமை பெற்றிருந்தார்கள். (அப் 8; 14-18 19:1-6 ரோமர் 1:11; 2 தீமோ 1:6).

**ஏழாவதாக** பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகளைப் போல பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டு பரிசுத்த வேதாகமத்தின் சில நூல்களை எழுதினார்கள். எல்லா அப்போஸ்தலர்களுக்கும் இந்தப் பாக்கியம் கிடைக்காவிட்டாலும் ஒரு சிலருக்கு அந்தப் பாக்கியம் கிடைத்தது.

அதுவுமல்லாமல், இயேசுகிறிஸ்துவால் தெரிந்து கொள்ளப்பட்ட அப்போஸ தலர்கள் மிகவும் சிறப்பு நிலை பெற்றவர்கள். " புதிய வானத்தையும், புதிய பூமியை யும் பற்றி அப்போஸ்தலன் யோவான் கண்ட தரிசனத்தில் இஸ்ரவேலின் பனி ரெண்டு கோத்திரங்களின் பெயர்களை அதில் இருந்த பனிரெண்டு வாசல் களுக்கும், நகரத்தின் மதிலில் இருந்த பனிரெண்டு அஸ்திபாரக்கற்களுக்கும் ஆட்டுக் குட்டியானவருடைய பனிரெண்டு அப்போஸ்தலர்களின் பெயரும் பதிக்கப்பட்டி ருந்தன " என்கிறார் (வெளி 21:13,14).

இந்தப் பனிரெண்டு பேர்களில் யூதாஸ் என்பவர் தன்னுடைய இழிமதியால் அகால மரணம் அடைந்ததினால் அந்த மாபெரும் பதவியை இழந்து போனான். ஆதலால், அந்த ஸ்தானத்தை நிரப்ப வேண்டிய அவசியம் நேர்ந்தபடியால் அவருடைய ஸ்தானத்தில் **மத்தியாஸ்** என்பவர் தேர்ந்தெடுக்கப்பட்டு மீதியுள்ள பதினொரு அப்போஸ்தலர்களுடன் சேர்த்துக் கொள்ளப்பட்டான். (அப் 1:26; 6:2 ) யூதாஸ் காரியோத்துக்குப் பதிலாக மத்தியாஸ் தேர்வு செய்யப்பட்டது போல ஒவ்வொரு அப்போஸ்தலருடைய மரணத்துக்கும் பிறகு அவர்களுக்குப் பதிலாக வாரிசுகள் தேர்ந்தெடுக்கப்படும் என்று நினைத்து விடக்கூடாது. ஏனெனில் (I) மத்தியா தேர்வு செய்யப்பட்டது ஒரு தீர்க்கதரிசன நிறைவேறல் ( அப் 1:20 சங் 69:25; 109:8 ( காண்க ) (II) யூதாஸ்காரியோத்தின் மரணத்தினால் ஏற்பட்ட காலி ஸ்தானம், யூதாஸ்காரியோத்தின் மரணத்தினால் ஏற்பட்டது என்பதை விட அவனுடைய துரோகத்தின் விளைவாக பறித்துக் கொள்ளப்பட்டது என்பதே

உண்மை (அப் 1:24). ஆகவே, அப்போஸ்தலர்கள் பனிரெண்டு பேர் என்கிற நிலையை உறுதி செய்யும் வகையில் ஸ்காரியோத்தின் இழப்பை ஈடு செய்ய வேண்டியிருந்தது மற்ற அப்போஸ்தலர்களுக்குப் பொருந்தாது. (III) தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய ஒருவர் இயேசுகிறிஸ்து ஊழியம் செய்த நாட்களில் அவரோடே கூட இருந்திருக்க வேண்டும். (அப். 1: 22 - 22) (IV) மத்தியாவுக்கு, இயேசு கிறிஸ்துவின் ஊழிய நாட்களில் கூடவே இருந்தது மட்டும் அந்தத் தகுதியைப் பெற்றுத் தந்து விட வில்லை. அப்படிப் பார்த்தால் யுஸ்து என்னும் மறுநாமமுள்ள பர்சபாவுக்கும் கூட அந்தத் தகுதி இருந்தது. ஆனால், அப்போஸ்தலன் ஆக முடியவில்லையே (அப் 1:23). மேலும், இயேசு தாமே தம்முடைய ஊழிய நாட்களில் தம்முடைய அப்போஸ்தலர்களைத் தெரிந்துக் கொண்டார். மத்தியாஸ் விஷயத்திலும் பெரிய வித்தியாசம் ஒன்றுமில்லை. இங்கேயும் சீஷர்கள் வேண்டிக் கொண்டதென்னமோ உண்மை. ஆனால் தெரிந்தெடுத்தது கர்த்தர்தான். (அப் 1:23-26).

அப்படியானால், பவுல், அப்போஸ்தலன் ஆனது எப்படி என்று உங்களுக்கு ஒரு கேள்வி எழலாம். சவுல் என்னும் மறு நாமமுள்ள பவுலின் வரலாறு மிகவும் வித்தியாசமானது. " மனிதராலுமல்ல, மனிதர் மூலமாயுமல்ல இயேசு கிறிஸ்துவே அவரை நேரடியாகத் தெரிந்து கொண்டார் ( கலா 1:1 ) அவர் கர்த்தரைத் தரிசித்தார் (அப் 22-14-15) (அப் 26:16-17 I கொரி 9:11) அவருக்கு சுவிசேஷம் வெளிப்படுத்தப்பட்டது ( I கொரி 15;1-3 : கல 1:11,12).

சவுல் என்கிற பவுலுக்கு இயேசு கிறிஸ்து நேரடியாக போதனை செய்தார். சுவிசேஷத்தை வெளிப்படுத்தினார் என்பதை ஏற்றுக் கொள்கிறீர்களே, நாங்கள் சொல்வதை மட்டும் ஏன் சந்தேகிக்கிறீர்கள்? என்று அங்கலாய்க்கிறார், நவீன கால அப்போஸ்தலர் ஒருவர். ஐயா, நீங்கள் சொல்வதையும், ஏற்றுக் கொள்கிறோம். ஆனால் ஒரு நிபந்தனை. பவுல் செய்வதைப் போல நீங்களும் செய்து காட்டுங்கள். அவர் பல்வேறு விதமான அற்புத அடையாளங்களைச் செய்து, தான் எந்த அப்போஸ்தலனுக்கும் குறைந்தவன் அல்ல என்று நிரூபித்துக் காட்டினார் (ரோமர் 15:18; II கொரி 2:12; II கொரி 11:5; அப் 14:10; 19:11-12 ) அவர் ஆவியினால் ஏவப்பட்டு, மற்றஎவரைக் காட்டிலும் அதிகமாக புதிய ஏற்பாட்டு நூல்களை எழுதியிருக்கிறார். அந்நிய பாஷை வரத்தை அதிக அளவில் பெற்றிருந்தார் ( I கொரி 14:8 ) மரித்தப் போனவனை உயிரோடே எழுப்பினார் அப் 20:9-12 விஷப் பாம்பு கடித்தும் சேதம் ஒன்றும் ஏற்படாமல் சுகமாக இருந்தார். (அப் 28:6) நீங்களும் அப்படிச் செய்து காட்ட முடியுமானால் உங்களையும் ஏற்றுக் கொள்ளத் தயார், செய்வீர்களா?

✝

# " ஜீவனை விரும்பி நல்ல நாட்களை... "

# " He who would love life... "

Bro. Benny Martin

பிரியமான சத்தியத்தின் குரல் வாசகர்களே! உங்கள் யாவருக்கும் நசரேயனாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். பொதுவாகவே, நாமெல்லாரும் தேவன் நமக்கு ஒவ்வொரு புது வருடத்தைத் தரும்போதும் அடுத்த வருடத்தையும் நாம் காணும்படி அவர் நமக்கு ஜீவனைத் தரவேண்டும் என்று வாஞ்சிக்கிறோம், ஏங்குகிறோம். வேறு விதமாகச் சொன்னால் நாம் இவ்வுலகில் அதிக ஆண்டுகள் வாழ ஆசைப் படுகிறோம். அப்படி ஜீவனை விரும்பி, நல்ல நாட்களை காணவேண்டு மென்றி ருப்பதை வேதாகமம் தவறு என்றோ பாவம் என்றோ கூறுவதில்லை, மாறாக, அதற்கென்று தேவனால் கட்டளையிடப்பட்டிருக்கிற காரியங்களைச் செய்ய வேண்டுமென்று தான் வலியுறுத்துகிறது. புதிய ஏற்பாட்டில் அப்போஸ்தல னாகிய பேதுரு இது பற்றிச் சொல்லும் போது, ஜீவனை விரும்பி, நல்ல நாட் களைக் காண வேண்டுமென்றிருக்கிறவன் பொல்லாப்புக்குத்தன் நாவையும், கபடத்துக்குத்தன் உதடுகளையும் விலக்கிக்காத்து, பொல்லாப்பை விட்டு நீங்கி நன்மைசெய்து, சமாதானத்தைத் தேடி, அதைப்பின் தொடரக் கடவன் என்று புத்திச் சொல்கிறார் (1பேதுரு 3:10,11).

பேதுருவால் மேற்கோள் காட்டப்பட்டிருக்கிற, இந்த சிந்தையை ஈர்க்கும் வாக்கியத்தை கவனித்துக் கூடுதலான தகவல்களுக்காக அதை ஆராய்ச்சி செய்யாமல் யார் தான் கடந்து போவார்? வேறுவிதமாகச் சொன்னால் அதிக நாட்கள் வாழ யார் தான் விரும்புவதில்லை? நல்ல நாட்களை யார் தான் விரும்பு வதில்லை? இந்த பாழாய்ப் போன உலகில் பெரும்பாலும் நாம் பலவிதமான பாடுகள் படுகிறோம், பல்வேறுபட்ட நெருக்கடிகளைச் சந்திக்கிறோம், அவைகளின் வழியாய் கடந்து போகிறோம். பிரியமானவர்களே, இன்றைய நாட்களில் வாலிபர்கள், வயதானவர்கள் என்று எல்லோருமேஆயுசு நாட்களை அதிகரிக்க என்னவெல்லாம் செய்ய முடியுமோ அதையெல்லாம் செய்கிறார்கள். சமச்சீரான உணவு, உடற்பயிற்சி, தூக்கம் என்று எல்லாவற்றிலும் கவனம் செலுத்தினாலும் கவலை என்னும் அழையா விருந்தாளி அதிக ஆயுசு நாட்கள்

என்கின்ற கனவைக் கலைத்து விடுகிறது. அப்படியென்றால் ஆயுசு நாட்களை அதிகப்படுத்துவதற்கு என்ன தான் வழி என்கிற மாபெரும் கேள்விக்கு தீர்வாய், அருமருந்தாய் அமைகிறது 1 பேதுரு 3:10,11 வசனங்கள்.

I **ஜீவனை விரும்புதல்**

இவ்வுலகில் பலர் ஜீவனை விரும்பாமல் இருப்பது துரதிஷ்ட வசமானது. வருடந்தோறும் லட்சக்கணக்கான மக்கள் தற்கொலையினால் தங்கள் உயிரை மாய்த்துக் கொள்கிறார்கள். மற்றவர்கள் அந்த அளவுக்குப் போகாவிட்டாலும் கூட வாழ்க்கையை வெறுத்தவர்களாய், மகிழ்ச்சியற்றவர்களாய் இருக்கி றார்கள்.இதில் வேதனைப்பட வேண்டிய, வெட்கப்பட வேண்டிய கரியம் என்ன வென்றால் வாழ்க்கையே வெறுத்துவிட்டது என்று சொல்கிற கூட்டத்தில் தங்க ளைக் கிறஸ்தவர்கள் என்று சொல்லிக் கொள்ளுகிறவர்களும் இருக்கிறார்கள். பிரியமான வாலிபக் கண்மணிகளே! இப்போது நாம் ஜீவனை விரும்ப எது காரணிகளாக அமைகின்றன அல்லது எது நம்மை ஊக்கப்படுத்துகின்றன என்று பார்ப்போம்?

முதலாவது, நாம் தேவ சாயலில் படைக்கப்பட்டிருக்கிறோம் (ஆதி. 1:27); அவருக்குள் நாம் பிழைக்கிறோம், அசைகிறோம், இருக்கிறோம் (அப். 17:28). ஆகவே, ஜீவனை விரும்ப முடியும்.

இரண்டாவது, நம் கண்ணீரைத் துடைக்க, நம்மை விசாரிக்க (1 பேதுரு 5:7) நம் ஜெபங்களுக்கு பதில் கொடுக்க தேவன் இருப்பதால் நாம் ஜீவனை விரும்ப முடியும்.

மூன்றாவது, நாம் மரணத்தைத் தழுவும்போது கூட ஜீவனை விரும்ப முடியும். ஏனென்றால், நம் சரீரம் ஒரு விதையைப் போல் மண்ணில் விதைக்கப்பட்டு (1தெச. 4:13) கண்ணீரில்லாத கவலையில்லாத தேசத்தில் (வெளி. 21:4) நம் ஜனத்தாரோடே சேர்க்கப்படும் அந்த நாளை எதிர்நோக்க முடியும் (ஆதி. 25:8).

எனவே, நாம் ஏன் இந்தப் பூமியில் பிறந்தோம் என்று வாழ்க்கையே வெறுத்தவர்களாக நாம் பேசாமல் தேவன் நமக்குக் கொடுத்திருக்கிற ஜீவனை எண்ணி, வாழ்க்கையின் ஒவ்வொரு நொடி யையும் ரசித்து, ருசித்து கர்த்தருக்குள் வாழ கற்றுக் கொள்ள வேண்டும். தேவ னுக்கு உடையவை களாகிய நம் சரீரத்தினாலும், நம் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்த வேண்டும் (1 கொரி. 6:20) பூமிக்குரிய கூடார மாகிய நம் சரீரம் அழிந்து போனாலும், பரலோகத்தில் நமக்கு நித்திய வீடு உண்டு என்பதை உணர்ந்தவர்களாய் வாழக் கற்றுக் கொள்ள வேண்டும் (2 கொரி. 5:12).

II **நல்ல நாட்களைக் காணுதல்**

நல்ல நாட்கள் என்றால் என்ன? கெட்ட நாட்கள் என்றால் என்ன? பல வாலிபர்கள் வெளிப்புற சூழ்நிலைகளை அளவுகோலாக எடுத்துக் கொண்டு இது நல்லநாள், அது கெட்ட நாள் என்று தீர்மானித்துக் கொள்கிறார்கள். உதாரணமாக, அவர்கள் வாழ்க்கையில் எதையாவது சாதித்து விட்டாலோ, புதிய உயரங்களைத் தொட்டாலோ அல்லது செழிப்பான காலங்கள் வந்தாலோ அவைகளை நல்ல நாட்களென்றும், பொருளாதார மந்த நிலையில் இருக்கும் போதோ, வியாதியால் அவதிப்படும்போதோ அந்த நாட்களைக் கெட்ட நாட்களென்றும் வெளிப்புறமான சூழ்நிலைகளை அடிப்படையாக வைத்தே நாட்களைக் கணக்கிடுகிறார்கள்.

ஆனால், நாம் வேதாகமத்தில் பார்க்கும்போது பவுலும், சீலாவும் அடிக்கப்பட்டு சிறைச்சாலையில் அடைக்கப்பட்டபோதும் நடுஇராத்திரியிலே அவர்கள் ஜெபம் பண்ணி, சந்தோஷமாய் தேவனை எப்படித் துதித்துப் பாடி னார்கள் (அப். 16:25). எப்படி அவர்களால் அப்படிச் செய்ய முடிந்தது? பவுலுக்கும், சீலாவுக்கும் அது நல்ல நாளாகத்தான் இருந்திருக்கிறது. நமக்கு இப்படி ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருந்தால் வாழ்க்கையிலேயே மிகவும் மோசமான அல்லது கெட்ட நாள் என்று முத்திரை குத்தியிருப்போம். எனவே, மகிழ்ச்சியான நல்ல நாட்களைத் தீர்மானிப்பது வெளிப்புறமான சூழ்நிலைகள் அல்ல, நம் மனநிலைதான். தேவன் தரும் எல்லா நாட்களையும் நாம் நல்ல நாட்க ளாகவே எடுத்துக் கொண்டு அவருக்கு நன்றி சொல்ல வேண்டும். எந்த ஒரு மனிதனும் நரகத்தில் ஒரு நாளைக் கழிக்கும் வரை உண்மையாகவே கெட்ட நாள் வாழ்க்கையில் எது என்பதை அறிந்து கொள்ளமாட்டான்.

III **தீர்வு**

தேவதாசனாகிய பேதுரு ஜீவனை விரும்பி, நல்ல நாட்களைக் காண வேண்டுமென்றிருக்கிறவன் என்ன செய்ய வேண்டும் என்கிற கேள்விக்குப் பதிலாக அவைகளுக்குத் தீர்வாக (1 பேதுரு 3:10,11) வசனங்களில் விளக்கம் கொடுத்துள்ளார். **முதலாவது**, ஒரு மனிதன் பொல்லாப்புக்குத்தன் நாவை விலக்கிக் காத்துக் கொள்ள வேண்டுமென்று சொல்கிறார். நாவு என்பது ஒரு சிறிய உறுப்பாக இருந்து கொண்டு எந்த ஒரு பெரிய மனிதனையும் கட்டுப் படுத்துகிறது (யாக். 3:5 - 8). அது அடங்காத பொல்லாங்குள்ளதும் தேவன் வெறுக்கிற ஏழு காரியங்களில் மூன்றைக் கொண்டதாகவும் இருக்கிறது. அதாவது, நாவு சம்மந்தமாக இருக்கிறது பொய் நாவு அபத்தம் பேசும் பொய்ச் சாட்சி, சகோதரருக்குள்ளே விரோதத்தை உண்டு பண்ணுதல் போன்ற வைகளாகும் (நீதி. 6:17,19). இதுமட்டுமல்லாமல் பெருமை, முகஸ்துதி, வம்

பளப்பு, தவறான தகவல், அவதூறு போன்ற காரியங்களிலும் நாவின் பங்க ளிப்பு அதிகமாயிருக்கிறது. பிரியமானவர்களே, இதுகாறும் நாம் நாவை அடக்கு வதைப் பற்றிப் பார்த்தோம்.

**அடுத்ததாக**, ஜீவனை விரும்பி நல்ல நாட்களைக் காணவேண்டு மென்றிருக்கிறவன் பொல்லாப்பை விட்டு நீங்கி, நன்மைசெய்ய வேண்டும். பலர், அதிலும் குறிப்பாக நாங்களும் தேவனுடைய பிள்ளைகள் என்று சொல்லிக் கொள்பவர்கள் கூட இந்த அடிப்படை உண்மையைப் புரிந்து கொள்ள சிரமப்படுவது ஆச்சரியமாக இருக்கிறது. தேவன் தம்முடைய பிள்ளைகள் பொல் லாப்பை, தீமையை வெறுக்க வேண்டும் என்று எதிர் பார்க்கிறார் (நீதி. 8:13). அதே போல் நாம் நன்மையானவைகளை சக மனிதர்களுக்குச் செய்யும் போது தேவ னிடத்திலிருந்து நன்மையை எதிர்பார்க்க முடியும். நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நன்மைசெய்கிறவராய் இவ்வுலகில் சுற்றித்திரிந்தார், அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றும் நாமும் நன்மையையே செய்ய வேண்டும். **கடைசியாக**, பேதுரு ஆசிரியர் ஜீவனை விரும்பி, நல்ல நாட்களைக் காண வேண்டுமென்றிருக்கிறவன் சமாதானத்தைத் தேடி, அதைப்பின் தொடரக் கடவன் என்று சொல்கிறார். இன்றைய நாட்களில் பலர் சண்டை பண்ணுகிற வர்களாக, அதையே பொழுதுபோக்காகக் கொண்டிருப்பவர்களாக இருப்பதை நாம் பார்க்கிறோம். அவர்களிடம் சமாதானம் என்பது ஒரு பேச்சுக்குக் கூட இருக் காது. ஆனால், நாம் சமாதானத்தைத் தேடி அதைப் பின் தொடர வேண்டு மென்று தேவனால் கட்டளையிடப்பட்டிருக்கிறோம். இந்த காரியத்தில் நாம் உல கத்தாருக்கு வழிகாட்ட வேண்டும், முன்னுதாரணமாகத் திகழ வேண்டும். ஏனென்றால், சமாதானம் பண்ணுகிற நாம் தான் பாக்கியவான் களாக, தேவனுடைய பிள்ளைகளாக இருக்கிறோம் (மத். 5:9).

பிரியமானவர்களே! நம்மெல்லோருக்கும் இவ்வுலகில் அதிக நாட்கள் வாழ வேண்டுமென்றும், வாழும்போது நல்ல நாட்களைக் காண வேண்டுமென்றும் தணியாத அவா இருக்கும். அவை களை நமதுடையதாக்கிக் கொள்ள எத்தனை யோ சரீர முயற்சிகளை நாம் எடுக்கிறோம். சரீர முயற்சி அற்ப பிரயோஜன முள்ளது; தேவ பக்தியானது இந்த ஜீவனுக்கும் வாக்குத்தத்தமுள்ள தாகையால் எல்லாவற்றிலும் பிரயோஜனமுள்ளது என்று தேவன் சொல்கிற படியால் (1 தீமோத். 4:8) சரீர முயற்சியை விட்டு விட்டு பொல்லாப்புக்கு நம் நாவையும், கபடத்துக்கு நம் உதடுகளையும் விலக்கிக்காத்து, பொல்லப்பை விட்டு நீங்கி, நன்மைசெய்து, சமாதானத்தைத் தேடி, அதைப்பின் தொடரும் போது தேவன் நம் ஆயுசு நாட்களை பெருகச் செய்வார், இவ்வுலகிலும் நல்ல நாட்களை காணச் செய்வார், வரும் உலகத்திலும் நல்ல நாட்களை காணும் படி செய்வார்.

✞

# சிங்கமும், ஆட்டுக்குட்டியும்

# The Lion And The Lamb

Hugo Mc Cord



**ப**த்மு தீவில் அப்போஸ்தலனாகிய யோவான் ஆவிக்குள்ளாக்கப்பட்டு, ஏழு முத்திரைகளால் முத்தரிக்கப்பட்டிருந்த ஒரு புஸ்தகத்தைச் சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கிறவருடைய வலதுகரத்தில் கண்டார் (வெளி. 1:9;4:1,2;5:1). ஒருவரும் அந்தப் புஸ்தகத்தைத் திறந்து வாசிக்கவும், அதைப் பார்க்கவும் பாத்திரவானாகக் காணப்படாததினால் யோவான் அதிகமாக அழுதார் (வெளி. 3:4). " அப்பொழுது 24 மூப்பர்களில் ஒருவன் யோவானை நோக்கி: நீ அழவேண்டாம்; இதோ, யூதா கோத்திரத்து சிங்கமும் தாவீதின் வேருமானவர் புஸ்தகத்தைத் திறக்கவும், அதின் ஏழு முத்திரைகளையும் உடைக்கவும் ஜெயங்கொண்டிருக்கிறார் என்றார் " ( வெளி. 5:5).

ஆனாலும், தேவனுடைய வலதுபாரிசத்திலிருந்து அந்தப் புஸ்தகத்தை எடுத்தது சிங்கமல்ல, ஆட்டுக்குட்டியானவர் (வெளி.5:6 - 10). இதன் பொருள் என்ன?

வேதாகமத்திலுள்ள 66 புஸ்தகங்களும் ஒன்றோடொன்று பின்னிப் பிணையப்பட்டிருக்கிறது. இந்த, சிங்கம், ஆட்டுக்குட்டி வரலாறு ஆதி யாகமத்திலிருந்தே ஆரம்பமாகிறது. சுமார், கி.மு 1706 களில் முற்பிதாக்களில் ஒருவராகிய யாக்கோபு தம்முடைய குமாரர்களில் ஒருவனைப் பற்றி இவ்வித மாக தீர்க்கதரிசனம் உரைத்தார். " யூதா பாலசிங்கம், நீ இரை கவர்ந்து கொண்டு ஏறிப்போனாய்; என் மகனே சிங்கம் போலும் கிழச்சிங்கம் போலும் மடங்கிப் படுத்தான்; அவனை எழுப்புகிறவன் யார்? சமாதான கர்த்தர் வருமளவும் செங்கோல் யூதாவை விட்டு நீங்குவதும் இல்லை, நியாயப்பிரமாணிக்கன் அவன் பாதங்களைவிட்டு ஒழிவதும் இல்லை: ஜனங்கள் அவரிடத்தில் சேருவார்கள் " (ஆதி.49:9,10).

சிங்கம் காட்டுக்கு ராஜாவாயிருக்கிறது போல, யூதா கோத்திரத்திலிருந்து வரும் ஒருவருக்கு வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் உண்டாகத்தக்க, ராஜாவின் செங்கோல் கொடுக்கப்படவேண்டுமென்பது தேவனுடைய

திட்டமாயிருந்தது. பிரமாணத்தைக் கொடுப்பவர் என்னும் நிலையில் ராஜா ஜீவ ஆவியின் பிரமாணத்தைக் கொடுப்பார். அந்த ஆவியின் வார்த்தைகள் எல்லோரையும் கடைசி நாளில் நியாயந்தீர்க்கும் ( மத் 28:18; ரோம.8:2; யோவா.12:48).

யாக்கோபின் தீர்க்கதரிசனத்திற்கு ஆதரவாக வரவிருக்கும் சிங்கம் போன்ற ராஜா, நேரடியாக தாவீதின் சிங்காசனத்திலிருந்து வருவார் என்று ஏசாயா தீர்க்கதரிசியும் சொல்லியிருக்கிறார். " கிருபையினாலே சிங்காசனம் ஸ்தாபிக்கப்படும்: நியாயம் விசாரித்துத் துரிதமாய் நீதி செய்கிற ஒருவர் அதின்மேல் தாவீதின் கூடாரத்திலே நியாயாதிபதியாய் உண்மையோடே வீற்றிப்பார் " (ஏசா.16:5) என்றும் .. தாவீதின் சிங்காசனத்தையும் அவனுடைய ராஜ்யத்தையும் அவர் திடப்படுத்தி, அதை இதுமுதற்கொண்டு என்றென்றைக் கும் நியாயத்தினாலும், நீதியினாலும் நியாயப்படுத்தும்படிக்கும், அவருடைய கர்த்தர்த்துவத்தின் பெருக்கத்துக்கும், அதின் சமாதானத்துக்கும் முடிவில்லை; சேனைகளின் கர்த்தருடைய வைராக்கியம் இதைச்செய்யும் (ஏசா.9:7) என்றும் சொல்லியிருக்கிறார்.

மற்ற தீர்க்கதரிசிகள் வரவிருக்கும் ராஜாவை இரண்டாவது தாவீதாக வர்ணித்தனர் (எரே.30:9; எசேக்.34:24; ஓசியா 3:5). ஆனால், சிங்கம் போன்ற ராஜா தன்னுடைய சந்ததியிலிருந்து வருவார் என்று யாக்கோபு தீர்க்கதரிசனம் உரைத்தது நமக்கு ஆச்சரியமாக இருக்கிறது (ஆதி. 49:9 - 10). ஆனால், ஏசாயா தீர்க்கதரிசி, அந்த ராஜா " அடிக்கப்படும்படி கொண்டுபோகப்படுகிற ஒரு ஆட்டுக் குட்டியைப்போலவும், தன்னை மயிர்க்கத்தரிக்கிறவனுக்கு முன்பாகச் சத்தமிடாதிருக்கிற ஆட்டைப்போலவும் இருப்பார் " என்றும் தீர்க்கதரிசனம் உரைத்திருக் கிறார் (ஏசா 53:7).

இப்பொழுது கேள்வி என்னவென்றால், " தாவீதின் சிங்காசனத்தில் அமர்ந்திருக்கும் " ஒருவரால் ( ஏசாயா 9:7 ) எப்படி ஆட்டுக்குட்டியாயிருக்க முடியும்? அல்லது எப்படி அதிகாரிகளுக்கு ஊழியக்காரனாயிருக்க முடியும் ( ஏசா. 49:7 ) ஏசாயா தீர்க்கதரிசி இயேசு கிறிஸ்துவை ஏழுமுறை தாசன் என்று அழைக்கிறார் (42:1; 49:5,6,7; 5:10; 52:13; 53:11). சிங்கமும், ஆட்டுக்குட்டியும் எதிரெதிரானதுபோல் ராஜாவும், ஊழியக்காரனும் அதாவது வேலைக்காரனும் எதிரெதிரானவர்கள்.

உண்மையாகவே, தாவீதின் குமாரனாகிய இயேசுகிறிஸ்து ஒரு ஊழி யக்காரராக அதாவது ஒரு வேலைக்காரராகத்தான் இருந்தார் (மத்.1:1; 9:27). "

அப்படியே மனுஷகுமாரனும் ஊழியங்கொள்ளும்படி வராமல், ஊழியஞ் செய்யவும் அநேகரை மீட்கும் பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார்" என்றார் (மத்.20:28). அவர் நன்மை செய்கிறவராகச் சுற்றித்திரிந்தார் ( அப்.10:38 ). சீமோனுடைய மாமி ஜுரமாய்க் கிடந்தபோது, அவர் கிட்டப்போய், அவள் கையைப் பிடித்து அவளைத் தூக்கிவிட்டார்; உடனே ஜுரம் அவளை விட்டு நீங்கிற்று ( மாற். 1:30, 31 ). மற்றுமொரு சம்பவத்தில், " இயேசு கிறிஸ்து போஜனத்தை விட்டெழுந்து, வஸ்திரங்களைக் கழற்றிவைத்து, ஒரு சீலையை எடுத்து, அரையிலே கட்டிக்கொண்டு பின்பு பாத்திரத்தில் தண்ணீர் வார்த்து சீலையை எடுத்து, அரையிலே கட்டிக் கொண்டு பின்பு பாத்திரத்தில் தண்ணீர் வார்த்து சீஷருடைய கால்களைக் கழுவவும், தாம் கட்டிக்கொண்டிருந்த சீலையினால் துடைக்கவும் தொடங்கினார்" (யோவா. 13:4,5)

இயேசு கிறிஸ்து இந்தப் பூமியில் வந்ததற்கான நோக்கம் " நம் பாவங்களை நிவர்த்தி செய்வதற்காகத்தான். நம்முடைய பாவங்களை மாத்திரம் அல்ல, சர்வலோகத்தின் பாவங்களையும் நிவர்த்தி செய்வதற்குத்தான் " ( I யோவா.2:2). அவர் தாமாகவே முன்வந்து தம்முடைய ஜீவனை மீட்கும்பொருளாக ஒப்புக்கொடுத்தார். பாவத்தை நிவர்த்தி செய்வதற்கு, பொன் வெள்ளி போன்ற அழிந்துபோகிற பொருள்கள் போதுமானதாயிருக்கவில்லை ( I பேது.1:18 ). நாம் பட்ட கடனை நம்மால் திருப்பிச் செலுத்த முடியாது. ஏனெனில், யோவான் ஸ்நானன் இயேசுவைக் கண்டபோது, " இதோ உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி " என்று ஆச்சரியப்பட்டார் (யோவா.1: 29).

கர்த்தர் அநுதினமும் பாவத்திலிருந்து இரட்சிக்கப்படுகிறவர்களைச் சபையிலே சேர்த்துக்கொண்டு வருகிறார் ( அப். 2:47;5:11 ). எனவே, அவர் சபையைத் தம்முடைய சுயரத்தத்தினாலே சம்பாதித்தார் என்று சொல்லமுடியும் ( அப். 20:28 ). ஞானஸ்நானம் ஒரு பாவியை கிறிஸ்துவுக்குள் வரச்செய்கிறது ( கலா. 3:27 ). அவருடைய கிருபையின் ஐசுவரியத்தின்படியே அவருடைய இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு இவருக்குள் நமக்கு உண்டாயிருக்கிறது (எபே.1:7).

ஆட்டுக்குட்டியானவர், இந்தப் பூமியிலிருந்த போது ராஜாவாயிருக்க வில்லை (யோவா. 6:15). மாறாக, தம்முடைய ஜீவனை மீட்கும் பொருளாகக் கொடுத்தபிறகு ( மத். 20:28 ), மரணத்துக்கு அதிகாரியாகிய பிசாசானவனைத் தமது மரணத்தினாலே அழித்து (எபி. 2:14). சிறைப்பட்டவர்களைச் சிறையாக்கி ( எபே. 4:8 ) துரைத்தனங்களையும், அதிகாரங்களையும் உரிந்துகொண்டு,

வெளியரங்கமான கோலமாக்கி, அவைகளின்மேல் சிலுவையிலே வெற்றி சிறந்தார் (கொ லோ.2:15). அவர் பலவானுடைய வீட்டுக்குள் புகுந்து அவனைக் கட்டினார் ( மத்.12:29 ). அவர் அப்படிச் செய்ததினால் மரணத்தைப் பரிகரித்து ஜீவனையும் அழியாமை யையும் சுவிசேஷத்தினாலே வெளியரங்கமாக்கினார் ( II தீமோ.1:10).

இயேசு கிறிஸ்து தாவீதின் சிங்காசனத்தில் வீற்றிருக்கும்படி மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டு பரலோகம் சென்றபிறகு ராஜாதி ராஜாவாகவும், கர்த்தாதி கர்த்தாவாகவும் நம்மை ஆளுகிறார் ( வெளி. 17:14). அவர் எல்லாச் சத்துருக்களையும் தமது பாதத்திற்குக் கீழாக்கிப்போடும் வரைக்கும், அவர் ஆளுகை செய்யவேண்டியது ( I கொரி.15:25,26 ) அதன்பின்பு முடிவு உண்டாகும் ( I கொரி.15:24 ). அப்பொழுது அவர் சகல துரைத்தனத்தையும் சகல அதிகாரத்தையும் வல்லமையையும் பரிகரித்து தேவனும் பிதாவுமாயிருக்கிறவருக்கு ராஜ்யத்தை ஒப்புக் கொடுப்பார்; நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினாலே நமக்கு ஜெயம் கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம் ( I கொரி 15:57).

இயேசு கிறிஸ்து எப்படி ஒரு ஜெயங்கொள்ளுகிற ராஜாவாக ( சிங்க மாக ) மாறினார்? அவர் கீழ்ப்படிகிற ஆட்டுக்குட்டியிலிருந்து தான் ராஜாவானார். " அவர் குமாரனாயிருந்தும் பட்டபாடுகளினாலே கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டு தாம் பூரணரானபின்பு தமக்குக் கீழ்ப்படிகிற யாவரும் நித்திய இரட்சிப்பை அடைவதற்குக் காரணராகி " (எபி. 5:8,9), சிலுவையை நோக்கிய அவருடைய பாதை கிரீடத்தைச் சென்றடைய வழிவகுத்தது. அவர் உச்சியைத் தொடுவதற்கான வழி கீழிருந்து தான் ஆரம்பமானது. அவர் ஒரு ஆட்டுக்குட்டியைப்போல, " மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்படிந்தவராகி, தம்மைத் தாமே தாழ்த்தினார் " (ரசா. 53:7; பிலி. 2:8). அவர் இழந்து வென்றார். அவர் விட்டுக்கொடுத்து ஆதாயப்படுத்தினார்.


பரலோகத்தில் ஆட்டுக்குட்டியானவர் அப்புஸ்தகத்தைத் திறப்பதைக் கண்ட அந்த 24 மூப்பர்களும், அந்த நான்கு ஜீவன்களும் ஆட்டுக்குட்டி யானவருக்கு முன்பாக வணக்கமாய் விழுந்து: " தேவரீர் புஸ்தகத்தை வாசிக்கவும், அதின் முத்திரைகளை உடைக்கவும் பாத்திரராயிருக்கிறீர்; ஏனெனில் நீர் அடிக்கப்பட்டு, சகல கோத்திரங்களிலும் பாஷைக்காரரிலும் ஜனங்களிலும் ஜாதிகளிலுமிருந்து எங்களைத் தேவனுக்கென்று உம்முடைய இரத்தத்தினாலே மீட்டுக்கொண்டு, எங்கள் தேவனுக்கு முன்பாக எங்களை ராஜாக்களும் ஆசாரியர்களுமாக்கினீர்; நாங்கள் பூமியிலே அரசாளுவோம் என்று புதிய பாட்டைப்பாடினார்கள் (வெளி. 5 : 9, 10). ✝

# பழைய ஏற்பாட்டில் இயேசு

# JESUS IN THE OLD TESTAMENT

Betty Burton Choate

' தேவனை " பற்றி வேதாகமம் முழுவதிலும் நாம் வாசிக்கிறோம். எபிரெய மொழியில் " தேவன் " என்பதற்கு ஒருமையில் " ஏல் " என்றும் பன்மையில் "ஏலோஹீம் " என்றும் பொருள்படுகிறது. ஆனாலும், இவைகள் ஒருமை வினைச்சொல்லாகவே பயன்படுத்தப்படுகிறது. சிலர் " ஏலோஹீம் " என்பது " நாம் " என்று பொருள்படும்படியான ஒரு பதமாக இருந்தாலும் கூட, அது பன்மைப் பொருளுடைய ஒன்றாக இருக்க வேண்டிய அவசியமில்லை யென்று சொல்லக்கூடும். நம்மெல்லோருக்கும் மிகப் பரிச்சயமான வசனப்பகுதி யான உபாகமம் 6:4 ல் " இஸ்ரவேலே கேள்: நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர் ( Echad ) " என்று சொல்லப்பட்டிருக்கிறது. இங்கே " ஒருவர் " என்பது " ஒன்றுபட்ட ஒன்றைக் " குறிக்கிறதாக உள்ளது. இதே பதம் தான் ஆதி யாகம் 2:24 ல் கணவன் மனைவியின் தன்மையை விவரிப்பதற்காகப் பயன் படுத்தப்பட்டிருக்கிறது. பழைய ஏற்பாட்டில் 3000திற்கும் அதிகமான முறையில் " ஏலோஹீம் " என்ற பன்மை வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது. இடம் பெற்றிருக்கின்றன. அதே வேளையில் ஒருமை வார்த்தை சுமார் 500 முறை மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ளது. அப்படியானால், இது எதை நமக்குப் சொல் லுகிறது? நாம், கர்த்தர் என்று பெரும்பாலான இடங்களில் வாசிக்கும்போது, அது, " பிதாவாகிய தேவனை " மாத்திரம் குறிக்காமல், " தேவத்துவத்தைக் " குறிக்கிறதாகவே உள்ளது.



ஆனால் இயேசுவை நாம் பழைய ஏற்பாட்டு சம்பவங்களில் தீவிரமாகப் பங்காற்றிய ஒருவராக அடையாளங்காண முடியுமா? அதைக் குறித்ததான ஆராய்ச்சியில் நாம் இறங்குவோம்.

**கர்த்தருடைய தூதன்**

கர்த்தருடைய தூதன் என்று சொல்லப்பட்டிருப்பவர் யார்?

பொதுவாக, தூதன் என்று சொல்லும் போது, படைப்புகளில் இறக்கைகளுடன் கூடிய ஒன்றாக, தேவ செய்தியை மட்டும் கொண்டு வரும் ஒருவரா? இந்த தூதன், ஒரு 57 முறை குறிப்பிடப்பட்டிருக்கிறார். இவர்களில் ஒருவர் தான், யாத்திதாகம் மூன்றாம் அதிகாரத்தில், எரியும் முட்செடிகளில் மோசேக்கு காட்சி தந்த தூதன். ஆனால், பின்வரும் வசனங்களில் அவர் " கர்த்தர் " என்றழைக்கப்படுகிறார். மேலும் 14 ம் வசனத்தில் " இருக்கிறவராக இருக்கிறேன் " என்று தம்மை அடையாளப்படுத்துகிறார். யோவான் 8:58,59 ம் வசனங்களில் இயேசு கிறிஸ்து இவ்வார்த்தைகளைத் தமக்காகப் பயன்படுத்தியபோது, அவர் தேவதூஷணம் சொல்லுவதாகக் கூறி கொலை செய்யும்படி யூதர்கள் கல்லுகளை எடுத்தார்கள்.

யாத்திராகமம் 33:11 ல் தேவன் மோசேயோடே நேரடியாகப் பேசினதை நமக்கு அறிவிக்கிறது. 33:2 ல் தேவன் அந்த இஸ்ரவேலர்களோடு தம்முடைய தூதனை அனுப்புவதாகச் சொல்கிறார். I கொரிந்தியர் 10:4 ல் பார்க்கும்போது பகலில் மேகஸ்தம்பமாகவும், இரவில் அக்னிஸ்தம்பமாகவும் இருந்து அவர்களை வனாந்தரத்திலே வழிநடத்தி அவர்களோடு சென்றவர் கிறிஸ்துவே என்று அடையாளப்படுத்தப்பட்டிருக்கிறது. யாத்திராகமம் 23:20,21 ம் வசனங்களில் தேவன் தாம் அனுப்பும் தூதனுடைய வல்லமையை விவரிக்கிறார். " வழியில் உன்னைக் காக்கிறதற்கும், நான் ஆயத்தம் பண்ணின ஸ்தானத்துக்கு உன்னைக் கொண்டு போய்ச் சேர்க்கிறதற்கும், இதோ நான் ஒரு தூதனை உனக்கு முன்னே அனுப்புகிறேன். அவர் சமூகத்தில் எச்சரிக்கையாயிருந்து, அவர் வாக்குக்குச் செவிகொடு அவரைக் கோபப்படுத்தாதே; உங்கள் துரோகங்களை அவர் பொறுப்பதில்லை; என் நாமம் அவர் உள்ளத்தில் இருக்கிறது ". எனவே, இந்த தூதனுடைய உள்ளத்தில் தேவனுடைய நாமம் இருக்கிறது என்பதும், உங்கள் துரோகங்களை அவர் பொறுப்பதில்லை போன்ற வாக்கியங்கள் அவர் சிருஷ்டிக்கப்பட்ட ஒருவரல்ல என்பதைத் தெளிவுபடுத்துகிறது.

**கர்த்தருடைய சேனையின் அதிபதி**

யோசுவா 5:3-15 ம் வசனப் பகுதிகளில் நாம் ஒரு குறிப்பிடத்தக்க சம்பவத்தைக் காண்கிறோம்.

பின்னும் யோசுவா எரிகோவின் வெளியிலிருந்து தன் கண்களை ஏறெடுத்துப் பார்க்கும்போது இதோ ஒருவர் அவனுக்கு எதிரே நின்றார்; உருவினபட்டயம் அவர் கையில் இருந்தது. யோசுவா அவரிடத்தில் போய் ; நீர் எங்களைச்

சேர்ந்தவரோ. எங்கள் சத்துருக்களைச் சேர்ந்தவரோ என்று கேட்டான். அதற்கு அவர்: அல்ல, நான் கர்த்தருடைய சேனையின் அதிபதியாய் இப்பொழுது வந் தேன் என்றார்: அப்பொழுது யோசுவா தரையிலே முகங்குப்புற விழுந்து பணிந்து கொண்டு அவரை நோக்கி: என் ஆண்டவர் தமது அடியேனுக்குச் சொல்லுகிறது என்ன வென்று கேட்டான். அப்பொழுது கர்த்தருடைய சேனை யின் அதிபதி யோசுவாவை நோக்கி: உன் கால்களிலிருக்கிற பாதரட்சைகளைக் கழற்றிப்போடு, நீ நிற்கிற இடம் பரிசுத்தமானது என்றார்: யோசுவா அப்படியே செய்தான்.

உண்டாக்கப்பட்ட தேவதூதர்களைத் தொழுது கொள்வதென்பது தேவன் கட்டளையிடாத ஒன்றாகயிருக்கிறபடியால் இங்கே கர்த்தருடைய சேனையின் அதிபதி தேவத்துவத்தில் ஒருவர் என்பது வெளிப்படையாகிறது. யோசுவாவிடம் பாதரட்சைகளைக் கழற்றிப்போடும்படியான கட்டளை எரிகிற முட்செடியிலிருந்து மோசேக்குக் கொடுக்கப்பட்ட அதே கட்டளைதான்; இங்கே கர்த்தருடைய சேனை யின் அதிபதி என்பது இயேசு கிறிஸ்துதான் என்பதை உறுதியாக அறுதியிட்டுக் கூறுகிறது.

**கர்த்தருடைய வார்த்தை**

I பேதுரு 1:10,11 வசனங்களில் " உங்களுக்கு உண்டான கிருபையைக் குறித்துத் தீர்க்கதரிசனஞ் சொன்ன தீர்க்கதரிசிகள் இந்த இரட்சிப்பைக் குறித்துக் கருத்தாய் ஆராய்ந்து பரிசோதனை பண்ணினார்கள். தங்களிலுள்ள கிறிஸ்துவின் ஆவியானவர் கிறிஸ்துவுக்கு உண்டாகும் பாடுகளையும், அவை களுக்குப் பின்வரும் மகிமைகளையும் முன்னறிவித்தபோது இன்னகாலத்தைக் குறித்தாரென்பதையும், அந்தக் காலத்தின் விசேஷம் இன்னதென்பதையும் ஆராய்ந்தார்கள் " என்று நாம் வாசிக்கிறோம்.

இவ்வசனப் பகுதி பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனங்களில் குறைந்தபட்சம் சில தீர்க்கதரிசனங்கள் கிறிஸ்துவால் தீர்க்கதரிசிகளுக்குக் கொடுக்கப்பட்டது என்று நமக்குச் சொல்லுகிறது. இதற்கு ஆதாரமாக ஏதாவது சம்பவத்தைக் குறிப்பிட முடியுமா? என்று பார்ப்போம்.

யோவான் 1:1 ல் " ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது " மேலும் 14 ம் வசனம் அந்த வார்த்தை மாம்சமாகி கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய் நமக்குள்ளே வாசம்பண்ணினார். அவருடைய மகிமையைக் கண்டோம். அது பிதாவுக்கு ஒரே பேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமை

யாகவே இருந்தது " என்று விளக்குகிறது. எனவே மாம்சத்தில் இயேசு கிறிஸ்து வாகப் பிறந்தவர் ஆதியிலிருந்தே " வார்த்தை " என்று தம்மை அடையாளப் படுத்தப்படுகிறார். அவரை நாம் பழைய ஏற்பாட்டில் காண முடியுமா?

இதற்கான விடையைக் கண்டுபிடிக்க நான் தேடலில் ஈடுபட்ட போது, வசனங்களைத் திரும்பத் திரும்ப வாசித்தபோது அந்த முயற்சி பரவசமூட்டு வதாகவும், எனக்கு அதிகப் புரிந்து கொள்ளுதலைத் தருவதாகவும் இருந்தது. பழைய ஏற்பாட்டில், பல இடங்களில் கர்த்தருடைய வார்த்தை எனக்கு உண்டாகி என்று பல இடங்களில் நாம் வாசிக்கிறோம். நான் அந்த வாக்கியத்தை வாசிக் கும் போதெல்லாம் தேவன் தம்முடைய தாசர்களிடம் பேசுகிறார் என்று தான் நினைப்பேன். ஆனால், ஒருநாள் மனதளவில் " வார்த்தை " என்னும் பதத்தைக் குறித்துச் சிந்தித்துக் கொண்டிருந்தபோது, புதிய கருத்தொன்று என் மனதுக்குள் உதித்தது. ஒவ்வொரு வசனப்பகுதியிலும் குறிப்பாக வார்த்தை என்பது தேவத் துவத்தில் ஒருவர் தீர்க்கதரிசிக்கு செய்தியைக் கொடுக்கிறதாக இருக்கிறதா? என்னும் கேள்வியை அலசி ஆராய்ந்து பார்த்தபோது இந்த வாக்கியங்கள் எவ்விதமாக அமைக்கப்பட்டிருக்கிறது என்பதைக் கண்டு வியந்துபோனேன். அந்த வாக்கியங்களாவது. " கர்த்தருடைய வார்த்தை எனக்கு உண்டாகி; தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறார்; சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார் " போன்றவைகளாகும். இது ராஜாவின் பிரதிநிதி ஒருவர் வந்து ராஜா இப்படிச் சொல்லுகிறார் என்பதற்கு இணையாக உள்ளதல்லவா? ராஜா சொன்னால் என்ன ராஜாவின் பிரதிநிதி சொன்னால் என்ன இரண்டும் ஒன்றுதானே.

இதுவரை வசனங்களை நான் திரும்பத் திரும்ப வாசித்தவரை " வார்த்தை " என்பது மாம்சமாகி பூமியில் வாழ்ந்த கிறிஸ்து வைத்தான் குறிக்கிறது. மேலும் பழைய ஏற்பாட்டின் காலத்தில் இந்த வார்த்தை சேனைகளின் கர்த்தருக்கும், மனிதனுக்குமிடையே மத்தியஸ்தராகச் செயல்பட்டு பல்வேறுபட்ட தீர்க்கதரிசி களிடத்தில் பேசியிருக்கிறார் என்பது உறுதியாயிருக்கிறது. நான் அவரைப் பற்றி எவ்வளவு அதிகமாகப் படிக்கிறேனோ அவ்வளவு அதிகமாக " அவருக்குள் சகல மும் சிருஷ்டிக்கப்பட்டது; பரலோகத்திலுள்ளவைகளும், பூலோகத்திலுள்ளவை களுமாகிய காணப்படுகிறவைகளும், காணப்படாதவைகளுமான சகல வஸ்துக் களும், சிங்காசனங்களானாலும், கர்த்தர்த்துவங்களானாலும், துரைத்தனங் களானாலும், அதிகாரங்களானாலும் சகலமும் அவரைக்கொண்டும் அவருக் கென்றும் சிருஷ்டிக்கப்பட்டது என்பதில் அதிக நம்பிக்கையாயிருப்பேன் ( கொ லோ. 1:10). ஆனால் உலகத் தோற்றத்திற்கு முன்பாகத் தீட்டப்பட்ட காலங்களின் மாபெரும் திட்டத்தில் பிதாவுக்கும் அவருடைய பிள்ளைகளாகப் போகிறவர்க ளுக்குமிடையில் ஒரு பாலமாக அதாவது மத்தியஸ்தராக இருக்கும்படி தேவத்து வத்தில் நியமிக்கப்பட்டவர் " கிறிஸ்துவே ". ✠

# தேவனுடைய மகத்துவம்

# The Greatness of God

Maxie B. Boren

**தே**வன் எவ்வளவு மகத்துவமானவர் என்பதை எந்தவொரு மனிதனாலும் விவரித்துச் சொல்ல முடியாது! தேவன் தம்முடைய வாயின் வார்த்தையினால் வானத்தையும் பூமியையும் உண்டாக்கினார்! ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் உண்டாக்கினார் (ஆதி 1:1), கர்த்தருடைய வார்த்தையினால் வானங்களும், அவருடைய வாயின் சுவாசத்தினால் அவைகளின் சர்வசேனை யும் உண்டாக்கப்பட்டது (சங். 33:6). இன்னும் சங்கீதக்காரனாகிய தாவீது இவ்விதமாக தேவனைப் பற்றிக் கூறுகிறார்." பூமியெல்லாம் கர்த்தருக்குப் பயப்படுவதாக: உலகத்திலுள்ள குடிகளெல்லாம் அவருக்கு அஞ்சியிருப்பதாக. அவர் சொல்ல ஆகும், அவர் கட்டளையிட நிற்கும் (சங் 33:8,9). மேலும் தேவதாசனாகிய மோசே தேவனை இவ்விதமாகத் துதித்துப்பாடுகிறார். " பர்வதங்கள் தோன்றுமுன்னும், நீர் பூமியையும் உலகத்தையும் உருவாக்கு முன்னும், நீரே அநாதியாய் என்றென்றைக்கும் தேவனாயிருக்கிறீர் " (சங் 90:2). அப்போஸ்தலனாகிய பவுலும், "...வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் அவைகளிலுள்ளயாவற்றையும் உண்டாக்கின ஜீவனுள்ள தேவனிடத்திற்குத் திரும்பவேண்டுமென்று பிரசங்கித்தார் " (அப் 14:15)

தேவ ஞானத்தின் ஆழத்தை உங்களால் முடிந்தால் அளந்து பாருங்கள்; முடிந்தால் அவருடைய வல்லமையை கற்பனை செய்து பாருங்கள்; நமக்குத் தெரிந்த ஜீவராசிகளைக் குறித்து ஆழ்ந்து சிந்தித்துப் பாருங்கள்; தேவன் தம் முடைய எல்லையில்லா ஞானத்தால் அவைகளுக்கு வடிவம் கொடுத்து அவை கள் உண்டாகும்படி செய்திருக்கிறார். அவைகள் நமக்கு ஆச்சரியமாகவும் நம் மனதால் புரிந்துகொள்ள முடியாதவைகளாகவும் உள்ளது. இப்பிரபஞ்சம் எவ் வளவு பெரியது என்று எண்ணிப் பார்க்கும்போது, அதன் பிரமாண்டம் நம்மை ஆச்சரியப்பட வைக்கிறது. தூரங்கள் ஆயிரக்கணக்கான ஒளிவருடங்களில் அளக்கப்படுகிற பிரபஞ்சத்தில் தேவன் நம்மை வைத் திருக்கிறார். ( ஒளி ஒரு மணி நேரத்திற்கு 1,86,000 மைல் தூரம் பயணிக்கிறது என்பதை நினைவில் கொள்ளுங்கள்). பெலவீனமான மனிதன் இப்பிரபஞ்சத்தின் பிரமாண்டத்தைப்

பார்த்து பிரமித்து, சிருஷ்டிகரின் சர்வ ஞானத்தையும், சர்வ வல்லமையையும் எண்ணிப்பார்க்கையில் அவரை முழுமையாகப் புரிந்துகொள்ள முடியாததில் ஆச்சரியம் எதுவுமில்லை.

தேவனுடைய நித்திய வல்லமை மற்றும் தேவத்துவத்தைப் பற்றி நாம் ஓரளவு புரிந்துகொண்டாலும்கூட சர்வத்தையும் தம்முடைய வல்லமையுள்ள வசனத்தினாலே தாங்குகிற தேவனுடைய மகத்துவங்களை நம்மால் முழுமை யாகப் புரிந்துகொள்வது கடினமாகும் (எபி. 1:3). தேவன் உண்மை யாகவே எவ்வளவு பெரியவரென்பதைப் பிரசங்கத்தில் எடுத்துரைப்பதற்கு எனக்குத் திறனில்லை! ஆனால், தேவனுக்கு சபையிலே கிறிஸ்து இயேசுவின் மூலமாய்த் தலைமுறை தலைமுறைக்கும் சதாகாலங்களிலும் மகிமை உண்டாவதாக! ஆமென்!! (எபே. 3:21) ✞

---

# சர்வ சிருஷ்டிகர்

Kimbenly Reagan Waggoner

என் தேவன் ஒவ்வொரு விடியலையும் வடிவமைத்தார்
ஒளிரும் மகிமையில் ஒவ்வொரு செந்நிற அஸ்தமனத்தையும் படைத்தார்
சலனமற்ற நீரோடைகளையும் பொங்கியெழும் அலைகளையும்
அமைதியான புறாக்களையும் உயரப் பறக்கும் கழுகுகளையும் படைத்தார்.

ஒவ்வொரு பிரகாசமான காலைப்பொழுதையும் கவிக்குயிலின் பாடலையும்
ஆற்றலின் ஊற்றாகிய ஆதவனையும் பூமியை எட்டிப்பார்க்கும் முழுநிலவையும்
துள்ளிஓடும் மானையும் துடிக்கும் மீனையும் அவர் படைத்தார்
புல்வெளியையும் பூத்துக் குலுங்கும் புஷ்பங்களையும் அவர் படைத்தார்

என் தேவன் நள்ளிரவு நட்சத்திரங்களைப் படைத்தார்
அவ்விண்மீன் நட்சத்திரங்கள் தூரத்திலிருந்து கண்சிமிட்டுகின்றன.
ஆழ்கடலின் அலைகளையும், அவைகளுள் பாறைகளையும் படைத்தார்
நீலநிற வானத்தை அவர் நீளமாக விரித்தார்
என் தேவன் எல்லா சிருஷ்டிகளையும், நிலங்களையும் சிருஷ்டித்தார்
மகா சமுத்திரத்தையும் அவைகளில் மணற்பரப்பையும் அவர் படைத்தார்
இது ஓர் மாபெரும் செயல் இதை நான் புரிந்துகொள்ளவில்லை
இருந்தபோதிலும் சர்வ சிருஷ்டியும்
அவருடைய கரங்களின் கிரியைகள் என்றறிவேன். ✞

தேவனுடைய வார்த்தை

# மரிக்கும் மனிதனுக்கான உயிருள்ள வார்த்தை

## The Living Word For Dying Men

Bill Dillon

மனிதன் மரிக்கும் தன்மை உடையவன் என்பதைவிட முக்கியமான கருத்து எதுவுமில்லை. சங்கீதக்காரனாகிய தாவீது I நாளா. 29:15-ல், " பூமியின் மேல் எங்கள் நாட்கள் ஒரு நிழலைப்போல் இருக்கிறது; நிலைத்திருப் போம் என்னும் நம்பிக்கையில்லை " என்று சொல்லுகிறார். பக்தனாகிய யோபு , " மனுஷன் " பூவைப்போல் பூத்து, அறுப்புண்கிறான்; நிழலைப்போல் நிலைநிற்காமல் ஓடிப்போகிறான் " (யோபு 14:2) என்று சொல்லுகிறார். ஒரு மனிதன் இப்பூமியில் தங்கி யிருக்கும் நாட்கள் சம்பந்தமாகச் சொல்லும் மிகச் சிறந்த வார்த்தை, " மரணத்திற்கும் எனக்கும் ஒரு அடிதூரம் மாத்திரம் இருக்கிறது " ( 2 சாமு. 20:3) என்பதாகும். நாம் அடுத்த வருடம் / மாதம் / நாள் / மணி நேரம் / நிமிடம் உயிரோடிப்போம் என்று நிச்சயமாகச் சொல்ல முடியுமா? வருங்காலத்தைப் பற்றி உங்களுக்குத் தெரியவில்லை என்றால், நித்திய காலத்தின் தேவனைப் பற்றி அறிந்துகொள்வதற்கு இதுவே அருமையான தருணம். ஜீவனுள்ள தேவன் தம்முடைய ஜீவனுள்ள வார்த்தைகளை மரிக்கும் மனித இனத்திற்குத் தந்திருக்கிறார். பிலி.2:14 தேவனுடைய வார்த்தையை " ஜீவவசனம் " என்று சொல்லுகிறது. எபிரெயர் 4:12. " தேவனுடைய வார்த்தையானது " ஜீவனும் " வல்லமையும் உள்ளதாயும் இருபுறமும் கருக் குள்ள எந்தப்பட்டயத்திலும் கருக்கானதாயும் இருக்கிறது " என்று சொல்லுகிறது.

இப்பூமியில் எல்லாப் பொருள்களுமே அழிந்துபோகும் தன்மையுடைய வைகள் தான். உலோகம் துருப்பிடிக்கிறது; மரம் அரிக்கப்படுகிறது; மாம்சம் கெட்டுப் போகிறது. இத்தகைய சூழ்நிலையில் அழிவில்லாத ஒன்று உண்டென்றால் அது

என்றென்றைக்கும் நிற்கிறதும், ஜீவனுள்ளதுமான வேத வசனந்தான்(I பேது.2:3) அந்தத் தேவனுடைய வார்த்தையில் எவைகளெல்லாம் உள்ளடங்கியிருக்கிறது என்பதை அறிய உங்கள் ஆவல் அதிகரிக்கிறதா? I பேரு.2:3 ல் " நீங்கள் வளரும்படி புதிதாய்ப்பிறந்த குழந்தைகளைப் போல திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலின் மேல் வாஞ்சையாயிருங்கள் " என்று புத்திசொல்லுகிறது. பெரோயா பட்டணத்தைப் பற்றி இவ்விதமாகச் சொல்லப்படுகிறது. " அப்பட்ட ணத்தார் மனோவாஞ்சையாய் வசனத்தை ஏற்றுக் கொண்டு காரியங்கள் இப்படியிருக்கிறதா என்று தினந்தோறும் வேதவாக்கி யங்களை ஆராய்ந்து பார்த்ததினால், தெசலோனிக்கேயில் உள்ளவர்களைப் பார்க்கிலும் நற்குணசாலிகளாயிருந்தார்கள் " என்று அப். 17:11 -ல் வாசிக்கிறோம்.

இன்றைய நாட்களில் தேவன் வேதாகமத்தின் மூலமாக நம்மிடம் பேசிக் கொண்டிருக்கிறார். யாக். 17:11-ல், " அவர் சித்தங்கொண்டு தம்முடைய சிருஷ்டிகளில் நாம் முதற்பலன்களாவதற்கு நம்மைச் சத்திய வசனத்தினாலே ஜநிப்பித்தார் " என்று போதிக்கிறது. எல்லோரும் மனந்திரும்ப வேண்டுமென்றும் வேதாகமம் போதிக்கிறது ( அப். 17:30,31 ). எல்லோரும் ஞானஸ்நானம் பெறவேண்டுமென்று வேதாகமம் போதிக்கிறது ( மாற்.16:15,16 ). இன்றைய நாட்களில் வெட்கத்திற்குரிய ஒரு காரியமென்னவென்றால் காலத்தால் அழியாத வேதாகமத்தைப் பற்றிய சிந்தையில்லாமல் பலர் இருப்பது தான். தேவனுடைய வார்த்தையைப் பற்றிய சிந்தையில்லாமலிருப்பது பாவமல்ல, ஆனால், தொடர்ந்து அப்படியிருப்பது பாவமாகும். உங்கள் வாழ்க்கையில் ஒரு சிறந்த மாற்றத்தை நீங்கள் விரும்புபவராக இருந்தால் இப்போதே வேதாகமத்தைப் பற்றி சிந்தையைப் பெற்றுக் கொள்ளுங்கள். ஏனென்றால், உங்கள் காலங்கடந்துவிடும்!

## தேவ கட்டளையும், நிச்சயமும்

அறியாமையுள்ள காலங்களைத் **தேவன்** காணாதவர் போலிருந் தார்; இப்பொழுதோ மனந்திரும்பவேண்டுமென்று எங்குமுள்ள மனுஷ ரெல்லாருக்கும் **கட்டளை**யிடுகிறார். மேலும் ஒரு நாளைக் குறித்தி ருக்கிறார்; அதிலே அவர் தாம் நியாயந்தீர்ப்பார்; அந்த மனுஷனை மரித் தோரிலிருந்து எழுப்பினதினாலே அதின் **நிச்சயத்தை** எல்லாருக்கும் விளங்கப் பண்ணினார் என்றார்.

தேவனுடைய வார்த்தை

# தேவன் என்றால் அவர் என்ன சொல்லுகிறார் என்பது தான்

# God Means What He Says




Rick Cunningham

தேவன் இரண்டு ஆசாரியர்களைக் கொன்று போட்டார். அவர்கள் மோசேயின் சகோதரனான ஆரோனின் குமாரர்கள். அவர்களிருவரும் தன் தூப கலசத்தை எடுத்து அவைகளில் அக்கினியும் அதின்மேல் தூபவர்க்கத்தையும் போட்டு கர்த்தர் தங்களுக்குக் கட்டளையிடாத அந்நிய அக்கினியை அவருடைய சந்நிதியில் கொண்டுவந்தார்கள். அவர்கள் பலிபீடத்திலிருந்து அக்கினியை எடுத்து கர்த்தருடைய சந்நிதியில் கொண்டு வந்திருக்கவேண்டும். ஆனால், அவர்கள் அதற்குப் பதிலாக அங்கீகரிக்கப்படாத அந்நிய அக்கினி யைப் பயன்படுத்தினார்கள்.

" உடனே கர்த்தருடைய சந்நிதியிலிருந்து அக்கினி புறப்பட்டு வந்து அவர்களைப் பட்சித்தது. மோசே ஆரோனை நோக்கி: என்னிடத்தில் சேருகிறவர் களால் நான் பரிசுத்தம் பண்ணப்பட்டு, சகல ஜனங்களுக்கும் முன்பாக நான் மகிமைப்படுவேன் என்று கர்த்தர் சொன்னது இதுதான் என்றார் " (லேவி. 10:3)

'இந்த ஆசாரியர்களான நாதாபும், அபியூவும் அங்கீகரிக்கப்படாத செயல்களுக்காகவும், அதினிமித்தம் கர்த்தரால் தண்டிக்கப்பட்டதற்காகவும் நினைக்கப்படுகிறார்கள். இங்கே எக்காலத்துக்கும் பொருத்தமான கருத்து நிலைநிறுத்தப்படுகிறது. அதென்னவென்றால், கர்த்தருடைய வார்த்தையை உன் இஷ்டப்படி எடுத்துப் பயன்படுத்தாதே என்பதாகும்.

'நாதாபும் அபியூவும் மிக சௌகரியமாக உணரும் நாட்களில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். சுதந்தரமாக அல்லது சுய இஷ்டமாக காரியங் களைச் செய்வது இன்று பிரபலமாகிக் கொண்டிருக்கிறது. " உன் இஷ்டப்படி செய் " என்பது இன்று நாகரீகமாகிவிட்டது. ஆனால், உண்மை என்னவென்றால், தேவனுடைய வார்த்தை என்றென்றும் நிச்சயமானது. எனவே, நாங்கள் தேவன் சொல்லுகிற எல்லாவற்றையும் உறுதியாகப் பிடித்துக்கொண்டு அவரைக் கனப்படுத்தும்படி அவருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிவோம்.

'தேவனால் அங்கீகரிக்கப்படாத ஒன்றைச் செய்வதற்கு முன்பாக நாம் நாதா பையும், அபியூவையும் நினைத்துப் பார்க்கவேண்டும். தேவன் என்ன சொல்லு கிறாரோ அதை நாம் அப்படியே செய்யக் கடமைப்பட்டிருக்கிறோம். ✝


# வேதாகமம்

## The Bible

Tommy Hagewood

**கீ**ழ்க்காண்பவைகள், நாமெல்லோரும் அறிந்திருக்க வேண்டிய வேதாகமத்தைப் பற்றிய நான்கு முக்கியமான உண்மைகள்:

1. தேவனுடைய மனதிலிருந்து நமக்கு வந்த ஒரே புத் தகம் வேதா கமம்தான். மற்ற எல்லாப் புத்தகங்களும் வெறுமனே மனிதர்களால் தான் உண்டாக் கப்பட்டது. ஆனால், வேதாகமமோ, தேவனுடைய மனதிலிருந்து வந்து பரிசுத்த ஆவியானவருடைய வழிகாட்டு தேவ மனிதர்களைக் கொண்டு அதா வது அப்போஸ்தலர்கள், தீர்க்க தரிசிகள் மூலமாக வெளிப்படுத்தப்பட்டது (I கொரி. 2:6-13; கலா.1:11,12; எபே. 3:1-5).



2. தேவனுடைய இருதயத் திலிருந்து நமக்கு வரும் ஒரே புத் தகம் வேதாகமம் தான். ரோமர் 9:23-26 ம் வசனங்களில் தேவனுடைய ஜனங் களைப் பற்றிச் சொல்லும்போது, தேவன் தம் மகிமைக்காக எத்தன மாக்கின கிருபா பாத்திரங்கள்மேல் தம்முடைய மகிமையின் ஐசுவரி யத்தைத் தெரியப் படுத்தும்படி தம்முடைய ஜனங்களை அழைத் தார் என்று பவுல் சொல்லுகிறார். இவ்வுண்மை இப்பகுதியில் மட்டும் நமக்கு வெளிப்படுத்தப் படவில்லை. மாறாக, பவுலின் வார்த்தைகளின்படி இது ஓசியா 1:10 லும் தீர்க்கதரிசனமாக உரைக்கப்பட்டுள்ளது. இம்மா பெரும் அன்பு யோவான் 3:16 லும் தெளிவாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

3. நாம் பரலோகம் போவ தற்கு அறிந்துகொள்ள வேண் டிய, விசுவாசிக்க வேண்டிய, செய்யவேண்டிய எல்லாவற் றையும் நமக்குச் சொல்லும் ஒரே புத்தகம் வேதாகமம் தான் (II பேதுரு 1:3). இது ஒருவரை பிள்ளையாக மாற்றி, அப்பிள்ளையை முழுமை யாக்குகிறது. நம்முடைய ஆவிக்குரிய தேவைகள் சந்திக்கப்பட வேறொன்றும் ஏற்றுக்கொள்ளப்படத்தக்கவைகளல்ல.

4. மனிதர்களை நியாயந் தீர்க்கப்போகும் ஒரே புத்தகம் வேதாகமம் தான். வேதாக மத்தின் ஒரு பகுதியாகிய புதிய ஏற்பாட்டினால் நாம் நியாயந் தீர்க்கப்படுவோம் ( யோவா. 12:48; ரோ.2:16 ). அந்த நியாயத்தீர்ப்பு நாம் இப்பூமியில், சரீரத்தில் செய்யும் கிரியைகளை அடிப்படையாக வைத்தே அமையும் (II கொரி.5:10).

வேதாகமத்தைத் தவிர நம் கவனத்தை ஈர்க்கும் புத்தகம் வேறே எதுவும் இல்லை. அதை தினமும் நீங்கள் ஏன் வாசிக்கக்கூடாது? ✞

---

## வேதாகமம் ஓர் அற்புதமான நூல்

வேத வாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது. (2 தீமோ.3:16).

தீர்க்க தரிசனமானது ஒரு காலத்திலும் மனிதருடைய சித்தத்தினாலே உண்டாகவில்லை; பரிசுத்த மனிதர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டுப் பேசினார்கள். (2 பேது 1:21).

இரட்சிப்பு

# மனந்திரும்புதல் நான்கு நிலைகளைக் கொண்டது

# Repentance Has 4 Levels

Charles Hodge

இன்றைய நாட்களில் நாம் அதிகமாக மனந்திரும்புதலைப் பற்றிப் பேசுவதில்லை! ஆலோசனை நேரங்களில் மனந்திரும்புதல் பற்றிப் பேசப்படுவதேயில்லை. தேவன் முழுமையாக ஆத்துமாவைக் குணப்படுத்துவதற்கும் முன்பாக பாவப்பிரச்சனை தீர்க்கப்பட வேண்டும். மனந்திரும்புதல் என்பது பாவம் செய்து மாட்டிக்கொண்டு அதன் பின்விளைவுகளுக்காகத் துக்கப்படுவதுமல்ல. வேதாகம மனந்திரும்புதல் குறைந்தபட்சம் நான்கு நிலைகளைக் கொண்டுள்ளதாகக் கூறுகிறது.

### ஒத்துக்கொள்ளும் நிலை

மற்றவர்கள் மீது பழிபோடுவதை நாம் நிறுத்த வேண்டும். அது மற்றவர்களுடைய தவறல்ல. நான் தான் பாவம் செய்தேன், நான் அதற்குப் பொறுப்பேற்கிறேன். என் வாழ்க்கைக்கு நான்தான் பொறுப்பு. நான் பிடிபட்டு விட்டேன் என்பதற்கல்ல, என்னை நானே குற்றஞ்சாட்டுகிறேன். அதற்காக நான் ஓடி ஒளியமாட்டேன், சண்டையிடவும் மாட்டேன். நான் பாவஞ் செய்தேன். அதோடு முடிந்துவிட்டது.

### குற்றத்தின் நிலை

இது நாம் மற்றவர்களைப் புண்படுத்தும் விதத்தைப் புரிந்து கொள்வதாகும். அதாவது, காயப்படுத்தப்பட்ட ஆத்துமாவிடம் சென்று அவருடைய துக்கத்தில் பங்கெடுப்பதாகும். இக்காரியத்தை தாவீது மிகச் சிறந்த முறையில் செய்தார்... நான் உமக்கு விரோதமாகப் பாவஞ்செய்தேன் என்று. தன்னுடைய பாவத்தை ஒத்துக்கொண்டார். தாவீது ஏத்தியனாகிய உரியாவுக்கு விரோதமாகவும், அவன் மனைவியாகிய பத்சேபாளுக்கு விரோதமாகவும் தான் பாவம் செய்தான். இது தேவனுடைய பார்வைக்குப் பொல்லாததாயிருந்தது. தேவன் பாவத்தை அறவே வெறுக்கிறார்.

### அறிக்கையிடும் நிலை

அறிக்கையிடுவது நம்முடைய நாட்களில் ஒதுக்கப்பட்ட ஒன்றாகிவிட்டது. நம் பாவங்கள் வெளியே தெரிந்துவிடும் என்பதால் நாம் அறிக்கையிட

விரும்புவதில்லை. அறிக்கையிடுவது என்பது மற்றவர்களைச் சார்ந்திருப்ப தாகும். அதன் பொருள் நான் உங்கள் இரக்கத்தில் இருக்கிறேன். உங்களுக்கு விரோதமாகப் பாவஞ்செய்து அத்துமீறிவிட்டேன். எனவே, நான் பாவத்தை ஏற்றுக் கொண்டு அறிக்கையிடுகிறேன் என்று சொல்வதாகும். அறிக்கை யிடுவது ஒருவரை மற்றவருடைய கையில் உதவியற்ற நிலையில் கொண்டு போய் விடுகிறது. அறிக்கையிடுவது என்பது நெறுங்கிய இருதயத்தின் மனக்குமுறலா யிருக்கிறது. அறிக்கையிடுவது அர்த்தமற்ற பேச்சுக்கு முற்றுப்புள்ளி வைக்கிறது.

**மறுபடியும் அப்படிச் செய்யமாட்டேன் என்று தீர்மானிக்கும் நிலை**

நீங்கள் காயப்படுத்தப்பட்டதை மட்டும் நான் புரிந்துகொள்ளவில்லை இப்போது உங்கள் நிலையையும் நான் புரிந்துகொள்கிறேன். நானும் காயப்பட் டிருக்கிறேன். அதற்காக உண்மையாகவே நான் வருந்துகிறேன். நான் செய்தது போல் மறுபடியும் ஒருபோதும் செய்யமாட்டேன். என் இருதயமும் அந்தக் காரியத்துக்காக நொறுங்கிப்போய் இருக்கிறது. நான் பெலவீனமபயிருக்கிறேன். நான் இழந்துபோன நிலையில் ஒரு பாவியாக இருக்கிறேன். மனந்திரும்புதல் என்பது மனதிலும் இருதயத்திலும் நேர்மையாகவும் உண்மையாகவும் ஏற்படும் மாற்றமாயிருக்கிறது.

ஆனபடியினாலே, கர்த்தருடைய சந்நிதானத்திலிருந்து இளைப்பாறுதலின் காலங்கள் வரும்படிக்கும் முன்னே குறிக்கப்பட்ட இயேசு கிறிஸ்துவை அவர் உங்களிடத்தில் அனுப்பும்படிக்கும் உங்கள் பாவங்கள் நிவர்த்திசெய்யப்படும் பொருட்டு நீங்கள் மனந்திரும்பிக் குணப்படுங்கள் (அப் 3:19,20).

✝

---

உன் இருதயம் தேவனுக்கு முன்பாகச் செம்மையாயிராதபடியால், இந்த விஷயத்திலே உனக்குப் பங்குமில்லை பாகமுமில்லை. ஆகையால், நீ உன் துர்க்குணத்தை விட்டு மனந்திரும்பி, தேவனை நோக்கி வேண்டிக்கொள், ஒரு வேளை உன் இருதயத்தின் எண்ணம் உனக்கு மன்னிக்கப்படலாம் ( அப். 8:21,22 ).

### இயேசுகிறிஸ்துதான் மணவாளன்! (மத்.9:15)

### Jesus Christ is the Bridegroom! ( Matt.9:15 )

# யார் மணவாட்டி?

## Who is the Bride?

"... கிறிஸ்து சபைக்குத் தலையாயிருக்கிறதுபோல, புருஷனும் மனைவிக்குத் தலையாயிருக்கிறான். அவரே சரீரத்திற்கும் இரட்சகராயிருக்கிறார்.

ஆகையால், சபையானது கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிகிறதுபோல மனைவிகளும் தங்கள் சொந்தப்புருஷர்களுக்கு எந்தக்காரியத்திலேயும் கீழ்ப்படிந்திருக்க வேண்டும்.

புருஷர்களே, உங்கள் மனைவிகளில் அன்புகூருங்கள், அப்படியே கிறிஸ்துவும் சபையில் அன்புகூர்ந்து, தாம் அதைத் திருவசனத்தைக்கொண்டு தண்ணீர் முழுக்கினால் சுத்திகரித்து பரிசுத்தமாக்குகிறதற்கும், கறைதிரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும், பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக அதைத் தமக்குமுன் நிறுத்திக்கொள்வதற்கும் தம்மைத்தாமே அதற்காக ஒப்புக்கொடுத்தார்" (எபே.5:23-27).

**ஒப்பந்தமும் ஒருங்கிணைப்பும்**

★ கிறிஸ்துவுக்கு எத்தனை மனைவிகள் இருக்கிறார்கள்? அவர் பல மனைவிகளை உடையவரா? (கொலொ.1:18; எபே.4:4-6)

★ சபை எப்படி அவருடைய மணவாட்டியானது? (அப். 2:38;20:28; ரோ.7:4; யோவா.3:5; கலா.3:27; I கொரி 12:13)

★ மணவாட்டி யாருடைய பெயரைத் தரித்திருக்கிறாள்? (ரோமர்.16:16; அப்.4:12)

★ யாருடைய பெயரால் பிள்ளைகள் அழைக்கப்படுகிறார்கள்? (அப்.11:26; I பேது.4:16)

நீங்கள் வசிக்குமிடத்தில் கிறிஸ்துவின் சபையைப்பற்றி விசாரிக்கும்படி நாங்கள் உங்களை உற்சாகப்படுத்துகிறோம்.

✞

# தீர்மானத்தின் பள்ளத்தாக்கு

# The Valley Of Decision

Clarence Deloach

**ம**னிதன் தேவனை சேவிப்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும். இது செயல் படுகின்ற மற்றும் ஜாக்கிரதையுள்ள மனவிருப்பத்தின் நோக்கமாயிருக்கிறது. இக்கருத்து யோசுவா புத்தகத்தில் மிக அழகாக விவரிக்கப்பட்டுள்ளது. தேவன் தம்முடைய ஜனங்களை யோர்தான் நதிக்குக் கொண்டுவந்து, அவர் அவர்களை அற்புதவிதமாகக் கடக்கும்படி செய்தார். ஆயினும் அவர்களுக்கு உடனே ஒரு தடை அங்கே காத்திருந்தது. அதாவது, எரிகோ அவர்களுக்கு எதிராக இருந்தது. " நான் எரிகோவை உங்கள் கையில் ஒப்புக்கொடுத்தேன் " என்று தேவன் சொன்னார். ஜனங்கள் தேவனுடைய பிரமாணங்களுக்கு கீழ்ப்படிந்தபடியால் தேவன் அற்புதவிதமாக எரிகோவை அவர்களுக்குக் கொடுத்தார். விசுவாசத்தினாலே எரிகோவின் மதில்கள் விழுந்தன.

அதற்குப் பிறகு ஆயி பட்டணம் அவர்களுக்கு முன்பாக இருந்தது. இஸ்ரவேலர்களின் கூடாரத்தில் பாவம் இருந்தபடியால் அவர்களுடைய சேனை தோற்கடிக்கப்பட்டது. ஆகான் என்பவன் தேவனுக்கு எதிர்த்து நின்று சாபத்தீடானதிலே சிலதை எடுத்துக் கொண்டான். இஸ்ரவேல், பெருமை மற்றும் அதீத நம்பிக்கை போன்றவற்றால் பாவம் செய்தது.

யோசுவா 8:30-35 வசனங்களில் யோசுவா ஜனங்களை சீகேம் பள்ளத் தாக்கினிடத்தில் கொண்டுவந்தான். அங்கே தேவனுகென்று ஒரு பலிபீடத்தைக் கட்டி, தேவனுக்கு சர்வாங்க தகனபிலிகளைச் செலுத்தி, சமாதான பலிகளையும் செலுத்தினான். அங்கே தேவனுடைய பிரமாணம் இருந்தது. தேவனுடைய பெட்டி இருந்தது. யோசுவா இஸ்ரவேல் புத்திரரில் ஆறு கோத்திரத்தாரை கெரிசீம் மலைக்கு எதிர்புறமாகவும், மீதி ஆறு கோத்திரத்தை ஏபால் மலைக்கு எதிர்புறமாகவும் நிறுத்திவைத்தான்.

இது இஸ்ரவேல் ஒருபோதும் மறக்காத அளவுக்கு ஓர் உதாரணப் பாடமாக இருந்தது. இயற்கையாக அமைந்த ஒரு கலையரங்கப் பின்னணியில் யோசுவா, நியாயப்பிரமாணத்தில் சொல்லிய ஆசீர்வாதமும் சாபமுமாகிய சகல வார்த்தைகளையும் வாசித்தான். மோசே கட்டளையிட்ட எல்லாவற்றிலும் யோசுவா இஸ்ரவேலின் முழுச்சபைக்கும், ஸ்திரீகளுக்கும் பிள்ளைகளுக்கும் ஒரு வார்த்தையும் விடாமல் வாசித்தான்.

ஆகவே, இங்கே இஸ்ரவேலர்கள் தீர்மானம் எடுக்கும்படியாக அழைக்கப்பட்டார்கள். அது, துக்கம், தோல்வி, சாபம் மற்றும் மரணத்தை அடையாளப்படுத்தும் ஏபால் மலையாக இருக்குமா? அல்லது ஆசீர்வாதம், இரக்கம் மற்றும் ஜீவனை அடையாளப்படுத்தும் கெர்சீர் மலையாக இருக்குமா?

இன்னும் நாம் தீர்மானம் எடுக்கும்படியாகவே நாம் அழைக்கப்படுகிறோம். தேவனுடைய சமூகத்திலும் அவருடைய வார்த்தைக்கு முன்பாகவும் கீழ்ப்படிதலையும் ஆசீர்வாதத்தையும் தெரிந்துகொள்ளுகிறோமா? அல்லது கீழ்ப்படியாமையையும், சாபத்தையும் தெரிந்துகொள்ளுகிறோமா? நீங்கள் தீர்மானத்தின் பள்ளத்தாக்கிலே இருந்தால் இன்றே ஜீவனையும் ஆசீர்வாதத்தையும் தெரிந்து கொள்ளுங்கள்! ✝

---

## இன்று தெரிந்துகொள்ளுங்கள்

ஆகையால் நீங்கள் கர்த்தருக்குப் பயந்து, அவரை உத்தமமும் உண்மையுமாய் சேவித்து, உங்கள் பிதாக்கள் நதிக்கு அப்புறத்திலும் எகிப்திலும் சேவித்த தேவர்களை அகற்றிவிட்டு கர்த்தரைச் சேவியுங்கள். கர்த்தரைச் சேவிக்கிறது உங்கள் பார்வைக்கு ஆகாததாய்க் கண்டால் பின்னை யாரைச் சேவிப்பீர்கள் என்று இன்று தெரிந்து கொள்ளுங்கள்; நதிக்கு அப்புறத்தில் உங்கள் பிதாக்கள் சேவித்த தேவர்களைச் சேவிப்பீர்களோ? நீங்கள் வாசம்பண்ணுகிற தேசத்துக் குடிகளாகிய எமோரியரின் தேவர்களைச் சேவிப்பீர்களோ? நானும் என் வீட்டாருமோவென்றால், கர்த்தரையே சேவிப்போம் என்றான் (யோசுவா 24:14,15).

# கிறிஸ்துவுக்குள் ஆசிர்வாதங்கள்

# Blessings in Christ

Owen D. Olbricht

**வே**தாகமத்தைப் படித்து அதன் உபதேசங்களை விசுவாசிக்கிற எல்லோருமே கிட்டத்தட்ட கிறிஸ்துவுக்குள் இருக்கிறவர்கள் தான். அவர்கள், கிறிஸ்துவுக்குள் இருக்கும் சகல ஆசீர்வாதங்களையும் பெற்றுக்கொள்ளும் சிலாக்கியம் பெற்றவர்கள் என்பதை ஒத்துக்கொள்வார்கள். ஆனால், கிறிஸ்துவுக்கு வெளியே இருக்கும் ஒருவர்கூட இத்தகைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ள முடியாது. மாறாக, கிறிஸ்துவுக்குள் இருக்கிறவர்கள் மாத்திரம்தான். ஆவிக்குரிய சகல ஆசீர்வாதங்களாலும் ஆசீர்வதிக்கப் பட்டவர்கள் என்று பவுல் எழுதினார் ( எபே. 1:3 ).

கிறிஸ்துவுக்கு வெளியே இருப்பவர்கள் சம்பந்தமாகப் பவுல் இப்படி எழுதினார். " **அக்காலத்திலே கிறிஸ்துவைச் சேராதவர்களும், இஸ்ரவேலுடைய காணியாட்சிக்குப் புறம்பானவர்களும், வாக்குத்தத்தத்தின் உடன் படிக்கைகளுக்கு அந்நியரும், நம்பிக்கையில்லாதவர்களும், இவ்வுலகத்தில் தேவனற்ற வருமாயிருந் தீர்களென்று நினைத்துக் கொள்ளுங்கள். முன்னே தூரமாயிருந்த நீங்கள் இப்பொழுது கிறிஸ்து இயேசுவுக்குள் கிறிஸ்துவின் இரத்தத்தினாலே சமீபமானீர்கள்** " ( எபேசியர் 2:12,13 ).

## உள்ளே இருப்பதன் முக்கியத்துவம்

" வெளியே " இருப்பதற்குப் பதிலாக " உள்ளே " இருப்பது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். ஏனென்றால், கிறிஸ்துவுக்கு உள்ளே இருக்கிறவர்கள் பெற்றுக்கொள்ளும் நன்மையை கிறிஸ்துவுக்கு வெளியே இருப்பவர்கள் பெற்றுக்கொள்ள முடியாது. இச்செய்கை நோவாவின் குடும்பத்தாரைப் பொறுத்தவரை உண்மையாயிருந்தது. எப்படியெனில், பேழை

சம்பந்தமாகப் பேதுரு எழுதும்போது, " **அந்தப்பேழையிலே சிலராகிய எட்டுப்பேர்மாத்திரம் பிரவேசித்து ஜலத்தினாலே காக்கப்பட்டார்கள்** " என்று குறிப்பிட்டுள்ளார் ( I பேதுரு 3:20 ). இங்கே, நோவாவின் குடும்பம் **பேழைக்கு உள்ளே** இருந்தபடியினாலே ஜலப்பிரளயத்திலிருந்து காப்பாற்றப்பட்டார்கள். பேழைக்கு வெளியே இருந்தவர்கள் முற்றிலும் அழிக்கப்பட்டார்கள்.

## கிறிஸ்துவுக்குள் இருப்பதன் முக்கியத்துவம்

ஆவிக்குரிய சகல ஆசீர்வாதங்களும் கிறிஸ்துவுக்குள் இருக்கிறது ( எபே. 1:3 ). இந்த ஆசீர்வாதங்களை கிறிஸ்துவுக்கு வெளியே இருப்பவர்கள் பெற்றுக்கொள்ள முடியாது, கிறிஸ்துவுக்குள் இருப்பவர்கள் மாத்திரமே பெற்றுக்கொள்ள முடியும். " **கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா?** " (ரோமர்.6:3). " **ஏனெனில், உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனைபேரோ, அத்தனை பேரும் கிறிஸ்துவைத் தரித்துக் கொண்டீர்களே** " ( கலாத்தியர்.3:27 ). கிறிஸ்துவுக்குள் இருக்கிறவர்கள் பெற்றுக்கொள்ளும் ஆசீர்வாதங்களை, கிறிஸ்துவுக்குள் இல்லாதவர்கள் ஒருபோதும் பெற்றுக்கொள்ளவே முடியாது.

## கிறிஸ்துவுக்குள் இருக்கிறவர்கள் பெற்றுக்கொள்ளும் ஆசீர்வாதங்கள்

* தேவனுடைய உடன்படிக்கை மற்றும் வாக்குத்தத்தங்களில் இடம்பெற்றுள்ள நன்மைகள்

* நம்பிக்கை


* தேவன்

* கிறிஸ்துவின் இரத்தத்தினாலே உண்டாகும் பாவமன்னிப்பாகிய மீட்பு. " **அவருடைய கிருபையின் ஐசுவரியத்தின்படியே இவருடைய இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு இவருக்குள் நமக்கு உண்டாயிருக்கிறது** " (எபே.1:7).

* பழைய வாழ்க்கை ஒழிந்துபோய், ஆவிக்குரிய பிரகாரமாக ஓர் புதிய நிலை, " **இப்படியிருக்க ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச் சிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின** " ( II கொரி. 5:17).

* இரட்சிப்பு, " **ஆகையால், தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் கிறிஸ்து இயேசுவினால்**

**உண்டான இரட்சிப்பை நித்திய மகிமையோடே பெற்றுக்கொள்ளும்படி சகலத்தையும் அவர்கள் நிமித்தமாகச் சகிக்கிறேன்** " ( II தீமோ.2:10).



* நித்திய ஜீவன், " **தேவன் நமக்கு நித்தியஜீவனைத் தந்திருக்கிறார், அந்த ஜீவன் அவருடைய குமாரனில் இருக்கிறதென்பதே அந்தச் சாட்சியாம்** " (I யோவான் 5:11).

**நம் நம்பிக்கை**

நாம் கிறிஸ்துவுக்குள் இல்லையென்றால். அதாவது, ஞானஸ்நானம் பெறவில்லையென்றால், நாம் நம்பிக்கையில்லாதவர்களாக இருக்கிறோம். இதனால்தான் அப்போஸ்தலருடைய நடபடிகளில் பதிவு செய்யப்பட்டிருப்பதைக் கவனிப்போமானால், சுவிசேஷத்தைக் கேள்விப்பட்டவர்கள், ஞானஸ்நானம் அவசியமானது என்பதைக் கற்றுக்கொண்ட உடனே அதற்குக் கீழ்ப்படிந்தார்கள் ( அப்.2:41; 8:12,35-38; 9:18; 10:47,48; 16:15,33,34; 19:5 ) என்பதைத் தெரிந்து கொள்ள முடியும். ✞

# அமெரிக்காவின் மிசோரியை சூறையாடிய புயலைப்பற்றிய ஆழ்ந்த சிந்தனைகள்

# Reflections on the Tornado in Joplin Missouri

Jhon Deffenbaugh

**வே**லைக்கு வரும்படியாக அழைப்பைப் பெற்றுக்கொண்டபிறகு, 2011 மே மாதம், 22 ம் தேதி அவசரஅவசரமாக மிசோரியை நோக்கி காரில் பயணித்தேன். எனக்கு முன்பாகக் காத்திருந்த காற்றைப்பற்றி எனக்கு எந்த யோசனையும் இல்லை. எனக்கும், நான் வேலைசெய்த இடத்திற்குமிடையே நடந்த அந்தப் பயங்கரமான சம்பவத்தைப் பற்றி எனக்கு எந்த அறிகுறியும் தெரியவில்லை. அத்துயரச் சம்பவங்களின் விளைவாகவும், நாங்கள் கண்ட காட்சிகளை மனதில் கொண்டு சில காரியங்களை உங்களோடு பகிர்ந்துகொள்ள நான் நெருக்கப்படுகிறேன்.

மிசோரியை சூறையாடிய புயல் காற்றில் கணக்கிலடங்கா டாலர்கள் நாசமானது. பலருடைய கனவுகள் தகர்ந்தன. பல வீடுகள் சேதமடைந்தன, பலருடைய வாழ்க்கை மீளமுடியாத அளவுக்கு மாறிப்போனது. அச்சுழல் காற்றில் ஒரு தாயின் கைகளிலிருந்து மழலை பிடுங்கப்பட்டது, தன் தகப்பனோடு பயணித்துக்கொண்டிருந்த வாலிபன் ஒருவன் வாகனத்தின் மேற்கூரை வழியாக இழுத்துக்கொள்ளப்பட்டான். ஒரு கணவன் தன் மனைவியின் உயிரைக் காப்பாற்றுவதற்காக தன் உயிரைத் தியாகம் செய்தான். இப்படித் துயரப்பட்டியல் தொடர்ந்து நீண்டு கொண்டே போனபடியால், இன்னும் பலர் இறந்திருக்கலாம் என்ற பயத்தில் அவசர தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர். அதுபோல், நீங்களும் நானும் சக மனிதர்களுடைய கஷ்டங்களைக் கண்டு கண்ணீர் விடவில்லையென்றால் ஏதோ தவறு நம்மிடத்தில் இருக்கிறது என்று பொருள். இப்படிப்பட்ட சோக சம்பவங்கள் நம் உள்ளத்தை உருகச் செய்கின்றன ( ரோமர். 12:15 ). இருந்தபோதிலும் இந்த வலி, வேதனைகளுக்கு மத்தியில் இதைவிட மோசமான சம்பவமொன்றிருக்கிறது.

அந்த மோசமான சம்பவமென்னவென்றால், கண்ணிமைக்கும் நேரத்தில் பல ஆத்துமாக்கள் நித்தியத்தை இழந்துபோக நேர்வதுதான். இப்பயணத்திற்கு

எத்தனைபேர் ஆயத்தமாயிருந்திருப்பார்கள்? நம் ஜீவனை இழந்துபோனால் அதைக்குறித்து நாம் பயப்படவேண்டுமென்று இயேசு கிறிஸ்து சொல்கிறார் (மத். 10 : 28). மே 22 ன் உண்மையான பரிதாபம் என்னவென்றால், அன்றைய தினத்தில் அநேக ஆத்துமாக்கள் தேவனை சந்திக்க ஆயத்தமில்லாமல் நித்திய ஆக்கினைக்குள் பிரவேசித்ததுதான்! மிசோரி மாகாணத்தில் மரித்துப்போன மக்களுடைய சரீரத்திலிருந்து பிரிந்துபோன ஆத்துமாக்களில் எத்தனை ஆத்துமாக்கள் தேவனுடைய அரவணைப்புக்குத் தேவதூதரால் கொண்டுபோய் விடப்பட்டிருப்பார்கள்? (லூக்.16:22).

சூறைக்காற்று சூறாவளியாகச் சுழன்று சூறையாடிய அந்தநாளின் இரவுவேளையில் என்னோடு வேலைசெய்த நண்பர் ஒருவரும் மரித்துப் போனார். அவருடைய ஆத்துமா இழந்துபோனதைக் குறித்து நான் அதிகமாகப் பயந்தேன். என்னுடைய தொடர் சிந்தனையும் இதுவாகத்தான் இருந்தது. " நான் எப்போதாவது அவரோடு சேர்ந்து வேதாகமத்தைப் படிக்க அவரை அழைத்தேனா? அன்று மரித்தவர்களில் எத்தனைபேர் கர்த்தருடைய சபையின் அங்கத்தினர்களோடு தொடர்பிலிருந்தார்கள். அப்படித் தொடர்பிலிருந்த போதிலும் எத்தனைபேர் ஆத்தும இரட்சிப்புக்காகத் தேவனுடைய திட்டத்தைக் கற்றுக் கொண்டனர். ஆகவே, நாம் சிறந்ததையே செய்யவேண்டும். ஏனென்றால், நம்மிடமிருந்து சிறந்ததைப் பெற்றுக்கொள்ள தேவன் பாத்திர ராயிருக்கிறார். நாமும், இயேசு கிறிஸ்துவோடு சேர்ந்து இப்படிச் செய்ய முடியுமா? " நான் என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்து அவரு டைய கிரியையை முடிப்பதே என்னுடைய போஜனமாயிருக்கிறது. இதோ, வயல் நிலங்கள் இப்பொழுதே அறுப்புக்கு விளைந்திருக்கிறதென்று உங்கள் கண் களை ஏறெடுத்துப் பாருங்கள் " (யோவா.4:34,35). இழந்துபோனவர்களுக்கு, கர்த்தருடைய சபை தேவனுடைய சித்தமாகிய சுவிசேஷ நற்செய்தியை அறிவியாமற்போனால் அது கர்த்தருடைய சபை அல்ல ( லூக்கா 6:46).

வாழ்க்கையென்பது விலையேறப்பெற்ற ஒரு வெகுமதி. ஆனாலும் வாழ்க்கை பெலவீனமானதும், மரணம் நிச்சயமுமாயிருக்கிறது ( எபி.9:27 ). " மேலும், நாங்கள் இன்றைக்கு அல்லது நாளைக்கு இன்ன பட்டணத்திற்குப்போய், அங்கே ஒருவருஷம் தங்கி வியாபாரஞ் செய்து சம்பாத் தியம் பண்ணுவோமென்கிறவர்களே கேளுங்கள். நாளைக்கு நடப்பது உங்க ளுக்குத் தெரியாதே. உங்கள் ஜீவன் எப்படிப்பட்டது? கொஞ்சகாலந் தோன்றிப் பின்பு தோன்றாமற் போகிற புகையைப்போலிருக்கிறதே " ( யாக்.4:13-15 ). நம்முடைய வாழ்க்கையில் தேவனுடைய சித்தம் என்ன? நோக்கம் என்ன? என்பதைத் தொடர்ந்து சிந்தித்துக்கொண்டே நாம் வாழவேண்டும்.

மிசோரி மாகாணத்தைச் சுழல்காற்று சூறையாடிய அந்த மே 22 ம் தேதி மாலை 5 மணிக்கும் - 6 மணிக்கும் இடையில் பல ஆத்துமாக்கள் அவர்களை அறியாமலேயே ஆயத்தமில்லாத நிலையில் வாரிக்கொள்ளப்பட்டார்கள். மே 22 ம் தேதி வழக்கமான ஞாயிறு காலையாகத் தொடங்கி அந்தநாள் முடிவதற்கு முன் பச்சிளங்குழந்தைகளை, பெற்றோர்களை, முதியவர்களை முடித்துவிட்டது. நீங்கள் ஆயத்தமா? மரணத்திற்கு நீங்கள் ஆயத்தமா? கர்த்தருடைய இரண்டாம் வருகைக்கு நீங்கள் ஆயத்தமா? " மனுஷகுமாரன் வரும் நாளையாவது, நாழிகையாவது நீங்கள் அறியாதிருக்கிறபடியால் விழித்திருங்கள் " (மத்.25:13).

✝

## எத்தியோப்பிய மந்திரியின் மனமாற்றச் சம்பவம்

அவன் வாசித்த வேதவாக்கியம் என்னவென்றால்; அவர் ஒரு ஆட்டைப்போல அடிக்கப்படுவதற்குக் கொண்டுபோகப்பட்டார்; மயிர்க்கத்தரிக்கிறவனுக்கு முன்பாகச் சத்தமிடாதிருக்கிற ஆட்டுக்குட்டியைப்போல அவர் தமது வாயைத் திறவாதிருந்தார். அவர் தம்மைத்தாழ்த்தினபோது அவருடைய நியாயம் எடுத்துப்போடப்பட்டது; அவருடைய ஜீவன் பூமியிலிருந்து எடுபட்டுப்போயிற்று; அவருடைய வம்சத்தை யாராலே சொல்லிமுடியும் என்பதே. மந்திரி பிலிப்பை நோக்கி; தீர்க்கதரிசி யாரைக்குறித்து இதைச் சொல்லுகிறார்? தம்மைக்குறித்தோ, வேறொருவரைக் குறித்தோ? எனக்குச் சொல்லவேண்டும் என்று கேட்டுக்கொண்டான். அப்பொழுது பிலிப்பு பேசத்தொடங்கி. இந்த வேதவாக்கியத்தை முன்னிட்டு இயேசுவைக்குறித்து அவனுக்குப் பிரசங்கித்தான். இவ்விதமாய் அவர்கள் வழிநடந்து போகையில், தண்ணீருள்ள ஓரிடத்திற்கு வந்தார்கள். அப்பொழுது மந்திரி இதோ தண்ணீர் இருக்கிறதே. நான் ஞானஸ்நானம் பெறுகிறதற்குத் தடையென்ன என்றான். அதற்குப் பிலிப்பு: நீர் முழு இருதயத்தோடும் விசுவாசித்தால் தடையில்லையென்றான். அப்பொழுது அவன் இயேசு கிறிஸ்துவைத் தேவனுடைய குமாரனென்று விசுவாசிக்கிறேன் என்று சொல்லி, இரதத்தை நிறுத்தச் சொன்னான். அப்பொழுது பிலிப்பும் மந்திரியும் ஆகிய இருவரும் தண்ணீரில் இறங்கினார்கள்; பிலிப்பு அவனுக்கு ஞானஸ்நானங் கொடுத்தான். அவர்கள் தண்ணீரிலிருந்து கரையேறினபொழுது கர்த்தருடைய ஆவியானவர் பிலிப்பைக் கொண்டுபோய்விட்டார். மந்திரி அப்புறம் அவனைக் காணாமல் சந்தோஷத்தோடே தன் வழியே போனான். (அப். 8:32-40).

# தேவனுடைய விசேஷித்த ஜனம்

# God's Special People

JIMMY CLARK

" **நீங்களோ, உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும் படிக்குத் தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக் கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள். முன்னே நீங்கள் தேவனுடைய ஜனங்களாயிருக்கவில்லை, இப்பொழுதோ அவருடைய ஜனங்களாயிருக்கிறீர்கள்; முன்னே நீங்கள் இரக்கம் பெறாதவர்களாயிருந்தீர்கள், இப்பொழுதோ இரக்கம் பெற்றவர்களாயிருக்கிறீர்கள்** " (I பேதுரு 2:9,10). தேவன் இவ்வுலகத்தில் வாழும் எல்லோரையும் நேசித்தபடியால் தான் மனுக்குலத்திற்காக தம்முடைய ஒரேபேறான குமாரனை அனுப்பிக் கொடுத்தார் (யோவான் 3:16). தேவன் கிறிஸ்து மூலமாக தம்முடைய பிள்ளை களிடத்தில் விசேஷித்த உறவை வைத்திருக்கிறார். தேவனுக்கு சபை எவ்வளவு முக்கியம் என்பதை உலகம் காண்பது அவசியமானது. ஏனென்றால் அதன் மூலம் அவர் கள் சுவிசேஷ அழைப்பை ஏற்றுக்கொண்டு அந்த விசேஷித்த ஜனத்திற்குள் அதாவது சபைக்குள் கத்தரால் சேர்க்கப்பட முடியும் ( அப் 2:37-47 ). தேவனுடைய சொந்த ஜனமாகிய சபையைப்பற்றி அவருடைய சிந்தை என்ன என்பதைப்பற்றி வேதாகமத்திலிருந்து மூன்று காரியங்களை நாம் பார்போம்.

## நித்தியத்திலே நியமிக்கப்ட்டது

அப்போஸ்தலனாகிய பேதுரு, I பேதுரு 1 : 1, 2 ம் வசங்களில் இவ்விதமாக எழுதுகிறார். **இயேசு கிறிஸ்துவின் அப்போஸ்தலனாகிய பேதுரு பொந்து கலாத் தியா கப்பத்தோக்கியா ஆசியா பித்தினியா தேசங்களிலே சிதறியிருக்கிறவர் களில் பிதாவாகிய தேவனுடைய முன்னறிவின்படியே ஆவியானவரின் பரிசுத் தமாக்குதலினாலே கீழ்ப்படிதலுக்கும் இயேசுகிறிஸ்துவினுடைய, இரத்தந் தெளிக்கப்படுதலுக்கும் தெரிந்துகொள்ளப்பட்ட பரதேசிகளுக்கு எழுதுகிறதாவது: கிருபையும் சமாதானமும் உங்களுக்குப் பெருகக்கடவது.** பரிசுத்த ஆவியானவர் பேதுரு மூலமாக இந்த

நிருபம் யாருக்கு எழுதப்பட்டதோ அவர்கள் தேவனுடைய முன்னறிவின்படியே தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் என்று சுட்டிக்காட்டுகிறார். அப்போஸ்தலனாகிய பவுல் எபேசியருக்கு எழுதின நிருபத்தில் இவ்விதமாகச் சொல்கிறார். **நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம் அவர் கிறிஸ்துவுக்குள் உள்ளதங் களிலே ஆவிக்குரிய சகல ஆசீர்வாதத்தினாலும் நம்மை ஆசீர்வதித் திருக்கிறார். தமக்கு முன்பாக நாம் அன்பிலே பரிசுத்தமுள்ளவர்களும் குற்ற மில்லாதவர்களுமாயிருப்பதற்கு அவர் உலகத்தோற்றத்துக்குமுன்னே கிறிஸ்து வுக்குள் நம்மைத் தெரிந்துகொண்டபடியே பிரியமானவருக்குள் தாம் நமக்குத் தந்தருளின தம்முடைய கிருபையின் மகிமைக்குப் புகழுச்சியாக தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படியே நம்மை இயேசுகிறிஸ்து மூலமாய்த் தமக்குச் சுவிகார புத்திரராகும்படி முன்குறித்திருக்கிறார்.** (எபே 1:3-6). மறுபடியும் சபையைப் பற்றி இவ்விதமாக எழுதப்பட்டது. உன்னதங்களிலுள்ள துரைத் தனங்களுக்கும் அதிகாரங்களுக்கும் **அவருடைய அநந்த ஞானமானது சபையின் மூலமாய் இப்பொழுது தெரியவரும் பொருட்டாக இயேசு கிறிஸ்துவைக்கொண்டு எல்லாவற்றையும் சிருஷ்டித்த தேவனுக்குள்ளே ஆதிகாலங்கள் முதல் மறைந்திருந்த இரகசியத்தினுடைய ஐக்கியம் இன்ன தென்று எல்லாருக்கும் வெளிப்படையாகக் காண்பிப்பதற்கு இந்தக் கிருபை எனக்கு அளிக்கப்பட்டிருக்கிறது** ( எபே 3:10,11 ) சபையானது தேவனுடைய அந்த ஞானத்தின்படியும் அவருடைய முன்னறிவின்படியும் உண்டானதாகும்.

### தேவனுடைய குமாரனுடைய இரத்தத்தினால் வாங்கப்பட்டது

இந்த விசேஷித்த ஜனத்தைப் பற்றி பேதுரு இவ்வண்ணமாக எழுதுகிறார் **உங்கள் முன்னோர்களால் பாரம்பரியமாய் நீங்கள் அநுசரித்துவந்த வீணான நடத்தையி னின்று அழிவுள்ள வஸ்துக்களாகிய வெள்ளியினாலும் பொன்னினாலும் மீட்கப்படாமல் குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக் குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே மீட்கப்பட்டீர்களென்று அறிந்திருக்கிறீர்கள்.** (I பேதுரு 1:18, 19). சபை என்பது தேவன் சுயரத்தத்தி னாலே சம்பாதித்தபடியால் சபை தேவனுக்குச் சொந்தமானது என்று அப்போஸ்தலனாகிய பவுல் அப்.20:28ல் குறிப்பிடுகிறார். பவுல் இதேகருத்தை எபேசியருக்கும் எழுதுகிறார். **அவருடைய கிருபையின் ஐசுவரியத்தின் படியே இவருடைய இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு இவருக்குள் நமக்கு உண்டாயிருக்கிறது.** (எபே 1:7). ஒரு பொருளுக்கு என்ன விலை கொடுக்கப் படுகிறதோ அதைவைத்தே அதன் முக்கியத்துவத்தை நாம் அறிந்து கொள்ள முடியும். தேவன் சபையை வாங்குவதற்கு தம்முடைய ஒரே பேறான குமாரனை யே கிரயமாகக் கொடுத்தார் அதன் மூலம் சபையின் மீது அவருக்கு இருக்கும் மதிப்பை உலகிற்கு உணர்த்துகிறார்.ஆகவே சபையின் காரியங்கள் தேவன் பார்க்கிறவிதமாக மனிதனால் பார்க்க முடியாது.

**நித்திய ஜீவனுக்காகப் பாதுகாக்கப்படுகிறது**

அப்போஸ்தலனாகிய பேதுரு, **கடைசிக்காலத்திலே வெளிப்பட ஆயத்தமாக்கப்பட்டிருக்கிற இரட்சிப்புக்கு ஏதுவாக விசுவாசத்தைக் கொண்டு தேவனுடைய பலதினாலே காக்கப்பட்டிருக்கிற உங்களுக்கு அந்தச் சுதந்தரம் பரலோகத்திலே வைக்கப்பட்டிருக்கிறது** ( I பேதுரு 1:5). **ஆகையால் தேவனுடைய சித்தத்தின்படி பாடநுபவிக்கிறவர்கள் நன்மை செய்கிறவர்களாய்த் தங்கள் ஆத்துமாக்களை உண்மையுள்ள சிருஷ்டிகர்த்தாவாகிய அவருக்கு ஒப்புக்கொடுக்கக்கடவர்கள்** (I பேதுரு 4:19).

✝

---

## நான் ஞாயிறு மாலை ஆராதனையிலும் கலந்துகொள்ளுகிறேன். ஏனென்றால் :

## I Attend the Sunday Evening Assemblies Because :

★ நான் போக விரும்புகிறேன், அங்கே நான் போகிறேன்

★ நான் போவது அவசியம், அங்கே நான் தேவைப்படுகிறேன்

★ நான் மற்றெங்கையும்விட அங்கேயிருக்கவே ஆசைப்படுகிறேன்

★ என் பிள்ளைகள் என்னைப் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள், அவர்கள் என் மாதிரியைப் பின்பற்றுவார்கள்

★ என் ஆத்துமா அங்கே போதிக்கப்படுபவைகளால் பலப்படுத்தப் படுகிறது

★ என் இருதயம் ஆவிக்குரிய பாடல்களைப் பரத்திற்கு ஏறெடுக்கும் போது களிகூருகிறது.

★ சத்தியத்தைப் புரிந்துகொள்ளாதவர்களுக்குப் போதிக்கவும் அவர்களோடு விவாதிக்கவும் இப்போது நான் ஆயத்தமா யிருக்கிறேன்.

★ நான் நீதியின்மேல் பசி தாகமுள்ளவனாயிருக்கிறேன்.

# சிருஷ்டிகரின் சிறப்புத் திட்டம்

## The Creator 's Special Project

*Ardron Hinton*

**மனிதர்களாகிய** நாம் தேவனுடைய ஆச்சரியமான படைப்புகள்
ஏனென்றால் அழகை ரசிக்க நமக்கு **கண்கள்** இருக்கின்றன
கழுகுகளின் சிறகுகள்போல் உயரப் பறக்கும் **மனது** இருக்கிறது
செய்யவேண்டிய கடமைகளைப் பற்றிக் கேட்டறிய **காது** இருக்கிறது

மலர்களின் புன்சிரிப்பும், பாடல்களின் சுரங்களும்
மனித இதயத்தைத் தொட்டு இதமாக்குகின்றன
மனிதர்களால் சூரியன் அஸ்தமிக்கும் காட்சியைக் கண்டு
தேவனுடைய கிரியைகளை ரசிக்க முடியும்

மனித மனதால் நீதியும் அன்பும் கிருபையும்
நிறைந்த தேவனை அறிந்து மற்றவர்களோடு
சேர்ந்து அந்தத் தேவனுக்கு ஆராதனையை ஏறெடுக்க முடியும்.
மனித மனதால் கடந்த காலங்களைக் குறித்து ஆழ்ந்து யோசிக்கவும்
நம்பிக்கையோடு எதிர்காலத்தை எதிர்கொள்ளவும்
வாக்குத்தத்தம் பண்ணப்பட்டிருக்கிற பரமவீட்டை எதிர்நோக்கவும்
நிகழ்கால துக்கங்களை எதிர்த்து எதிர்நீச்சல் போடவும் முடியும்

மனிதர்களால் எதையுமே கற்பனையில் நினைத்துப் பார்க்க முடியும்
எதையும் படித்து அளந்துபார்க்க முடியும்
சத்தியத்தை அவர்களால் தேடிக் கண்டுபிடிக்க முடியும்
அதுவே அவர்கள் வாழ்க்கை முறையின் வழிகாட்டியாயிருக்கிறது
சிக்கலான கணிதத்திலிருந்து தத்துவஞானம் வரை
அதின் உச்சத்தை நம்மால் அறிந்துகொள்ளமுடியும்

தேவனுடைய கையின் கிரியை எவ்வளவு ஆச்சரியமானது
மாம்சத்திலும், ஆவியினாலுமான இந்தச் சரீரம்
தேவனுடைய இரட்சிக்கும் கிரியை மூலமாக
நியாயத்தீர்ப்பை நினைக்கவும், அதற்குப் பயப்படாமலும் இருக்க முடியும்! ✝

வாழ்வதற்கான உபதேசம்

# ஜோதிடம்

# Astrology

Evan Adair

உலகம் உண்டானதிலிருந்தே மனிதன் பதில்களைத் தேடிக் கொண்டிருக்கிறான். சிலர் தங்கள் கேள்விகளுக்கான பதில்களுக்காக நட்சத்திரங்களைப் பார்த்திருக்கிறார்கள். மேலும் ஜோதிடத்தை நாடியிருக்கிறார்கள். ஜோதிடமும், அது சம்பந்தமான படிப்புகளும் புதியதல்ல. அது குறைந்தபட்சம் எகிப்திய பார்வோன்களின் காலந்தொட்டே இருந்து வருகிறது (யாத். 7:11).

ராசிபலன்களை உருவாக்கிய கல்தேயர்களால்தான் ஜோதிடம் ஓர் விஞ்ஞானமாக்கப்பட்டிருக்கிறது. நீரோ, திபேரியு போன்ற மன்னர்கள் ரோம சாம்ராஜ்யத்தின் விவகாரங்களைத் தீர்மானிக்க ஜோதிடத்தை நாடியிருக்கி றார்கள் என்று சரித்திரம் சான்று பகருகிறது. இவ்வுலகில் சாதாரண மக்களும், பிரபலங்களும் தங்கள் கேள்விக்கான பதில்களுக்காக ஜோதிடத்தையே நாடியிருக்கிறார்கள்.

வேதாகமம் ஜோதிடத்தைப்பற்றி என்ன சொல்லுகிறது? " குறிகேளாமலும் , நாள் பாராமலும் இருப்பீர்களாக " (லேவி.14:26). **" உன் திரளான யோசனைகளி னால் நீ இளைத்துப் போனாய் ; இப்பொழுதும் ஜோசியரும், நட்சத்திரம் பார்க்கிற வர்களும், அமாவாசி கணிக்கிறவர்களும் எழும்பி, உனக்கு நேரிடுகிற வைகளுக்கு உன்னை விலக்கி இரட்சிக்கட்டும் "** ( ஏசாயா 47:13). ஆகவே, இங்கே நாம் ஜோதிடம் பார்க்கிற விஷயம் சம்பந்தமாக தேவனுடைய கட்டளைகள் நமக்கு இருக்கிறது.

முதலாவது, ஜோதிடம் நம்முடைய கேள்விகளுக்கு பதில் தருவதில்லை. மேலும் நம் பிரச்சனைகளுக்கு தீர்வாகவும் அமைவதில்லை. இரண்டாவதாக தேவன் அக்கிரியைகளைச் சுட்டெரித்துப்போடுவார். இதற்குமேல் இதைப்பற்றி சொல்லத் தேவையா? எரேமியா 10:2 லும் இதைப்பற்றிய எச்சரிப்பைக்

கவனியுங்கள், " **புறஜாதியாருடைய மார்க்கத்தைக் கற்றுக்கொள்ளாதி ருங்கள்; வானத்தின் அடையாளங்களாலே புறஜாதிகள் கலங்குகிறார்களே என்று சொல்லி நீங்கள் அவைகளாலே கலங்காதிருங்கள்.** "

புதிய ஏற்பாட்டில் அப்போஸ்தலனாகிய பவுல் எபேசு பட்டணத்திலிருந்த போது கர்த்தரிடத்தில் விசுவாசம் வைத்த பல கிரேக்கரும், யூதர்களும் முன் பொருகாலத்தில் மாயவித்தைக்காரராயிருந்தபடியால் தங்கள் புஸ்தகங்களைக் கொண்டுவந்து, எல்லாருக்கு முன்பாகச் சுட்டெரித்தார்கள்; அவைகளின் கிரையத்தைத் தொகைபார்த்து, ஐம்பதினாயிரம் வெள்ளிக்காசாகக் கண்டார்கள் ( அப். 19:17-20 ). ஜோதிடம், மந்திரவாதம் போன்றவைகளைக் குறித்து அதிகமாகச் சொல்லமுடியும், இருந்தபோதிலும் நாம் இது காறும் பார்த்த காரியங்கள் போதுமானது.

நம் பிரச்சனைகளுக்கும், கேள்விகளுக்கும் பதில் மிகப்பெரிய சமாதானப் பிரபுவாகிய இயேசு கிறிஸ்துவினிடத்திலிருந்து வரவேண்டும் " **நான் உங்க ளுக்குச் சொல்லுகிற வசனங்கள் ஆவியாயும் ஜீவனாயும் இருக்கிறது** " (யோவான் 6:63).

✞

---

## தேவனுக்குச் சொந்தமானவர்கள்

*நாம் தேவனுக்குச் சொந்தமானவர்களாக இருந்தால் நம்முடைய மதிப்பும் பிற காரியங்களும் நமக்குச் சொந்தமாகாது. அவருடைய அளவுகோலின் படியாக அவைகள் தீர்மானிக்கிறது. அவைகள் நம்முடைய வாழ்க்கையை ஆளுகை செய்கிறது.*

# இப்படியிருப்பது என் ஜனத்துக்குப் பிரியமாயிருக்கிறது

## "And My People Love It So"

Mike Mays

யூதாவுக்கான எரேமியாவின் செய்திதான் இன்றைய நாட்களில் சபை களுக்குத் தேவையாயிருக்கிறது. திகைத்துத்திடுக்கிடத்தக்க காரியம் தேசத்திலே நடந்து வருகிறது. தீர்க்கதரிசிகள் கள்ளத்தீர்க்கதரிசனம் சொல்லுகிறார்கள் ஆசாரியர்கள்; அவர்கள் மூலமாய் ஆளுகிறார்கள் இப்படியிருப்பது என் ஜனத்துக்கும்ப் பிரியமாயிருக்கிறது ஆனாலும் முடிவிலே என்ன செய் வீர்கள்?(எரே5:30,31) .இந்த அசாதாரண சூழ்நிலைக்கு தலைமைத்துவம் பொறுப்பு ஏற்க வேண்டியதாயிருந்தாலும் ஜனங்கள் பகுதிப் பொறுப்பேற்க வேண்டியதாயிருக்கிறது.ஜனங்கள் இவ்விதமாகக் காரியங்கள் இருக்க வேண்டுமென்று விரும்பியிருக்கிறார்கள்.

எரேமியாவின் நாட்களில் வாழ்ந்த தீர்க்கதரிசிகளைப் போலவே இன்றும் சில பிரசங்கிமார்கள் மனுஷருடைய மனதில் உதித்த செய்தியைப் பிரசங்கிக் கிறார்கள். அவைகள் தேவனிடத்திலிருந்து வந்த செய்தி அல்ல. எரேமியாவின் நாட்களில் வாழ்ந்த ஆசாரியர்களைப் போலவே இன்றும் சபைகளில் மூப்பர்கள் வேதாமத்தின் அதிகாரத்திற்குப் பதிலாகத் தங்கள் அதிகாரத்தை செலுத்திவருகிறார்கள். இது உண்மை என்பதை நீங்கள் நம்பவில்லை யென்றால் கீழ்க்கானும் காரியங்களைக் குறித்து ஆழ்ந்து சிந்தியுங்கள்.

சில சபைகள் கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெறாத பக்தியுள்ளவர்கள் என்னும் தவறான உபதேசத்துக்கு ஆதரவாகப் பேசுகிறார்கள். கிறிஸ்துவுக்குள் இருக்கும் ஒரு சகோதரர் ஞானஸ்நானம் என்பது ஒரு நிகழ்வல்ல. அது தங்கள் வாழ்க்கை முறையை மாற்றியிருக்கிற ஒரு செயல் முறை என்பதை உணர்

கிறார். ஞானஸ்நானம் பெறாதவர்கள் எப்படி தேவனுடைய கிருபையில் சேர்க்கப் பட முடியும்? ஆகவே வேதவாக்கியங்களின் படியாக கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவருமே அவருடைய மரணத்துக் குள்ளாக அவருடைய சபைக்குள்ளாக அவருடைய இரட்சிப்புக்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணிப்பட்டிருக்கிறோம்(ரோம 6:3; கொரி12:13;கலா 3:27; தீமோ 2:10).

சில சபைகளில் ஆராதனையின்போது இசைக்கருவிகளைப் பயன்படுத்து கிறார்கள்.ஆனால் நம்முடைய உறுதிப்பாடு இயேசுகிறிஸ்து இசைக்கருவிகளுக் குகாக மரிக்கவில்லை என்பதாகும். எனவே மாறாத நம் தேவன் அங்கீகரிக்கப் படாத ஆராதனையை எப்படியாகப் பார்க்கிறார் என்பதை நாதாப் அபியூவின் விஷயத்தில் நாம் பார்த்திருக்கிறோம்(லேவி 10:1,2). மத சம்பந்தமான நம்முடைய விசுவாசத்திற்கும் பிரயாசத்திற்கும் கர்த்தருடைற கட்டளையும் அதிகாரமும் இன்று நமக்குப் பொருந்தாதா?(கொலொ 3:17). நம் ஆராதனை கூடுகைகளில் நாடகங்கள் நடத்தவும் பெண் பிரசங்கியார்களைச் சேர்க்கவும் தேவனுடைய வார்த்தையிலிருந்து நமக்கு எங்கே அதிகாரம் கொடுக்கப்பட்டி ருக்கிறது? இதற்கான பதிலை தேவனுடைய வார்த்தையில் நாம் எங்கும் காண முடியாது.

பரவசமூட்டும் ஆராதனையை ஏறெடுக்கவேண்டும் என்னும் கோரிக்கை உண்மையான ஆராதனையை விட்டுவிடுவதற்கான அழைப்பாகும் ஆராதனை என்பது நாம் விரும்புவதைச் செய்வதா அல்லது தேவன் விரும்பு வதைச் செய்வதா? ஆராதணையில் நாம் தேவன்மீது கவனம் செலுத்தாமல் நம் மீது கவனம் செலுத்தினால் அது வெறுமனே உணர்வுப்பூர்வமான உளரளாகத் தான் இருக்கும் உண்மையான ஆராதனையானது தேவனை நோக்கி ஏறெடுக் கப்படக்கூடியதாகவும் அவருடைய சித்தத்தால் ஆளப்படக் கூடியதாகவும், ஆராதிப்பவருடைய இருதயத்திலிருந்து ஊணுணுடுத்து வரக்கூடியதாகவும் இருக்கவேண்டும்(யோவா 4:24; மத் 15:8,9). ஆராதனையில் ஒழுங்குமுறை இல்லையென்றால் தவறுகள் நடப்பதற்கு வாய்ப்புகள் அதிகம்.

எரேமியா 5:31 ம் வசனத்தில் யூதா ஜனங்கள் முடிவிலே என்ன செய்வார் கள்? என்றும் கேள்வியுடன் முடிகிறது. தேவனே இறுதி நியாயாதி பதியாக இருந்தாலும் அவருடைய சித்தத்தைத் தள்ளுகிறவர்களுக்கு, சுகமான முடிவை அவர் வாக்குத்தத்தம் பண்ணவில்லை(யோவா12:48) கர்க்கருடைய சபையில் தலைமைத்துவம் சபைக்கு புறம்பே இருக்கிறவர்களை கவர்வதற்காக சுயமாக உண்டாக்கப்பட்ட கோட்பாடுகளினால் முயற்சி செய்வது உண்மையாகவே அதிர்ச்சியைத் தருகிறது. இது சபை விசுவாசிகளுக்குப் பிரியமாயிருப்பது அதைவிட அதிர்ச்சியாயிருக்கிறது.

✞


# உங்களில் அநேகர் போதகராகாதிருப்பீர்களாக
# Be Not Many Teachers

Bonnie Rushmore

யாக்கோபு ஆசிரியர் யாக்கோபு 3:1ல் என் சகோதரரே அதிக ஆக்கினையை அடைவோம் என்று அறிந்து உங்களில் அநேகர் போதகராகாதிருப்பீர்களாக என்று அறிவுறுத்துகிறார். யாக்கோபு இந்த நிரூபத்தை எழுதிய அந்த நாட்களில் யூதர்கள் போதகர்களை உயர்வாகப் பார்த்து அவர்களுக்கு உரிய மரியாதை யையும் கனத்தையும் கொடுத்து வந்தனர். இதன் காரணமாக பல புதிய கிறிஸ்தவர்கள் சகோதரர்கள் மத்தியில் கனத்தையும் மரியாதையையும் பெறுவ தற்காக போதகராக விரும்பினார்கள். அந்நாட்களில் ஜெப ஆலயங்களில் யார் வேண்டுமானாலும் எழுந்து நின்று கொடுக்கப்பட்ட நேரத்தில் போதிக்க வாய்ப்புக் கொடுக்கப்பட்டது. புதிய ஏற்பாட்டு சீடர்கள் இந்த வாய்ப்பை அடிக்கடி பயன்படுத்தி கிறிஸ்துவையும் அவருடைய சபையையும் பற்றி யூதர்களுக்குப் போதித்தார் கள். இப்பழக்க வழக்கங்கள் தான் கொரிந்து பட்டணத்து சபையிலே பிரச்சனை கள் ஏற்படுவதற்க்குக் காரணமாக அமைந்து விட்டது. இப்பிரச்சனைக்குத் தீர்வை பவுல் 1 கொரிந்தியர் 14ம் அதிகாரத்தில் காண்கிறார். அங்கே ஆவிக்குரிய வரங்கள் தவறாகப் பயன்படுத்தப்பட்டதைக் கண்டு அப்பிரச்சனைக்கு தீர்வுகானும் விதமாக சகோதரர்களிடம் சகலமும் நல்லொழுக்கமும் கிரமமாயும் செய்யப்படக்கடவது என்று புத்திமதி சொல்லுகிறார்.

யாக்கோபு ஆசிரியர் போதிக்கும் கிறிஸ்தவர்களின் ஆசையைக் குறித்து எச்சரிக்கிறார். மேலும் அவர்கள் எவைகளைப் போதிக்கிறார்களோ அவை களுக்கு கணக்குக் கொடுக்கவேண்டுமென்று எச்சரிக்கிறார். அவர் முக்கியமாக வலியுறுத்திச் சொல்லுகிற காரியம் என்னவென்றால் நீங்கள் போதிப்பதற்கான காரணம் நீங்கள் சத்தியத்தை அறிந்திருக்கிறபடியால் அச்சத்தியத்தை மற்றவர் களிடம் பகிர்ந்துகொள்வதாக இருக்கவேண்டும். பிறர் கானும்படியாக கேட்கும் படியாக புகழும்கடியாகப் போதிக்காதீர்கள் தேவனுடைய வார்த்தையை மற்றவர்

கள் புரிந்து கொண்டு அதை அவர் கள் வாழ்க்கையில் செயல்படுத் தத்தக்கதாகப் போதனைகளை நீங்கள் போதிக்கிற வராகயிருந்தால் தான் நீங்கள் போதிக்க வேண்டும். அதற்கு ஆயத்தமாக இருங்கள்.



Burton coffman என்பவர் உங்களில் அநேகர் போதகரா காதிருப்பீர்களாக என்று சொல்லும் போது இங்கே யாக்கோபு ஆசிரியர் இப்படிப்பட்ட வேலைக்கு தகுதியா யிருப்பவர்களைச் சோர்வடையச் செய்யும்படி இதை அவர் எழுதவில் லை என்கிறார். அதேபோல் harper என்பவரும் யார்கோபு ஆசிரியரின் இவ்வார்த்தைகள் நம் பொறுப்பு களை நமக்கு நினைவு படுத்துகிறதே தவிர நம் கடமைகளை அவைகள் தடுக்கவில்லை என்கிறார்.

அப்போஸ்தலனாகிய பவுலும் I தீமோ 1 : 3-7 வசனம் பகுதிகளில் தகுதியற்ற போதகர்களை பற்றி பேசுகிறார் வேற்றுமையான உபதேசங்களால் போதியாதபடிக்கும் விசுவாசத்தினால் விளங்கும் தெய்வீக பக்திவிருத்திக்கு ஏதுவாயிராமல் தர்க்கங்களுக்கு ஏதுவாயிருக்கிற கட்டுக்கதைகளையும் முடிவில்லாத வம்ச வரலாறுகளையும் கவனியாதபடிக்கும் நீ சிலருக்குக் கட்டளையிடும் பொருட்டாக நான் மக்கெதோனியாவுக்குப் போகும்போது உன்னை எபேசு பட்டணத்திலிருக்க வேண்டிக்கொண்டபடியே செய்வாயாக கற்பனையின் பொருள் என்னவெனில் சுத்தமான இருதயத்திலும் நல்மனச் சாட்சியிலும் மாயமற்ற விசுவாசத்திலும் பிறக்கும் அன்பே. இவைளைச் சிலர் நோக்காமல் வீண்பேச்சுக்கு இடங்கொடுத்து விலகிப் போனார்கள். தாங்கள் சொல்லுகிறது இன்னதென்றும் தாங்கள் சாதிக்கிறது இன்னதென்றும் அறியா திருந்தும் நியாயப்பிரமான போதகராயிருக்க விரும்புகிறார்கள் என்கிறார்.

பவுல் தீமோத்தேயும் மற்றவர்களும் எதைப்போதிக்க வேண்டுமென்றும் எதைத் தவிர்க்கவேண்டும்மெண்றும் அறிவுறுத்தினார். சில வகையான

போதனைகள் உறுதியான கிறிஸ்தவர்களை உருவாக்கும் சில போதனைகள் தேவனுடைய பிள்ளைகளை தேவனிடத்திலிருந்து விலகிப்போகச் செய்துவிடும். தகுதிபெற்ற ஒரு போதகர் தேவனுடைய வார்த்தையை நன்றாக அறிந்து அதைப் போதிக்க வேண்டும். ஆயினும் தகுதியில்லாத போதகர்கள் போதகரயிருப்ப தினால் கிடைக்கும் புகழ்ச்சிக்காக ஆசைப்படுகிறார்கள் அவர்களுக்கு தேவனு டைய வார்த்தை தெரியாது அவர்கள் வீணான ஆதாரமற்ற நம்பிக்கைகளைப் பற்றி விவாதித்துக்கொண்டு தங்கள் நேரத்தைச் செலவு செய்கிறார்கள்.

யாக்கோபின் வார்த்தைகளோ அல்லது பவுலின் வார்த்தைகளோ கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவின் வார்த்தைகளை நிறைவேற்றும் காரியங்களிலிருந்து விலக்கு அளிப்பதில்லை(மதி 28:19,20). ஆகையால் நீங்கள் புறப்பட்டுப்போய் சகல ஜாதிகளையும் சீஷராக்கி பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளம்படி அவர்களுக்கு உபதேசம்பண்ணுங்கள். இதோ உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார் . ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் இழந்துபோனவர்களைப் போய் சந்தித்து அவர்களை கிறிஸ்துவினிடத்தில் கொண்டு சேர்க்கும் பொறுப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு கிறிஸ்தவனும் ஒருவர் இரட்சிக்கப்பட என்ன செய்ய வேண்டுமென்று சொல்லவேண்டும் இது நம்முடைய விருப்பத்தின் படியானதல்ல; மாறாக, இது நாம் செய்யும்படியான கட்டளையாயிருக்கிறது (மாற்16:15,16; லூக் 24:46 ; அப் 1:8 ;1பேது 3:15).

யாக்கோபு பவுலும் போதகர்கள் தாங்கள் எதைப் போதிக்கிறார்களோ அதைச் குறித்து எச்சரிக்கையாயிருக்க வேண்டும் போதிக்கிறவர்கள் அதின்படி நியாயந்தீர்க்கப்படுவார்கள். போதகர்களான நாம் மற்றவர்களுக்குப் போதிக்கும் சத்தியத்திற்குப் பொறுப்பாளிகளாயிருக்கிறோம் அதேபோல் நாம் ஒருவேளை எதையாவது தவறாகப் போதித்தால் அதற்கும் நாம் தான் பொறுப்பாளிகளா யிருக்கிறோம் நாம் தவறான உபதேசத்தைப் போதித்து போதிக்கப்பட்ட ஆத்துமா நியாயத்ர்ப்பின் நாளிலே ஆக்கினைக்குள்ளாகத் தீர்ப்பார் போதகர்களுக்கு சத்தியத்தை அறிந்து சத்தியத்தை மாத்திரம் போதிக்கும் மிகப்பெரிய பொறுப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது.

இந்த எச்சரிப்பின் வார்த்தைகள் தேவனுடைய வார்த்தைளை உச்சரிக்கும்

பிரசங்கியார்கள், வேதவகுப்பு ஆசிரியர்கள் இலக்கியப்பணி மூலமாக ஊழியம் செய்பவர்கள் ஆகிய எல்லோருக்கும் பொருந்தும். கத்திமுனையை விட பேனா முனை வலிமை வாய்ந்தது என்னும் பழமொழி இன்றும் உண்மையா யிருக்கிறது. உண்மையுள்ள கிறிஸ்தவர்களுடைய கையில் கொடுக்கப்பட்ட தேவனுடைய வார்த்தை வல்லமையான ஆயுதமாயிருக்கிறது.அச்சிடப்பட்ட கைப்பிரதிகள், பத்திரிக்கைகள் மூலமாகப் பலர் கிறிஸ்துவுக்காக ஆதாயப்படுத்தப்பட்டிருக்கிறார்கள்.

எல்லோருக்கும் வாய்மொழியாக தேவனுடைய வார்த்தையைப் போதிக்கும் வாய்ப்புக் கிடைப்பதில்லை. சிலர் போதிக்கும்படியான தேவனுடைய கட்டளையை நிறைவேற்ற அச்சிடப்பட்ட கைப்பிரதிகளை புத்தகங்களைப் பயன் படுத்துகிறார்கள். வாய் ரீதியிலான பிரகங்கங்கள் போய்ச்சேரமுடியாத இடங்களில் கூட எழுத்து வடிவிலான தேவச் செய்திகளை வாசிப்பவர்கள் தங்கள் நேர வசதிக்கேற்ப பயன்படுத்திக் கொள்ள முடியும். இது வாய் ரீதியிலான பிரசங்களில் சாத்தியமில்லை.

எழுத்து வடிவிலான தேவச் செய்திக்கும் யாக்கோபு 3:1 ம் வசனம் பொருந்தும். என் சகோதரரே அதிக ஆக்கினையை அடைவோம் என்று அறிந்து உங்களில் அநேகர் போதகராகாதிருப்பீர்களாக . இலக்கியப் பணியில் எழுத்தாளர்களாக நாம் எண்ணற்ற ஆத்துமாக்களைச் சந்திக்கிறோம். ஒரு பத்திரிக்கை அல்லது கைப்பிரதி ஒருவருக்குக் கொடுக்கப்படும். ஆனால், அதை எத்தனை பேர் படிக்கிறார்கள் என்பது நமக்குத் தெரியாது. அல்லது எத்தனை பேர் மீது அது தாக்கத்தை ஏற்படுத்துகிறது என்பதும் நமக்குத் தெரியாது. தேவனை எழுத்து வடிவில் அறிவிக்கும் நாம், அதை அநேகர் படிக்கிற படியால் நாம் தேவனுடைய வார்ததையை மாத்திரம் போதிக்கிறோம் என்பதை உறுதி செய்ய வேண்டும். நாம் பதிவு செய்யும் அபிப்ராயங்கள், யூகங்கள் மற்றும் எண்ணங்களுக்கு வேதாகம ஆதாரங்கள் இல்லை யென்றால், இக்கருத்தை வேதவசனங்களால் நிரூபிக்க முடியவில்லை என்று வெளிப் படையாக அறிவித்து விட வேண்டும். நாம் பதிவு செய்யும் எந்தவொரு கருத்தை யும் விபரமாக ஆராய்ந்த பிறகே அதை எழுத்து வடிவில் வெளிக்கொணர வேண்டும். ஆகவே, அதிக ஆக்கினை அடையும்படி அநேகர் போதகராகாதிருப்பீர்களாக!

✞


# ஒரு சந்திப்பு என்ன செய்தது

## What one Visit Did

Pat Stephenson

நான் வசித்த பட்டணத்தில் கூடிவந்த சபையில் " வீடு சந்திப்புத் திட்டம் " என்று ஒன்றிருந்தது. அதைக் குறித்து ஆலோசிப்பதற்காக, திட்டமிடுவதற்காக செவ்வாய் கிழமை இரவுகளில் சபை அங்கத்தினர்களில் சிலர் கூடுவது வழக்க மாயிருந்தது. அதில் இரு சகோதரர்கள் சபைக்கு சரியாக வராத ஒரு குடும்பத் தைப் போய் சந்திக்கும் படியாக அறிவுறுத்தப்பட்டார்கள். அச்சகோதரர்களும் அக்குடும்பத்தைப் போய்ச் சந்தித்தார்கள். அது ஓர் அருமையான சந்திப்பாயிருந்தது. அடுத்த நாள் இரவே அக்குடும்பம் வேதபாட வகுப்புக்கு வந்தார்கள். அவ்வார ஞாயிற்றுக் கிழமையே அவர்கள் சபையோடு சீர்பொருந்தி மீண்டும் பழைய நிலைக்குத் திரும்பினார்கள்.

அடுத்த வீடு சந்திப்பு நிகழ்ச்சி வந்தபோது, மீண்டும் பழைய நிலைக்குத்



திரும்பிய அக்குடும்பத்தின் தலைவர் அந்நிகழ்ச்சிக்கு வந்திருந்தார். சிலர் அவரை அங்கே பார்த்து ஆச்சரியப்பட்டார்கள். உடனே அவர் எல்லோரையும் பார்த்து " ஒரு சந்திப்பு என்னிலும் என் குடும்பத்திலும் எப்படிப்பட்ட தாக்கத்தை ஏற்படுத்தியது என்பதை நான் அறிவேன், ஆகையால், நாம் மற்றொரு வரைச் சந்தித்து அவருக்குத் தேவையான உற்சாகத்தை என்னால் கொடுக்க முடியும் " என்றார்.

சபையில் " வீடு சந்திப்புத் திட்டம் " தொடர்ந்த வரை அந்த விசுவாசி அத்திட்டத்தில் உண்மையாகவும், சிறப்பாகவும் செயல்பட்டார். அத்திட்டம் வித்தியாசமான அணுகுமுறைக்காக கைவிடப்பட்ட பிறகும்கூட, வீடு சந்திப்புத் திட்டத்தில் நம்பிக்கைக்குப் பாத்திரமாக நடந்துகொண்டார். அவர் மனைவி வேதபாட வகுப்பு ஆசிரியையாக மாறினார். இரண்டு சகோதரர்களுடைய வீடு சந்திப்பினால் இது நடந்தது. நாம் ஒரு குடும்பத்தைச் சந்திக்கும் போதெல்லாம் இப்படி நடக்காது. ஆனாலும் அவ்வப்பொழுது இப்படி நடக்கவே செய்கிறது. எப்படிப் பார்த்தாலும் வீடு சந்திப்புத் திட்டம் நாம் எல்லோரும் கலந்துகொள்ள வேண்டிய விலைமதிப்புள்ள நடவடிக்கையாயிருக்கிறது.

மேலும், அன்புக்கும் நற்கிரியைகளுக்கும் நாம் ஏவப்படும்படி ஒருவரை யொருவர் கவனித்து, சபை கூடிவருதலைச் சிலர் விட்டுவிடுகிறதுபோல நாமும் விட்டுவிடாமல், ஒருவருக்கொருவர் புத்திசொல்லக்கடவோம்; நாளானது சமீபித்து வருகிறதை எவ்வளவாய்ப் பார்க்கிறீர்களோ அவ்வளவாய்ப் புத்தி சொல்லவேண்டும் (எபி.10:24,25).

## கிறிஸ்தவன் என்பவன்

கிறிஸ்து சிந்திக்கும் மனதாயிருக்கிறான்

கிறிஸ்து நேசிக்கும் இதயமாயிருக்கிறான்

கிறிஸ்து பேசும் குரலாயிருக்கிறான்

கிறிஸ்து உதவும் கரமாயிருக்கிறான்

## ஒருவரையும் சுட்டிக்காட்டாமல் எதையாவது பிரசங்கிப்பது சாத்தியமா?

## Is It Possible to Preach and Not Bother Somebody?

Max Patterson

ஜனங்களைத் தனியாக அல்லது ஒரு ஓரமாக விட்டுவிட்டு சத்தியத்தை மட்டும் ஏன் நீங்கள் பேசக்கூடாது? என்ற விமர்சனங்களிலிருந்து எந்தவொரு பிரசங்கியாரும் தப்பித்திருக்க முடியாது. இது சாத்தியமா? யாரையும் சுட்டிக் காட்டாமல் பிரசங்கிப்பது சாத்தியமா?

மற்றவர்களை சுட்டிக்காட்டாமல் விட்டுவிட்டு உலகத் தன்மையிலிருந்து நாம் விலகியிருக்க வேண்டுமென்று என்னால் பிரசங்கிக்க முடியுமா? முடியாது, ஏனென்றால், உலகத்தன்மையில் மூழ்கி, " பொல்லாங்காய்த் தோன்றுகிற எல்லாவற்றையும் விட்டு விலகுங்கள் " என்று சொல்லப்பட்டிருக்கிற வசனத்தைக் கண்டு கொள்ளாமல் அநேகர் இருக்கிறார்கள் (I தெச 5:22 ; I யோவா 2:15 – 17).

மற்றவர்களை சுட்டிக்காட்டாமல் விட்டுவிட்டு, சபை கூடிவருதலை விட்டுவிடாதிருங்களென்று நான் எப்படிப் பிரசங்கிக்கமுடியும்? முடியாது. ஏனென்றால், சபை கூடிவருதலை விட்டு விடாதீர்கள் என்று நமக்குத் கட்டளை யிடப்பட்டிருப்பது உண்மையாக இருந்தாலும் கூட, பலர் சபை கூடிவருதலை விட்டுவிடுகிறார்கள் (எபி. 10:25).

மற்றவர்களை சுட்டிக்காட்டாமல் விட்டுவிட்டு ஒரே ஞானஸ்நானத்தைப்பற்றி பிரசங்கிக்க முடியுமா? முடியுமா? முடியாது. ஏனென்றால், மத உலகினர் அநேக ஞானஸ்நானங்களை ஆதரித்துப் பேசுகிறார்கள். ஆனால், வேதவசனங்கள் ஒரே ஞானஸ்நானத்தைப் பற்றிதான் பேசுகிறதென்பதையும் (எபி. 4:5), அது பாவமன்னிப்புக்கானது என்பது பற்றியும் பலர் கண்டுகொள்ளாம லிருக்கிறார்கள் (அப். 2:38; 22:16).

மற்றவர்களை சுட்டிக்காட்டாமல் விட்டுவிட்டு சபையைப்பற்றி பிரசங்கிக்க முடியுமா? முடியாது. ஏனென்றால், பலர் சபை முக்கியமானது என்று உணர்வதில்லை. கர்த்தர் சபைக்காக சிலுவையில் மரித்தார் என்பது உண்மையாயிருந்தாலும் கூட இப்படிப்பட்ட மக்கள் சபை முக்கியமானது என்பதை உணராதிருக்கிறார்கள் (அப். 20:28).

நான் என்னைப்பற்றிப் பிரசிங்கிக்கலாம். என் அனுபவங்கள், உணர்வுகள், அபிப்பிராயங்கள் போன்றவற்றைப் பிரசங்கிக்கலாம். இதன் நோக்கம் எல்லாம் மனிதரைப் பிரியப்படுத்துவதற்குத்தான். ஆகவே, அதை என்னால் செய்ய முடியாது. நான் மனுஷரைப் பிரியப்படுத்துகிறவனாயிருந்தால், தேவனைப் பிரியப்படுத்தமுடியாது ( கலா.1:10 ). அதன் காரணமாக நான் ஊழியத்தை விட்டுவிட்டுப் போகவேண்டியதாயிருக்கும். என்னால் அதையும் செய்ய முடியாது. " நான் சுவிசேஷத்தைப் பிரசங்கியாமற்போனால் எனக்கு ஐயோ ".

எனவே, நான் என்ன செய்யப்போகிறேன் என்பதை உங்களுக்குச் சொல்லுகிறேன். நான் பல வருடங்களுக்கு என்ன செய்யும்படியாகத் தீர்மானித்தேனோ அதைச் செய்யப்போகிறேன். நான் சத்தியமாகிய சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கப்போகிறேன். ஜனங்கள் சத்தியத்தைக் குறித்துக் கோபப்பட்டால் அவர்கள் தேவனுக்குப் பதில் சொல்ல வேண்டும் இவ்வுலக வாழ்க்கையில் பதில் சொல்லவில்லையென்றாலும் கூட நியாயத்தீர்ப்பில் அவர்கள் தேவனுக்குப் பதில் சொல்லியே ஆக வேண்டும். நாம் சத்தியத்தைக் குறித்துக் கோபப்படுகிறோமோ இல்லையோ நாம் நியாயத்தீர்ப்பின் நாளில் தேவனை எதிர் கொள்ளவேண்டும்.

---

## " நான் நானே "

**நான்** நானே கர்த்தர்
என்னையல்லாமல் இரட்சகர் இல்லை
**நானே** அறிவித்து இரட்சித்து விளங்கப்பண்ணுவேன்
**நான்** தேவன் என்பதற்கு நீங்கள் எனக்கு சாட்சிகள்
**நானே** உங்கள் பரிசுத்தராகிய கர்த்தர்.

# நான் யாருக்காக ஜெபித்தேன் என்பதைத் தேவன் அறிவார்

Janet Jenking

அது ஒரு ஞாயிற்றுகிழமையாயிருந்தது. என்னையும், என் மகன் மற்றும் மருமக ளையும் விருந்துக்காக அழைத்திருந்தார்கள். ஆகாரம் மேஜையில் வைக்கப்பட்ட பிறகு ஆறு, மற்றும் எட்டு வயதுள்ள என் பேரன்களும் அங்கே வந்து உட்கார்ந்தார்கள். அவர்கள் என் கணவனுக்கும் எனக்கும் எதிரே உட்கார்ந்தார்கள். அப்போது என் மகன் சிறிய பேரனை ஜெபிக்கும்படியாகக் கேட்டுக்கொண்டார். நாங்கள் அப்போது தான் ஆராதனையிலிருந்து வந்திருந்தோம். ஆராதனையில் கடைசியாக சபையின் அறிவிப்புகளைஅறிவித்தவர் வியாதியஸ்தர்களுக்காக ஜெபிக்கும்படி கேட்டுக்கொண்டார். அவர் குறிப்பாக, மிகவும் வியாதியாயிருந்த ஹேரி என்பவருக்காக ஜெபிக்கும்படி கேட்டுக் கொண்டார்.

ஆகாரத்திற்காக ஜெபித்துக்கொண்டிருந்த என் பேரன் சபையில் வியாதிப்பட்டிருந்தவர்களுக்காகவும் ஜெபித்தான். ஆனால், ஜெபத்தில் ஹேரி என்பதற்குப் பதிலாக வேறொரு பெயரை பயன்படுத்திவிட்டான். ஜெபம் முடிந்தபிறகு அவனுடைய தாய் நீ ஜெபத்தில் தவறான பெயரைப் பயன்படுத்தி விட்டாய் என்றாள். ஆனால், அச்சிறு பையன் எவ்வித பதட்டமும் இல்லாமல் தன் தாயைப் பார்த்து, " அது ஒன்றும் பிரச்சினை இல்லை அம்மா, நான் யாரைக் குறிப்பிட்டேன் என்பதை தேவன் அறிவார் " என்றான்.

நான் அச்சிறுவனை அமைதியாய் பார்த்துக்கொண்டிருந்தபோது. சிறுபிள்ளைகளைப் பற்றிய தேவனுடைய வார்த்தைகளை நினைத்துப் பார்த்தேன். ''ஒரு சிறுபையன் அவைகளை நடத்துவான் ''என்னும் வசனம் நினைவுக்கு வந்தது ( ஏசா 11:6 ). ஜெபத்தில் நம் விசுவாசம் இச்சிறுபையனைப் போலிருக்க வேண்டும். நாம் தேவனிடத்தில் ஜெபத்தில் எதையாவது வேண்டிக்கோள்ளும்போது அதில் ஏதாவது தவறு நேர்ந்தால் நாம் என்ன பொருள்படும்படி வேண்டிக்கொண்டோம் என்பதை தேவன் அறிவார். ஆம், தேவன் சர்வ ஞானியாயிருக்கிறார்.

✝

# சபை கூடிவருதலை விட்டுவிடுதல்

## Forsaking the Assembly of ourselves Together

Wayne Barrier

சபை கூடிவருதலில் ஏற்படும் பிரச்சனைகளுக்குத் தீர்வு காணும் வசனப்பகுதிகளில் முக்கியமான வசனப்பகுதி எபிரெயர் 10:25 ஆக இருக்கிறது. இவ்வசனப்பகுதி " சபை கூடிவருதலைச் சிலர் விட்டு விடுகிறதுபோல நாமும் விட்டுவிடாமல் ஒருவருக்கொருவர் புத்தி சொல்லக்கடவோம் " என்று கூறுகிறது. இவ்வசனம், சபை எப்பொழுதெல்லாம் கூடிவருகிறதோ அப்பொழுதெல்லாம் சகோதர, சகோதரிகள் ஒன்றுகூட வேண்டுமென்று நேரடியாகச் சுட்டிக்காட்டிய போதும்கூட, வருகை குறைவாகவே இருக்கிறது. உதாரணமாக, ஞாயிறு காலை ஆராதனையில் கலந்துகொள்பவர்களில் பாதிப்பேருக்குக் கூடுதலாக வாரத்தின் இடைப்பட்ட நாளில் நடக்கும் வேத ஆராய்ச்சி வகுப்புகளில் கலந்து கொள்வ தில்லை. ஞாயிறு மாலை ஆரதனையிலும் நிலைமை இப்படியாகத்தான் இருக் கிறது. சில சபைகள் மாத்திரமே இப்படிப்பட்டவைகளுக்கு விதிவிலக்காய் காணப் படுகின்றன. ஏன் இப்படி நடக்கிறது? ஏனென்றால், சகோதர, சகோதரிகள் சபை கூடிவருதலை விட்டுவிடுவதினால் ஏற்படும் மோசமான விளைவுகளைச் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை என்று நான் நம்புகிறேன்.

முதலாவது, வசனம்.24. " அன்புக்கும் நற்கிரியைகளுக்கும் நாம் ஏவப்படும்படி ஒருவரையொருவர் கவனித்து " என்று சொல்லுகிறது. வாரம் தவறாமல் உண்மையாகச் சபை கூடிவரும் சகோதரசகோதரிகள் அன்புக்கும் நற்கிரியைகளுக்கும் ஏவப்படுகிறார்கள். சிலர், சகோதர சகோதரிகளைச் சந்திக் காமலேயே, தாங்களாகவே அன்புக்கும் நற்கிரியைகளுக்கும் ஏவப்படுவதாகச் சொல்கிறார்கள். ஆனால், சபைகூடிவருவதென்பது மற்றவர்களை ஏவும் படியாக இருக்கிறதினால் அது மிகவும் அவசியமாயிருக்கிறது. சபையாக கூடி வரும்போது நாம் ஒருவரையொருவர் உற்சாகப்படுத்துகிறோம், பலப்படுத்து கிறோம். எனவே, சபைகூடிவருதலை விட்டுவிடுகிறவர்கள் சுயநலமாக, சகோதர

சகோதரிகளை உற்சாகப்படுத்துவதை அலட்சியப்படுத்துகிறார்கள். சபை கூடி வர நாம் எல்லோரும் அவசியப்படுகிறோம்.

26 ம் வசனம் " சத்தியத்தை அறியும் அறிவை அடைந்தபின்பு நாம் மனப்பூர்வமாய்ப் பாவஞ்செய்கிறவர்களாயிருந்தால், பாவங்களினிமித்தம் செலுத்தத்தக்க வேறொரு பலி இனியிராமல் " என்று சொல்லுகிறது. எபிரெய ஆசிரியர் " தேவனுடைய குமாரனைக் காலின் கீழ் மிதித்து தன்னைப் பரிசுத்தஞ் செய்த உடன்படிக்கையின் இரத்தத்தை அசுத்தமென்றெண்ணி, கிருபையின் ஆவியை நித்திக்கிறவன் எவ்வளவு கொடிதான ஆக்கினைக்குப் பாத்திரவானாயிருப்பான் என்பதை யோசித்துப்பாருங்கள் " என்று 29 ம் வசனத்தில் சொல்கிறார்.

30,31-ம் வசனங்கள் உண்மையற்றவர்களைத் தேவன் நியாயந்தீர்ப்பார் என்றும் எச்சரிக்கிறது. குறிப்பாக வசனம்.31, " ஜீவனுள்ள தேவனுடைய கைகளில் விழுகிறது பயங்கரமாயிருக்குமே " என்று சொல்லுகிறது. இவ்வசனங்களெல்லாம் சபைகூடி வருதலை விட்டுவிடுகிறவர்கள் தேவனுக்கு விரோதமாகவும், சகோதர சகோதரிகளுக்கு விரோதமாகவும் மனப்பூர்வமாகப் பாவஞ்செய்கிறார்களென்றும், இயேசு கிறிஸ்து தங்களுக்காகச் செய்த தியாகத்தை அவமதிக்கும் விதத்தில் அவரைக் காலின்கீழ் மிதிக்கிறார்களென்றும் எச்சரிக்கிறது.

சபைகூடிவருதலை விட்டுவிடும் பாவம் ஒருவரை கிருபையிலிருந்து விழச் செய்கிறது. ஒருவரை ஆக்கினைத்தீர்ப்புக்குள்ளும், தண்டனைக்குள்ளும் வழிநடத்துகிறது ( வச. 27,28 ). இது மிகவும் முக்கியமான செய்தி. இதை நன்றாகப் போதிக்கவும், புரிந்து கொள்ளவும் வேண்டும்.

---

**சில வேளைகளில் கர்த்தர் பெருங்காற்றை அமைதிப்படுத்துகிறார்; சில வேளைகளில் பெருங்காற்றை கோரதாண்டவமாடச் செய்து தம்முடைய பிள்ளைகளை அமைதிப்படுத்துகிறார்.**

## வாகனம் நிறுத்துமிடத்திலிருந்து ஆரம்பமாகிறது

# It Starts in the Parking Lot

Bruce Mc Larty

**நா**ன் சமீபத்தில் அமெரிக்காவிலுள்ள ஜார்ஜியா மாகாணத்தில் ஊழியஞ்செய்யும் Andy Stanley என்பவருடைய பேட்டியை வாசித்தேன். Stanley ஞாயிற்றுக் கிழமைகளில் 5000 பேருக்கு பிரசங்கிக்கிறார். பேட்டியின் போது பேட்டி எடுப்பவர் ஊழியரிடம் " ஆராதனையில் உங்கள் பிரசங்கம் தான் முக்கியப் பங்கு வகிக்கிறதா? "

அதற்கு ஊழியர் Andy Stanley- சொன்ன பதில் ஞானமுள்ள தாயிருந்தது. " நான் அடிக்கடி ஜனங்களிடம், பிரசங்கம் வாகனம் நிறுத்துமிடத்தி லிருந்துதான் ஆரம்பமாகிறது, நீங்கள் தான் பிரசங்கத்திற்கு அறிமுகமாக அல்லது முகவுரையாக இருக்கிறீர்கள் என்று சொல்வதுண்டு " என்று சொன்னார். ஆராதனைக்குப் புதிதாக பார்வையாளர்களாக வருகிறவர்களி டத்தில் சபை ஒரு நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தவில்லையென்றால் தன்னுடைய பிரசங்கத்தைக் கேட்கமாட்டார்கள் என்பது அவருடைய நம்பிக்கையாக இருந்தது.

இப்பிரசங்கியாரின் உள்நோக்கம், நாம் சபை கட்டடத்திற்குள் நுழைவதற்கு முன்பாக, வாகனங்களை நிறுத்தி நம் வேதாகமம் மற்றும் பாடல் புத்தகங் களை எடுக்கும் நேரத்தில் புதிதாக சபைக்கு வருபவர்களிடத்தில் நாம் எவ்வித மாக நடந்துகொள்ளுகிறோம் என்பது தான் முக்கியம் என்பதாகும். ஏனென்றால் நம் மனம் சபைக்கு புறப்படும் சிந்தையில் நிரப்பப்பட்டிருப்பதாலும், அதனால் ஏற்படும் குழப்பத்தினால் நிரப்பப்பட்டிருப்பதாலும் ( அதுவும் குழந்தைகளை வைத்துக்கொண்டு புறப்படுவதாக இருந்தால் அவ்வளவுதான் ) நாம் புதியவர்களைச் சந்திக்கும் விதமும், வாழ்த்தும் விதமும் தான் பிரசங்கத்தின் ஒரு பகுதியாக ( பெரும் பகுதியாக ) இருக்கும். இவைகளை மனதில் கொண்டவர் களாக, கீழ்காணும் வழிகளை நாம் கைக்கொண்டால் பிரசங்க முகவுரையை மேம்படுத்த ஏற்றதாயிருக்கும்.

* வாகனத்தை நிறுத்துமிடத்திலேயே புதுமுகங்களைத் தேடுங்கள்.

⋆ உங்களுக்குத் தெரியாதவர்களிடத்தில் பேசும் திறமையை அறிமுகப்படுத்தி அவர்களை வரவேற்றிடுங்கள்.

⋆ அவர்களுக்கு குழந்தைகள் இருந்தால் அவர்களுக்கு வேதபாடங்களைப் போதிக்கும் தருணங்களைத் தேடுங்கள்.

⋆ சபை கட்டடத்திற்கு நீங்கள் ஒன்றிணைந்து போகும் போது, உங்களுக்குத் தெரிந்துவர்களிடம் உங்கள் நண்பர்களை அறிமுகப்படுத்துங்கள்.

**" இது போன்ற அக்கறையற்ற, நட்பற்ற சபையை நான் பார்த்ததேயில்லை ". " என் வாழ்க்கையில் நான் இதுவரை போன சபைகளில் இதுபோல் அக்கறையும், அரவணைப்பும் உள்ள சபை வேறெதுவுமில்லை "** போன்ற வாக்கியங்களுக்கு இடையிலுள்ள வித்தியாசத்தை ஏற்படுத்த ஒரே ஒரு நபர் போதுமென்று நான் ஒத்துக்கொள்கிறேன்.

**" கர்த்தருடைய ஆலயத்திற்குப் போவோம் வாருங்கள் என்று எனக்கு அவர்கள் சொன்னபோது மகிழ்ச்சியாயிருந்தேன்"** (சங். 122 : 1). ✝

---

## இவைகளில் வளரவேண்டும்

★ விசுவாசத்தில் முதிர்ச்சி அடைந்து வளரவேண்டும்

★ நம்பிக்கையில் வளரவேண்டும்

★ பொறுமையில் வளரவேண்டும்

★ நன்றியாய் இருப்பதில் வளர வேண்டும்

★ ஞானத்தில் வளரவேண்டும்

★ சேவை செய்வதில் வளரவேண்டும்

★ மகிழ்ச்சியாய் இருப்பதில் வளரவேண்டும்

★ பிறருக்கு உதவி செய்வதில் வளரவேண்டும்

★ போதுமென்ற மனதோடு திருப்தியடைவதில் வளரவேண்டும்

★ தேவனுக்குள் வளரவேண்டும்

# பழங்கால மற்றும் நவீனகால விக்ரகாராதனை

# IDOLOTRY, ANCIENT AND MODERN

RONALD BRYANT

இதைச் சிந்திக்கவே பயமாயிருக்கிறது. ஏனெனில் ஒவ்வொரு மனித இருதயமும் விக்கிரகத் தொழிற்சாலையாக மாறும் வாய்ப்புள்ளது!

விக்கிரகம் என்பது மனிதனால் பக்தியின் அடிப்படையில் அமைக்கப்பட்ட ஓர் அமைப்பு. பழங்கால விக்கிரகாராதனையாக இருந்தாலும் சரி நவீன கால விக்கிரகாராதனையாக இருந்தாலும் சரி அது தேவனைவிட்டு விலகி தேவனுக்கு மாற்றாக ஒன்றைத் தழுவிக்கொள்வதாகும். சுவாரஸ்யமாக, பெரும்பாலான மக்கள் தங்கள் சரீரங்களிலிருந்தே விக்கிரகங்களை உண்டாக்குகிறார்கள் எப்படியெனில் வயதாகும் தோற்றத்தை ஏற்க மறுத்து என்றென்றும் இளமையாக இருக்கவேண்டுமென்ற ஏக்கத்தில் வெளிப்படுத்தப்படுகிறது. பணம் இருந்தபோதிலும் செல்வாக்கு மகிழ்ச்சி போன்றவற்றை தான் நவீன காலத்தின் பிரபல மான விக்கிரகங்களாக இருக்கின்றன.

ஜனங்கள் ஏன் தேவனை விட்டுவிட்டு விக்கிரகங்களைத் தெரிந்து கொள்கிறார்கள்? இதற்கான வெளிப்படையான காரணம் தேவனுக்கு கணக்குக் கொடுப்பதிலிருந்து விடுபடுவதற்காகத்தான் நம்முடைய விருப்பப்படி நாம் தேவனை சந்திக்க முடியாது. ஆனால் நம்முடைய விருப்பத்தின்படி நாம் விக்கிரகத்தைச் சந்திக்க முடியும். விக்கிரகம் என்பது மனிதனுடைய படைப்பாக இருக்கிறபடியால் அது முற்றிலும் நம் கட்டுப்பாட்டிற்குள்ளிருக்கிறது. நாம் விரும்பும்போதெல்லாம் அதை ஒரமாக வைக்க முடியும் அல்லது முற்றிலும் அகற்றிவிடவும் முடியும். விக்கிரகங்களை நாம் மாற்றிக்கொள்ளவும் முடியும். தேவ னை நாம் அப்படிச் செய்ய முடியாது. எரேமியா தீர்க்கதரிசி விக்கிரகங்கள் பேச மாட்டாதவைகள் அவைகள் நடக்க மாட்டாததினால் சுமக்கப்படவேண்டும் அவை களுக்குப் பயப்படவேண்டாம் என்று சொல்லுகிறார்(எரே 10:5) அவைகள் நம்மை அச்சுறுத்துவதில்லை அவைகளால் நமக்கு நன்மையுமில்லை தீமையு

மில்லை. விக்கிரகங்கள் சத்தியத்தையும் தேவனுடைய சித்தத்தையும் எதிர் கொள்வதிலிருந்து தப்பித்துக்கொள்வதற்காகப் பயன்படுத்தப்படுகிறது. விக்கிரகங்களைச் சேவிக்கிறவர்களுக்கு வேற எதையும் எதிர்கொள்ள தேவை யில்லை விக்கிரகங்களின் வசீகரமே இதுதான்.

இருந்தபோதிலும் விக்கிரங்களைச் சேவிப்பதினால் விளைவுகளுண்டு. விக்கிரகங்களை சேவிப்பவர்கள் அவைகளைப் போலவே செத்தவர்களாயிருக் கின்றனர். அவர்கள் தாங்கள் மாபெரும் பார்வையை அடைந்தவர்களாக எண்ணிக்கொண்டு உண்மையாகவே குருடராயிருப்பதை அறியாமலிருக் கிறார்கள். அவர்கள் தேவனை நிராகரித்தபடியால் அவர்கள் கலக்கமுள்ள மன சாட்சியின் படி வாழ்ந்து கொண்டிருந்தாலும் தங்கள் இழிநிலையின் ஆழத்தை அறியாமலிருக்கிறார்கள் அவர்களுடைய பங்கில் பாவம் அல்லது குற்றம் மறுக்கப்படுகிறது.அவர்களுடைய பாவம் நீக்கப்படுவதுமில்லை குறைக்கப் படுவதுமில்லை உடனடியாகவோ அல்லது பின்போ அக்குற்றங்கள் தங்கள் தொடர் எண்ண ஓட்டத்தில் வெளிப்படும். அவைகள் தீங்குள்ளதாக சீர்கேடான வைகளாக இருப்பதுமல்லாமல் கொடுமையும் அழிவும் நிறைந்ததாய்க் காணப்படும்.

விக்கிராராதனை என்பது ஒன்றுமறியாமல் குறும்புத்தனமாகச் செய்யும் செயலோ அல்லது மாற்றுப்பாதையோ அல்ல. அது எல்லாவடிவத்திலும் தேவ னுக்கு விரோதமாகவும், தேவனை நிராகரிக்கும் ஒரு செயலுமாகும். இதன் காரணமாகவே உலகத்தன்மை என்பது வெளிப்படையாகவே விக்கிராராத னையாகக் காணப்படுகிறது. இதன் காரணமாகவே, மிகக் கடுமையான வேதாகம எச்சரிப்பு விடுக்கப்படுகிறது. **உலக சிநேகம் தேவனுக்கு விரோதமான பகையென்று அறியீர்களா?** ஆகையால் **உலகத்துக்குச் சிநேகிதனாயிருக்க விரும்புகிறவன் தேவனுக்குப் பகைஞனாகிறான்** (யாக் 4:4) என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்க வேண்டாம். மேலே வானத்திலும் கீழே பூமியிலும் பூமியின் கீழ்த் தண்ணீரிலும் உண்டாயிருக்கிறவைகளுக்கு ஒப்பான ஒரு சொரூபத்தையாகிலும் யாதொரு விக்கிரகத்தையாகிலும் நீ உனக்கு உண்டாக்க வேண்டாம்; நீ அவைகளை நமஸ்கரிக்கவும் சேவிக்கவும் வேண் டாம்; உன் தேவனாகிய கர்த்தராயிருக்கிற நான் எரிச்சலுள்ள தேவனாயிருந்து என்னைப் பகைக்கிறவர்களைக் குறித்துப் பிதாக்களுடைய அக்கிரமத் தைப் பிள்ளைகளிடத்தில் மூன்றாம் நான்காம் தலைமுறை மட்டும் விசாரிக்கிற வராயிருக்கிறேன் (யாத் 20:3-5).

✝

# பாடல்
# Song

**ந**ம் ஆண்டவர் பஸ்கா பண்டிகையின்போது பந்தியை ஏற்படுத்தினபிறகு அவர் அப்போஸ்தலர்களோடு சேர்ந்து ஸ்தோத்திரப்பாட்டைப் பாடினபின்பு ஒலிவமலைக்குப் புறப்பட்டுப்போனார்கள் ( மத். 26:30 ). அவர்கள் எதைப் பாடினார்கள் என்று நமக்குத் தெரியாது. அதேபோல் யார் பாடலில் வழிநடத்தினார் என்பதும் நமக்குத் தெரியாது.

பவுலும் சீலாவும் பிலிப்பி பட்டணத்திலிருந்த சிறைச்சாலையில் அடைக்கப் பட்டார்கள். அவர்கள் கால்களைத் தொழுமரத்தில் மாட்டிவைத்தார்கள். இருந்த போதிலும் நடுராத்திரியிலே பவுலும் சீலாவும் ஜெபம்பண்ணி, தேவனைத் துதித்துப் பாடினார்கள். (அப்.16:24,25).

உங்களில் ஒருவன் துன்பப்பட்டால் ஜெபம்பண்ணக்கடவன்; ஒருவன் மகிழ்ச்சியாயிருந்தால் சங்கீதம் பாடக்கடவன் ( யாக். 5:13). நாம் ஆவியோடும் கருத்தோடும் பாடவேண்டும் ( I கொரி 14:15 ). நாம் சங்கீதங்களையும், கீர்த்தனைகளையும், ஞானப்பாட்டுக்களையும் பாடவேண்டும் ( எபே.5:19; கொலோ.3:16).

கிறிஸ்தவம் பாடும் மார்க்கமாயிருக்கிறது. புதிய ஏற்பாட்டு கால கட்டங்களில் ஒவ்வொரு கிறிஸ்தவனும் ஒரு ஆசாரியனாக பாடல் பாட வேண்டியதாக இருந்தது. ஆனால் பாடல்களோடு இசைக்கருவிகள் வாசிக்கப்படவில்லை. கிறிஸ்தவர்கள் அன்றும் சரி, இன்றும் சரி பாடும் மக்களாகவே இருக்கிறார்கள்.

பாடலின் தாக்கம் மிகப்பெரியது. யாரோ ஒருவர் இப்படியாகச் சொன்னார். " ஒரு தேசத்தின் பாடல்களை நான் எழுதுகிறேன், அத்தேசத்தின் சட்டங்களை யார் எழுதுகிறார் என்பது பற்றி எனக்குக் கவலையில்லை " என்று ஆராதனையிலும், வேலையிலும், விளையாட்டிலும் பாடலால் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்த முடியும். எனவே நாம் பாடுவோம்!!

✝

## தேவனுக்கான அனுதின சேவையைக் குறித்து நமக்கு என்ன தெரியும்?

## What Do We know About Daily Work For God?

Charlese Box

நாம் வாரத்தின் ஏழுநாட்களிலும் தேவனுக்கு சேவை செய்யவேண்டியவர்களாயிருக்கிறோம் என்பதை அறிந்திருக்கிறோம். தேவனுடைய ஊழியத்திற்கென்று வேலையாட்கள் இன்றும் அவசியப்படுகிறார்கள். இயேசுகிறிஸ்து இவ்விதமாகச் சொன்னார் அறுப்பு மிகுதி வேலையாட்களோ கொஞ்சம் ( மத் 9:37 ) ஒரு பிராந்திய சபை தேவனுக்கு கனமாய் விளங்க பல காரியங்கள் செய்யப்படவேண்டும். பல காரியங்களை நம்மால் செய்ய முடியும். நாம் இவ்வுலகில் வாழும் ஒவ்வொரு நாளும் நம்முடைய இலக்கு தேவனை உயர்த்திப் பிடிக்கிறதாக இருக்கவேண்டும்.

நாம் இப்பூமியில் இருப்பதற்கான நோக்கமே நம் அனுதின சேவையின் மூலமாகத் தேவனை மகிமைப்படுத்துவதுதான். ஒருவன் போதித்தால் தேவனுடைய வாக்கியங்களின் படி போதிக்கக்கடவன்; ஒருவன் உதவி செய்தால் தேவன் தந்தருளும் பெலத்தின் படி செய்யக்கடவன்; எல்லாவற்றிலேயும் இயேசு கிறிஸ்து மூலமாய் தேவன் மகிமைப்படும்படியே செய்வீர்களாக அவருக்கே மகிமையும் வல்லமையும் சதாகாலங்களிலும் உண்டாயிருப்பதாக ஆமென் ( பேதுரு 4:11) நம்முடைய செயல்பாடுகளெல்லாம் தேவனை மகிமைப்படுத்துகிற ஆசையால் வழி நடத்தப்படுகிறதாயிருக்க வேண்டும்.ஆகையால் நீங்கள் புசித்தாலும் குடித்தாலும் எதைச்செய்தாலும் எல்லாவற்றையும் தேவனுடைய மகிமைக்கென்று செய்யுங்கள் ( கொரி 10:31 ). I நாளாகமம் 16:29ல் நாம் கர்த்தருக்கு அவருடைய நாமத்திற்குரிய மகிமையைச் செலுத்தி காணிக்கைகளைக் கொண்டு வந்து அவருடைய சந்நிதியில் பிரவேசியுங்கள் பரிசுத்த அலங்காரத்துடனே கர்த்தரைத் தொழுதுகொள்ளுங்கள் என்று வாசிக்கிறோம் அப்போஸ்தலனாகிய பவுல் தேவ ஆவியினால் ஏவப்பட்டு தேவனுக்கு உடையவர்களாகிய உங்கள் சரீரத்தினாலும் உங்கள் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்துங்கள்(I கொரி 6:20).

தேவனுக்கான அனுதின சேவையைக் குறித்து நமக்கு என்ன தெரியும்?

- ⋆ தேவனுடைய வேலையில் நாம் ஊக்கமாகப் பங்கெடுக்கிறவர்களாக இருக்க வேண்டுமென்பது நமக்குத் தெரியும்.

நாம் சபையின் வேலையை நம் வேலையென்று நினைக்க வேண்டும். சபை கூடும் அனைத்து நாட்களிலும் கலந்துகொள்ள அனைத்து முயற்சி களையும் எடுக்க வேண்டும். இதில் வாரத்தின் இடைப்பட்ட நாளில் நடக்கும் வேத பாட வகுப்பில் கலந்து கொள்வதும் உள்ளடக்கம் ( எபி 10:24-31) கர்த்தரும் அவருடைய வேலையும் தான் நம் வாழ்வில் முதலிடத்தில் இருக்க வேண்டு மென்று தீர்மானித்துக்கொள்ள வேண்டும். **முதலாவது தேவனுடைய ராஜ்யத் தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள் அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும்** (மத்6:33). நாம் எபிரெயர் 11:6 விசுவாச மில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம். ஏனென்றால் தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும் அவர் தம்மைத் தேடுகிறவர்க ளுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்க வேண்டும்! நம் விசுவாசத்தை நிரூபிக்காமல் நாம் தேவனைப் பிரியப்படுத்த முடியாது. கிறிஸ்தவர்களாக நாம் நமக்கான தேவனுடைய நோக்கத்தை நிறைவேற்றுகிறவர்களாக வாழ வேண்டும். நாம் எதை விசுவாசிக்கிறோமா அதைச் செயல்படுத்தும்போது பலன்கள் இருக்கும். அதற்கான சூத்திரம் நம்பிக்கை செயல்பாடு அதன்பிறகு பலன்கள்.

- ⋆ நாம் வெளியிலுள்ளவர்களைச் சபைக்கு தொடர்ந்து அழைக்கிறவர்களாக இருக்கவேண்டுமென்பதை அறிந்திருக்கிறோம்.

நம் எல்லோருக்கும் தெரிந்தவர்கள் அறிமுகமானவர்கள் இருப்பார்கள். நாம் அவர்களை சபைக்கு அழைக்கவேண்டும்.சபையிலுள்ள ஒவ்வொரு அங் கத்தினரும் இந்தக் காரியத்தைக் குறித்து உணர்வுப்பூர்வமாகச் சிந்தித்தால் நம் வளர்ச்சி ஆச்சரியப்படும் வகையில் இருக்கும். நாம் சபையாகச் கூடிவரும்போது வாரத்திற்கு இரண்டு பேரையாவது அழைக்க ஆக்கப்பூர்வமான முயற்சிகளை எடுப்போம். சபைக்கு வருபவர்களைப் போய் அழைத்து வாருங்கள். சபை கூடிவரும்போது அவர்கள் கலந்துகொண்டால் அவர்களோடு அமருங்கள். அவர்கள் வீட்டில் இருப்பதுபோல் உணரச்செய்யுங்கள். நம் அன்பை அவர்கள் உணரும்படி செய்யுங்கள். சபை கூடும்போது கலந்துகொள்பவர்களை மற்றவர் களுக்கு அறிமுகப்படுத்துங்கள். அவர்களை உங்கள் இல்லத்திற்கு அழைத்துச் செல்லுங்கள். தேவனுக்காக வேலை செய்யுங்கள். ஆதலால் எனக்குப் பிரியமா னவர்களே நீங்கள் எப்பொழுதும் கீழ்ப்படிகிறபடியே நான் உங்களுக்குச் சமீபமாயிருக்கும் பொழுது மாத்திரமல்ல நான் தூரமாயிருக்கிற இப்பொழுதும்

அதிக பயத்தோடும் நடுக்கத்தோடும் உங்கள் இரட்சிப்பு நிறைவேறப் பிரயாசப் படுங்கள்(பிலி 2:12) நாம் செய்கிற எல்லாவற்றிலேயும் இரட்சிப்பு செய்தியை மற்றவர்களுக்கு எடுத்துச்செல்வதன் மூலம் தேவனை மகிமைப்படுத்த வேண்டும் நல்ல மனுஷன் தன் இருதயமாகிய நல்ல பொக்கிஷத்திலிருந்து நல் லதை எடுத்துக்காட்டுகிறான் பொல்லாத மனுஷன் தன் இருதயமாகிய பொல்லாத பொக்கி ஷத்திலிருந்து பொல்லாததை எடுத்துக் காட்டுகிறான். இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும் (லூக்கா 6:45). சுவிசேஷத்தினால் இயேசுகிறிஸ்து மூலமாக நாம் பெற்றக்கொண்ட இரட்சிப்புக்காக தேவனுக்காக நம் இருதயம் நன்றியுள்ளதாயிருந்தால் மற்றவர்களும் கிறிஸ்துவை அறிந்துகொள்ளத் தக்கதாக அவர்களை நாம் அழைப்போம்.

- நம் குடும்பம் சபை காரியங்களில் பங்கெடுப்பதிலும் ஆராதனையில் அவர்களுடைய நடத்தையிலும் நமக்குப் பொறுப்பு இருக்கிறது என்பதை நாம் அறிவோம்.

சபை கூடும் போதெல்லாம் நேரத்திற்கு வருகை தாருங்கள் உங்கள் குடும்பம் நடத்தையில் மற்றவர்களுக்கு முன் மாதிரியாக இருக்க உதவி செய் யுங்கள். பெற்றோருடைய கண்காணிப்பு இல்லாமல் குழந்தைகள் ஒழுங்காக நடக்கவேண்டுமென்று நம்மால் எதிர்பார்க்க முடியாது. பிதாக்களே நீங்களும் உங்கள் பிள்ளைகளைக் கோபப்படுத்தாமல் கர்த்தருக்கேற்ற சிட்சையிலும் போதனையிலும் அவர்களை வளர்பீர்களாக(எபே 6:4) நம் குடும்பங்களை பரலோகம் கொண்டுபோக நாம் கவனம் செலுத்தும்போது சபை வளரும்.

- நாம் எல்லாவற்றிலேயும் தொடர்ந்து தேவனுக்கு உண்மையாயிருக்க வேண்டுமென்பதை அறிவோம்.

நாம் பாடல்பாட ஆயத்தமாயிருக்க வேண்டும். ஒவ்வொரு சபை கூடுகையின் போதும் நம் இருதயத்திலிருந்து பாடவேண்டும். கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்ப தாக சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுக்களினாலும் ஒருவருக்கொருவர் போதித்துப் புத்திசொல்லிக்கொண்டு உங்கள் இருதயத்திலே கர்த்தரைப் பக்தியுடன் பாடி(கொலோ3:16) என்று வாசிக்கிறோம். நாம் அனுதினமும் சபைக்காகவும் அதின் பணிக்காகவும் ஜெபிக்க வேண்டும். நாம் ஒருவருக்கொருவர் ஜெபிக்க வேண்டும். ஏனென்றால் நம்மெல்லோருக்கும் ஜெபத் தேவையிருக்கிறது. இதினிமித்தம் நாங்கள் அதைக் கேட்ட நாள்முதல் உங்களுக்காக இடைவிடாமல் ஜெபம் பண்ணுகிறோம்.நீங்கள் எல்லா ஞானத்

தோடும் ஆவிக்குரிய விவேகத்தோடும் அவருடைய சித்தத்தை அறிகிற அறிவினாலே நிரப்பப்படவும்(கொலோ 1:9) என்று வாசிக்கிறோம். நாம் எப்போது சபைகூடி வந்தாலும் தேவனுடைய வார்த்தையை நம் அனுதின வாழ்வில் பயன்படுத்தத்தக்கதாக தேவனுடைய வார்த்தையை கவனிக்க வேண்டும். நம்முடையவர்களும் கனியற்றவர்களாயிராதபடி குறைவுகளை நீக்குகிற தற்கேதுவாக நற்கிரியைகளைச் செய்யப் பழகட்டும்(தீத்து 3:14) நீங்கள் பிரசங்கத்தை ஜாக்கிரதையாகக் கவனிக்கும்போது அது உங்களுக்கு மட்டும் நல்லதல்ல. சபை கூடுகையில் கலந்துகொண்ட பார்வையாளர்களுக்கும் இது சிறந்த நடைமுறை உதாரணமாயிருக்கும். பார்வையாளர்கள் இதுபோன்ற சின்னசின்ன காரியங்களைக் கவனிப்பார்கள். அவர்கள் நன்மையான காரியங்களால் ஈர்க்கப்படுவார்கள்.

★ நாம் கிறிஸ்துவைப் பற்றியும் அவருடைய சபையை பற்றியும் உற்சாக மடைய வேண்டுமென்பதை நாம் அறிவோம்.

நம் சபையில் நடக்கும் நற்காரியங்களைப் பற்றி பிறரிடத்தில் நாம் பேச வேண்டும்.நீங்கள் கேட்கும் பிரசங்கத்தைப் பற்றியும் அது உங்களுக்கு எவ்வளவு உதவியாயிருந்தது என்றும். அது எவ்வகையில் உங்களுக்குத் தூண்டுகோலாக இருந்ததென்றும் மற்றவர்களிடத்தில் பேசுங்கள் வெளியூர் ஊழியங்களுக்கான உதவி பற்றியும் வாலிபர்களுக்கான ஊழியம் பற்றியும் மற்றவர்களிடத்தில் பேசுங்கள். சபை மூலமாக நடத்தப்படும் வேதபாட வகுப்புகள் பற்றியும் பேசுங்கள் மற்றவர்கள் சோர்வடையும்படி சபையைப்பற்றி எதிர்மறை யாக எதையும் சொல்லாதீர்கள்.

சமுதாயத்தின் கவனத்தை ஈர்க்கும் வகையிலும் சமுதாயத்தில் மாற்றத்தை ஏற்படுத்தவும் சுவிசேஷப் பிரசங்கம் மனிதாபிமான செயல்பாடுகள் மற்றும் நற்கிரி யைகளில் சபையானது ஊக்கமாக ஈடுபடவேண்டும். சபையின் மூலமாக சொல் லப்படுகின்ற செய்யப்படுகின்ற காரியங்களைப் பற்றி பிறரிடம் பேச வேண்டும். அப்போஸ்தலனாகிய பவுல் சகலவித நற்கிரியைகளுமாகிய கனிகளைத் தந்து தேவனை அறிகிற அறிவில் விருத்தியடைந்து கர்த்தருக்குப் பிரியமுண்டாக அவருக்குப் பாத்திரராய் நடந்து கொள்ளவும் (கொலோ 1:10) என்றும் சொல்லுகிறார்.

★ நாம் தொடர்ந்து தேவனுக்காக நம் தாலந்துகளைப் பயன்படுத்த வேண்டு மென்பதை அறிவோம்.

சபையின் அங்கத்தினர்கள் ஒவ்வொருவரும் அவரவர் தாலந்துகளைத்

தேவனுக்காகப் பயன்படுத்தினால் பலர் ஜீவியங்கள் தொடப்படும். நாம் நம் தாலந்துகளைப் பயன்படுத்தாதபோது மற்றவர்கள் இதைப்பற்றி விமர்சிப்பது எளிதான காரியம்.தங்கள் தாலந்துகளைத் தேவனுக்காகப் பயன்படுத்தும் கிறிஸ்துவர்கள் ஆசீர்வதிக்கப்படுவார்கள். அவர்களில் மற்றவர்களும் ஆசீர்வாத மாயிருப்பார்கள். ஆனால் தேவனுக்காகத் தங்கள் தாலந்துகளைப் பயன்படுத்தாவர்களுக்குப் பயங்கரமான ஆக்கினை காத்திருக்கிறது. உள்ள வனெவனோ அவனுக்குக் கொடுக்கப்படும் பரிபூரணமும் அடைவான் இல்லாத வனிடத்திலிருந்து உள்ளதும் எடுத்துக்கொள்ளபடும். பிரயோஜனமற்ற ஊழியக்காரனாகிய இவனைப் புறம்பான இருளிலே தள்ளிப்போடுங்கள் அங்கே அழுகையும் பங்கடிப்பும் உண்டாயிருக்கும் என்றார். மத். 25 : 29, 30. அவருடைய சேவையில் நாமெல்லோரும் நம்மால் முடிந்ததைச் செய்தால் தேவனுக்கென்று பெரிய காரியங்களை நம்மால் செய்ய முடியும். நாம் மரியாளைப் போல் இருக்க வேண்டும். இவள் தன்னால் இயன்றதைச் செய்தாள். நான் அடக்கம் பண்ணப்படுவதற்கு எத்தனமாக என் சரீரத்தில் தைலம் பூச முந்திக் கொண்டாள் (மாற்கு 14:8).

* நாம் அனுதினமும் ஊக்கமாக ஜெபிக்க வேண்டுமென்பதை அறிவோம்.

நம்முடைய மூப்பர்களுக்காகவும் அவர்களுடைய வேலைக்காகவும் ஜெபி யுங்கள். அவர்கள் நம் ஆத்துமாக்களுக்காக உத்திரவாதம் பண்ணுகிறவர்களா யிருக்கிறார்கள். உங்களை நடத்துகிறவர்கள் உங்கள் ஆத்துமாக்களுக்காக உத்திர வாதம் பண்ணுகிறவர்களாய் விழித்திருக்கிறவர்களானபடியால் அவர்கள் துக்கத்தோட அல்ல. சந்தோஷத்தோட அதைச் செய்யும்படி அவர்களுக்குக் கீழ்ப்படிந்து அடங்குங்கள். அவர்கள் துக்கத்தோட அப்படிச் செய்தால் அது உங்களுக்குப் பிரயோஜனமாயிருக்க மாட்டாதே(எபி 13:17) ஒற்றுமைக்காக ஜெபியுங்கள். இயேசு கிறிஸ்துவும் ஒற்றுமைக்காக ஜெபித்திருக்கிறார். நாமும் அப்படியே செய்ய வேண்டும். நான் இவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறது மல்லாமல் இவர்களுடைய வார்த்தையினால் என்னை விசுவாசிக்கிறவர் களுக்காகவும் வேண்டிக்கொள்ளுகிறேன். அவர்களெல்லாரும் ஒன்றாயி ருக்கவும் பிதாவே நீர் என்னை அனுப்பினதை உலகம் விசுவாசிக்கிறதற்காக நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறதுபோல அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக்கொள்ளுகி றேன்(யோவா 17:20,21). தேவைப்படுகிற நண்பர் களுக்காக உறவினர்களுக்காக ஜெபியுங்கள் அவர்களை உற்சாகப் படுத்துங்கள். அவர்கள் ஆவிக்குரிய பிரகாரமாக


வளரும்படி ஜெபியுங்கள் ஏனெனில் ஜெபத்தில் வல்லமையுண்டு நீங்கள் சொஸ்தமடையும்படிக்கு உங்கள் குற்றங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிட்டு ஒருவருக்காக நடுவர் ஜெயம் பண்ணுங்கள். நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ள தாயிருக்கிறது (யாக் 5:16).

* தேவனுக்கான நம்முடைய வேலை அனுதினமும் ஒரே மாதிரியாக இருக்க வேண்டுமென்பதை அறிவோம்.

இயேசு கிறிஸ்துதான் நமக்குச் சிறந்த மாதிரி இதற்காக நீங்கள் அழைக்கப் பட்டுமிருக்கிறீர்கள் ஏனெனில் கிறிஸ்துவும் உங்களுக்காகப் பாடுபட்டு நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்து வரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின் வைத்துப்போனார் (I பேதுரு 2:21). அவர் விட்டுச்சென்ற மாதிரிகளுள் ஒன்று அவர் நன்மை செய்கிறவராய்ச் சுற்றித்திரிந்து ஒரு மாதிரியை வைத்துப் போறிருக்கிறார். " **நசரேயனாகிய இயேசுவைத் தேவன் பரிசுத்த ஆவியினாலும் வல்லமையினாலும் அபிஷேகம் பண்ணினார். அவர் நன்மை செய்கிறவராயும், பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்குகிறவராயும் சுற்றித்திரிந்தார்** ". (அப் 10:38).

தேவனைக் கனப்படுத்த உங்களுக்கு ஆசையாயிருக்கிறதா? அப்படியானால், நீங்கள் கிறிஸ்தவராவதற்கு நேரம் வந்துவிட்டது. கிறிஸ்தவனாவதற்கு ஒருவர் சுவிசேஷத்தைக் கேளள்விப்படவேண்டும் (ரோமர் 10 : : 17). இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்க வேண்டும் (யோவான் 8 : 24). கடந்த காலப் பாவங்களிலிருந்து மனந்திரும்பவேண்டும் (அப். 17 : 30). கிறிஸ்துவை கர்த்தரென்று அறிக்கையிடவேண்டும் (அப். 8 : 37). இரட்சிக்கப்படும்படியாக ஞானஸ்நானம் பெற வேண்டும் (I பேதுரு 3 : 21). ஞானஸ்நானத்திற்குப் பிறகு இயேசு கிறிஸ்து நம்மைப் பரலோக வீட்டிற்கு வழிநடத்துகிறபடியால் அவரை நாம் உண்மையாகப் பின்பற்ற வேண்டும் (வெளி. 2 : 10). " பின்பு அவர் எல்லாரையும் நோக்கி; ஒருவன் என் பின்னே வர விரும்பினால் அவன் தன்னைத் தான் வெறுத்து, தன் சிலுவையை அனுதினமும் எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன். தன் ஜீவனைஇரட்சிக்கவிரும்புகிறவன் அதை இழந்துபோவான். என்னிமித்தமாகத் தன் ஜீவனை இழந்து போகிறவன் அதை இரட்சித்துக் கொள்ளுவான் (லூக். 9 : 23, 24).

✝





# விவாகரத்தைத் தடுக்க ஆலோசனைகள்

## Suggestions To Pievent Divorce

Jerry A. Jenkins

விவாகரத்தை குறித்த தேவனுடைய மனநிலை வேதாகமத்தில் தெளிவாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது. மல்கியா தீர்க்கதரிசி மூலமாக தேவன் " தள்ளி விடு தலை நான் வெறுக்கிறேன் என்று இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் சொல்லு கிறார்; அப்படிப்பட்டவன் கொடுமையினால் தன் வஸ்திரத்தை மூடு கிறான் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்; ஆகையால் நீங்கள் துரோகம் பண் ணாமல் உங்கள் ஆவியைக்குறித்து எச்சரிக்கையாயிருங்கள் " (மல்கியா.2:16) என்று சொல்கிறார். இன்று உலகெங்கும் மிகப்பெரிய ஆபத்து குடும்பங்களில ஏற்படும் பிரிவு என்று கண்டறியப்பட்டுள்ளது.

விவாகரத்து என்பது வெளிப்படையாகவும் சட்டப்பூர்வமாகவும் தம்பதி யரிடத்தில் ஏற்படும் முறிவை அறிவிப்பதாகும். விவாகரத்து பட்சபாத மற்றது. அது ஏழைகள் பணக்காரன்கள், படித்தவர்கள் படிக்காதவர்கள் என்று வித்தி யாசம் பார்ப்பதில்லை. உண்மையில் சொல்லப்போனால் விவாகரத்து சமுதாயத் தின் எல்லா நிலையில் வாழும் மக்கள்மீதும் படையெடுக்கிறது.

திருமணத்தின்போது எந்த தம்பதியரும் மணமுறிவு ஏற்படும் என்று ஒரு போதும் நினைப்பதில்லை. திருமணமாகி மனவேதனையில் வாடும் பல தம்பதி கள் தங்களுக்கு இப்படி நடக்குமென்று கனவில்கூட நினைத்துப் பார்த்திருக்க மாட்டார்கள். விவாகரத்து நம் வீடுகளில் விரிசலை ஏற்படுத்துவதை தடுக்கவும், வீடுகளை பலப்படுத்தவும் என்னென்ன செய்யப்பட வேண்டும்? குடும்ப உற வுக்கு ஆபத்தை விளைவிக்கும் சில காரியங்கள் எப்படியாவது தவிர்க்கப்பட வேண்டும்.

கீழ்காணும் சில ஆலோசனைகள் உங்கள் வருங்கால மகிழ்ச்சியில் மிகப்பெரிய வித்தியாசத்தை ஏற்படுத்தும்:

1. விவாகம் விவாகவயதை அடைந்தவர்களுக்கான ஒன்று என்பதை வாலிபர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். இது நிச்சயமாக இளைஞர்களை புண்படுத்துவதற்காக சொல்லப்பட்ட ஒன்றல. திருமணம் மிகப்பெரிய பொறுப்புகளை உள்ளடக்கியது என்பதை உணர்ந்துகொள்ள வேண்டும்.

திருமணம் சம்மந்தமாக இதுவரை நடத்தப்பட்டிருக்கிற ஆய்வுகள் திருமண பொறுப்புகளை ஏற்றுக் கொள்வதற்கு முன்பாக வாலிபர்கள் உணர்வுப்பூர்வமான முதிர்ச்சியை அடையவேண்டுமென்று சொல்கிறது.

2. வாலிபர் மோகம் மாத்திரம் திருமணத்தின் வெற்றிக்கோ அல்லது மகிழ்ச்சிக்கோ உத்திரவாதமல்ல என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும். மோகம் என்பது ஒரு ஆணுக்கு பெண்ணை பார்க்கும்போதும், ஒரு பெண்ணுக்கு ஆணைப்பார்க்கும் போது உடலில் ஏற்படும் இராசயன மாற்றமேயல்லாமல் வேறொன்றுமில்லை. மோகம் என்பது ஒரு நல்ல திருமணத்திற்கு அவசியம் தான் ஆனால், திருமணம் அழகானதாக, நிறைவுள்ளதாக திருப்தியுள்ளதாக வாழ்க்கை முழுவதும் இருக்கவேண்டுமென்றால் அதைவிட மேலான ஒன்று இருக்க வேண்டும்.

3. வாலிபர்கள் திருமணம் என்பது வாழ்க்கைக்கான தேவனுடைய திட்டத்தின் ஓர் அங்கமாயிருக்கிறது என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும். ஜெபிக்கிற குடும்பங்கள் சேர்ந்திருக்கிற குடும்பங்கள் என்று பரவலாக சொல்லப்படுகிறது. இளம்தம்பதிகள் தேவனுடைய சமூகத்தில் பொருத்தனைகளை செய்துகொண்டு, தங்களுடைய செல்களுக்கு தேவனுடைய ஆசீர்வாதத்தையும் உதவியையும் கேட்டுக்கொண்டு திருமண பந்தத்தில் இணைந்தால் வெற்றிபெறுவார்கள்.

நாம் நிறைவான வாழ்க்கையை நிச்சயப்படுத்திக்கொள்ள வாழ்க்கையின் மையப் பகுதியில் கிறிஸ்துவை வைப்பது அவசியமாயிருக்கிறது. " உன் சுய புத்தியின்மேல் சாயாமல், உன் முழு இருதயத்தோடும் கர்த்தரில் நம்பிக்கையாயிருந்து உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக்கொள்; அப்பொழுது அவர் உன் பாதைகளைச் செவ்வைப்படுத்துவார் " என்று நீதிமொழிகள் ஆசிரியர் சொல்லியிருக்கிறார் (நீதிமொழிகள். 3:5,6).

✝

# நம்முடைய இல்லங்களின் தற்போதைய தேவை என்ன?

# What are Homes Need Now?

Jimmy Young.

**நா**ம் இப்போது அறிந்திருக்கிறபடி அல்லது முன்பே அறிந்திருக்கிறபடி வீடு என்பது மிகப்பெரிய பிரச்சனையில் சிக்கித்தவிக்கிறது. இக்கட்டுரையின் தலைப்பானது, பல வீடுகள் பலவீனமாயும் கடுமையான அபாயத்திலும் இருக்கிறது என்கிற உட்பொருளுடன் பேசப்பட்டிருக்கிறது. வீடுகளில் தோல்வி என்பது எல்லா காலங்களிலும் இருக்கிற ஒன்றாகும். அது நம்முடைய சமுதாயத்தின் மீது அச்சுறுத்தும் வகையில் மிக மோசமான தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

இப்பிரச்சனை சபையையும் தொடாமல் விட்டுவைக்கவில்லை. சகோதரரே. நாம் சரியான வேதாகமப் போதனையின் மூலமாகவும், சிறந்த முன்மாதிரியைக் காண்பிப்பதன் மூலமாகவும் நாம் மிகப்பெரிய வித்தியாசத்தைக் காட்ட முடியும். நம்மால் வித்தியாசத்தை ஏற்படுத்தமுடியும் அல்லது ஏற்படுத்தவேண்டும். இல்லையென்றால் மிகப்பெரிய தோல்வியைச் சந்திக்க நேரிடும். நம் வெற்றிக்கான திறவுகோல் தேவனுடைய வழிக்கும் சித்தத்திற்கும் நம்மை அர்ப்பணிக்கும் விதத்தில் இருக்கிறது. அதற்கு மாறாக நடந்துகொள்ளும்போது தோல்விதான் மிஞ்சும்.

அதனால், நம் இல்லங்களை எப்படிப் பலப்படுத்த முடியும்? அதற்கு என்ன அவசியமிருக்கிறது? முதல்படி, இப்போதே செயல்படவேண்டுமென்னும் அவசர நிலையின் விழிப்புணர்வுதான். நான் மறுபடியும் இப்போதே என்பதை வலியுறுத்த விரும்புகிறேன். ஏனென்றால், இக்காரியத்தில் ஈடுபடுத்தப்பட்டி ருக்கிற ஒவ்வொருவருடைய கவனத்தையும் ஈர்க்கும் அவசியமான காரியமாக இது இருக்கிறது.

நம் இல்லங்களின் பெலவீனத்தை எது தீர்மானிக்கிறது? நம் சமுதாய மானது நம் பட்டணங்களின் அளவு, இராணுவ அடக்குமுறை , பயம், பொருளா தாரத்தின் செல்வாக்கு, உலகத்தோடு நம் அரசியல் நிலையின் முக்கியத்துவம்

போன்ற அளவுகளினால் அளக்கப்படுவதில்லை. அதுபோலவே சபையானது கட்டடக் கலை, அதிக எண்ணிக்கையிலான விசுவாசிகள், அங்கத்தினர்களின் செல்வாக்கு போன்றவைகளை அடிப்படையாக வைத்தும் அளக்கப்படுவ தில்லை. அதே போல் நம் இல்லங்களும் அதன் அளவு, அழகு, வீட்டி லிருக்கும் பொருட்கள், மற்றவர்களுக்கு முன்பாக நாம் தோன்றும் விதம் போன்ற வைகளை அடிப்படையாக வைத்தும் அளக்கப்படுவதில்லை. மாறாக, நம் தேசம் மற்ற தேசங்களோடும், அவற்றிலுள்ள இல்லங்களின் பெலத்தினடிப் படையிலும் தான் சரியாக அளக்கப்படும். தேவன் சமுதாயத்தின் அடிப்படைக் கட்டமைப்பாக இல்லத்தை ஸ்தாபித்து, அதன் ஆளுகை அமைப்பிற்கும், அது மகிழ்ச்சியாகவும், உறுதியாகவும் இருக்கத் தேவையான ஆலோசனைகளையும் கொடுத்திருக்கிறார். தேசத்திலும், சபையிலும், வீட்டிலும் ஏற்படும் ஒவ்வொரு தோல்விக்கும், பெலவீனத்திற்கும் காரணம் தேவனுடைய ஆலோசனைகளை முழுமையாகப் பின்பற்றாதது தான்.

நம் குடும்பங்கள் பலப்படுத்தப்படவேண்டுமென்றால், அதற்கு நாம் தேவனை முழுமையாக விசுவாசித்து அவரில் நம்பிக்கை வைக்கவேண்டும். சில ஆண்கள் தாங்கள் தான் இல்லத்தின் தலைவரென்று மார்தட்டிச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் துரதிஷ்டவசமாகப் பலர் ஒவ்வொரு கிறிஸ்தவ இல்லத்தின் உண்மையான தவறிவிடுகிறார்கள். இன்னும் பலர் தேவனின் ஆலோசனையின் படியான உண்மையான தலைவராக நாம் இருக்க வேண்டும். அவருடைய வார்த்தையே நமக்கு வழிகாட்டியாக இருக்க வேண்டும்.

இஸ்ரவேலர்களுக்கு மோசே மூலமாக தேவன் இல்லம் சம்பந்தமாக கீழ்காணும் எச்சரிப்பை விடுத்தார், " **இன்று நான் உனக்குக் கட்டளையிடுகிற இந்த வார்த்தைகள் உன் இருதயத்தில் இருக்கக்கடவது. நீ அவைகளை உன் பிள்ளைகளுக்குக் கருத்தாய்ப் போதித்து நீ உன் வீட்டில் உட்கார்ந்தி ருக்கிறபோதும், வழியில் நடக்கிறபோதும் படுத்துக்கொள்ளுகிறபோதும் அவைகளைக் குறித்துப் பேசி அவைகளை உன் கைகளின் மேல் அடையாளமாகக் கட்டிக்கொள்வாயாக அவைகள் உன் கண்களுக்கு நடுவே ஞாபகக்குறியாய் இருக்கக்கடவது: அவைகளை உன் வீட்டு நிலைகளிலும் உன் வாசல்களிலும் எழுதுவாயாக** " ( உபா.6:6-9 ) அந்த ஜனங்கள் சிலகாலம் தேவனுக்குக் கீழ்ப்படிந்தது போல் தெரிகிறது.ஆனால் நீண்ட காலத்திற்கு அவர்கள் கீழ்ப்படியவில்லை ( நியா 21:25).

**ஒரு சிறுவன் உங்களிடத்தில் வந்து இயேசு கிறிஸ்து உங்கள் வீட்டில் வாசம் செய்கிறாரா என்று கேட்டால், உங்கள் பதில் என்னவாயிருக்கும்?** நாம் தேவனை, நம் இல்லங்களிலிருந்து நீக்கிப்போட்டு அவரில்லாமலேயே வீட்டைக் கட்ட முயற்சிப்

போம். ஆனால் அது விருதாவென்று அறியப்படட்டும் (மத் 7:24-27; சங் 27:1). பெரும்பாலான நேரங்களில் பிரச்சனைகள் எழும்போது, ஆலோசனைக்காக தவறான நிபுணர்களிடம் செல்லுகிறோம். ஆனால் தேவனே உண்மையான நிபுணராயிருக்கிறார். அவருடைய வார்த்தையே நிபுணத்துவம் உடைய தாயிருக்கிறது ( II தீமோ 3:17; II பேதுரு 1:3).

வீட்டைப் பலப்படுத்துவது யாருடைய பொறுப்பாயிருக்கிறது? கணவர்களே, தகப்பன்மார்களே கவனியுங்கள். தேவன் இந்த மிகப்பெரிய பொறுப்பை நமக்குத் தந்திருக்கிறார் ( எபே. 5 : 22; 6 : 4 ). இதை நாம் எப்படி உணர்ந்து பார்க்கிறோம்? தாமதப்படுத்துவதற்குப் பதிலாக இப்போதே சத்தியத்தை எதிர் கொண்டு, தேவையான மாற்றங்களைச் செய்துகொள்வது சிறப்பாயிருக்கும். ஆனாலும் சில தகப்பன்மார்கள், வீட்டில் இருந்து கொண்டே தங்கள் குடும்பங்களை கைவிட்டுவிடுகின்றனர்.

மனைவிகளே, தாய்மார்களே - கவனியுங்கள். உங்களுக்கும் மிகப்பெரிய பொறுப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. வீட்டில் உங்கள் பங்கு தேவனால் உங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. உறுதியான, ஆரோக்கியமான குடும் பங்கள் வேண்டுமென்றால் இப்பணியை நீங்கள் தான் நிறைவேற்ற வேண்டும். நீங்கள் குணசாலியான ஸ்திரீயாக இருக்கும்படிக்கு உங்களை உயர்ந்த எண்ணம் உடையவர்களாயிருக்க வேண்டுமென்று தேவன் விரும்புகிறார் ( நீதி 31:10-31 ). குறிப்பாக, குழந்தைகள் வளருகிற அந்த ஆரம்ப நாட்களில் உண்மையாகவே வீட்டில் இப்படிப்பட்ட குணநலன்களை உடைய தாய்மார்கள் தேவைப்படுகிறார்கள். குழந்தையின் ஆரம்பகால வருடங்கள் அவர்களின் சரியான வளர்ச்சிக்கு மிகவும் அவசியமாயிருக்கிறபடியால் உங்கள் பொறுப்புகளை அந்நாட்களில் மற்றவரிகளிடத்தில் திருப்பிவிட முடியாது. குறிப்பாக அந்நியர்களிடத்தில் அப்படிப் பொறுப்புகளைத் திருப்பிவிடவே முடியாது! அநேக மனைவிமார், தாய்மார்கள் பணக்கடவுளின் அழைப்பை ஏற்று விழுந்துபோய் விடுகிறார்கள். பிள்ளைகளுக்கு இன்னும் கொஞ்சம் அதிகப் பணத்தால் வாங்கப்படக்கூடிய பொருட்களைவிட தாய்மார்கள்தான் தேவை. தீத்து 2:1-5 ம் வசனங்களை வாசித்து. அங்கே பவுல் சொல்லும் காரியங்களைக் கவனியுங்கள். இந்தக் காரியங்கள் இன்றும் பின்பற்றப்பட்டால் அதிகப் பலன் தரும்.

நம் இல்லங்களில் இன்றைய தேவை குழந்தைகளை ஒழுங்கு படுத்துவதும், அவர்களைப் பயிற்றுவிப்பதும் தான். நீதிமொழிகள் புத்தகம். குழந்தைகளை சீர்படுத்துவதின், முக்கியத்துவத்தைப் பற்றி போதிக்கிறது ( நீதி 13:24; 23:13,14;29:15 ). குழந்தைகளின் அடிப்படைக் குறித்து உலகத்திலே

நடந்துகொண்டிருக்கும் விவாதத்திற்கு நாம் ஆதரவாகப் பேசுகிறோமோ அல்லது எதிர்த்துப் பேசுகிறோமோ என்பது முக்கியமல்ல. குழந்தைகளை ஏதாவதொரு விதத்தில் ஒழுங்குபடுத்தும் யுத்திகளை நாம் கையாள வேண்டுமென்பது பற்றிக் கவலைப்படாமல் தேவன் நமக்கு என்ன பங்கைக் கொடுத்திருக்கிறாரோ அதைப் பெற்றோர்கள் ஏற்றுக்கொண்டு நிறைவேற்ற வேண்டும். இப்பாடத்தைக் குறித்து நீதிமொழிகள் புத்தகம் நிறைய உதவிகளைத் தருகிறது. நாம் நீதிமொழிகள் 22:6 ஐ விசுவாசிக்கிறோமா?

நம் தொடர்ச்சியான அன்புக்கும், வழிநடத்துதலுக்கும் நம் பிள்ளைகள் தகுதிபெற்றிருக்கிறார்கள். அவைகள் அவர்களுக்குத் தேவைப்படுகிறது. இந்த அன்பானது சரியான பாதையில் இயக்கப்படவேண்டும். ஒரு வீட்டில் எல்லா நவீன வசதிகளும், ஆடம்பரப் பொருட்களும் இருக்கலாம். ஆனால், அந்த வீட்டில் அன்பும், அரவணைப்பும் தொடர்ச்சியாக இல்லையென்றால் அந்தவீடு தோற்றுப்போகிறது. உங்கள் பிள்ளைகளிடத்தில் நீங்கள் அவர்களை நேசிப்பதை எடுத்துரைத்து தேவபக்தியுள்ள வழிநடத்துதலின்படி அதை நிரூபியுங்கள் ( தீத்து 2:4; I யோவா 3:18 ) நம் பிள்ளைகளை ஆவிக்குரிய பிரகாரமாக வனையத்தேவன் நமக்கு உதவிசெய்வாராக! பிள்ளைகளுக்கு அது தேவைப்படுகிறது ( எபே 6:4 ). நாம் பிள்ளைகளை அவர்களுடைய வாழ்வில் தேவனுக்கு முதலிடம் கொடுப்பதின் முக்கியத்துவத்தைப் புரியவைத்துவிட்டால் வெற்றியுள்ள பெற்றோர்களாக இருப்போம். ( நீதி 15: 16 மத் 6:33 ) ஐசுவரியத்தைக் காட்டிலும் தேவனுக்குப் பயப்படுவதே மிக முக்கியமானது (நீதி 16:16) தேவபயம் பிள்ளைகளை ஐசுவரியமுள்ளவர்களாக்கும் (நீதி 22:4).

சகோதரர்களே! நாம் இதுகாறும் இரண்டு வகையான மக்களுக்கு எழுதி யுள்ளேன். (பெற்றோர்கள், பிள்ளைகள்) பெற்றோர்களே நம் பொறுப்புகளை அலட்சியப்படுத்த வேண்டாம். பிள்ளைகளே நீங்களும், உங்கள் பொறுப்பு களை அலட்சியப்படுத்தாமல், தேவனுடைய வார்த்தையை மதித்து அதற்குக் கீழ்ப்படிய வேண்டும் (நீதி 23:22; கொலோ 3:20; எபே 6:1).

தேவனுடைய வார்த்தையை உள்ளடக்கிய வேதாகமம் தான் நமக்கு போதனைப் புத்தகம்! நாம் அதைப் பின்பற்றினால் நம் வீட்டின் தேவைகளைச் சந்திப்பதில் வெற்றிபெறுவோம். நாம் வேதாகமத்தைப் பின்பற்றத் தவறினால் வீட்டின் தேவைகளைச் சந்திப்பதில் தோல்வி அடைவோம். நாம் தேவனுடைய வார்த்தையின்படி நடக்கத் தீர்மானித்து நம் வீட்டுக் காரியங்களை ஒழுங்குப டுத்த வேண்டுமென்பது என் ஜெபமாயிருக்கிறது ( II நாளா 20:1). " நானும் என் வீட்டாரு மோவென்றால் கர்த்தரையே சேவிப்போம் " (யோசுவா 24:15) என்று நாம் சொல்லு வோமாக ! " கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பதே நம் பெலனாக இருக்கட்டும் (நெகே 8:10). உங்கள் முயற்சிகளில் தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக ! ✝

வசன ஆராய்ச்சி

# ரோமர் 9:14 - 29

Jerry Bates

1. தேவன் ஒரு குறிப்பிட்ட மக்களிடத்தில் இரக்கமாகவும் உருக்கமாகவும் இருக்கிறபடியால் அவரிடத்தில் அநீதி உண்டென்று சொல்லலாமா ? ( வ. 14,15)

2. அந்தத் தெரிந்துகொள்ளுதலின் அடிப்படை என்ன ?

3. எதற்காகத் தேவன் பார்வோனை நிலைநிறுத்தினார் ? (வ. 19)

4. தேவனுடைய தெரிந்துகொள்ளுதலை விமர்சிப்பது மனிதனுக்கு சரியாயிருக்குமா ?

5. யாருக்கு அதிக வல்லமை இருக்கிறது? குயவனுக்கா அல்லது களிமண்ணிற்கா ? (வ. 19)

6. களிமண் குயவன் உதாரணத்திற்கும் தேவனுடைய தெரிந்துகொள்ளுதலுக்கும் உரிமைக்கும் உள்ள சம்பந்தம் என்ன ?

7. அழிவிற்காக ஆயத்தமாக்கப்பட்டிருக்கிற பாத்திரங்கள் யார் ?

8. கிருபா பாத்திரங்களை உண்டாக்கியது யார் ?

9. அழிவுக்கு எத்தனமாக்கப்பட்ட கோபாக்கினைப் பாத்திரங்கள்மேல் தேவன் ஏன் மிகவும் நீடிய சாந்தத்தோடே பொறுமையாயிருந்தார் ? (வ.23) (ரோமர் 2:4 மற்றும் II பேதுரு 3:9.2 படிக்கவும்).

10. தேவன் அழைத்தவர்களில் யூதர்கள் மாத்திரம் உள்ளடக்கமா?

11. எந்த தீர்க்கதரிசி ஒருநாளில் புறஜாதிகளும் தேவனுடைய ஜனங்களாகச் சேர்க்கப்படுவார்கள் என்று தீர்க்கதரிசனமாக உரைத்தார் ?

12. இஸ்ரவேலர்களில் பெரும்பாலானோர் தேவனை நிராகரித்தபோதிலும், அது தேவனுக்கு ஆச்சரியமாயிருக்கவில்லை என்பதை நாம் எப்படி அறிவோம் ?

13. யார், காரியம் இப்படியிருக்குமென்று முன்பே எழுதியது ? (வ. 26).

14. தேவன் இஸ்ரவேலர்களுக்குள்ளே ஒரு சந்ததியை மீதியாக வைத்திருக் கிறார் என்று பவுல் சொல்வதின் பொருள் என்ன ? (வ.29)

15. எந்த வருங்கால நிகழ்வை சோதோம் கொமொரோ குறிக்கிறது ? (வ.29)

# ரோமர் 9:14 - 29

14. ஆகையால் நாம் என்ன சொல்லுவோம் ? தேவனிடத்திலே அநீதி உண்டென்று சொல்லலாமா ? சொல்லக்கூடாதே. 15. அவர் மோசேயே நோக்கி: எவன் மேல் இரக்க மாயிருக்கச் சித்தமாயிருப்பேனோ அவன்மேல் இரக்கமாயிருப்பேன், எவன்மேல் உருக்கமாயிருக்கச் சித்தமாயிருப்பேனோ அவன்மேல் உருக்கமாயிருப்பேன் என்றார். 16. ஆகையால் விரும்புகிறவனாலும் அல்ல, ஓடுகிறவனாலும் அல்ல, இரங்குகிற தேவனாலேயாம். 17. மேலும் என்னுடைய வல்லமையை உன்னிடத்தில் காண்பிக்கும்படியாகவும், என்னுடைய நாமம் பூமியில் எங்கும் பிரஸ்தாபமாகும்படியாகவும், உன்னை நிலைநிறுத்தினேன் என்று பார்வோனுடனே சொன்னதாக வேதத்தில் சொல்லி யிருக்கிறது 18. ஆதலால் எவன் மேல் இரக்கமாயிருக்கச் சித்தமாயிருக்கிறாரோ அவன்மேல் இரக்கமாயிருக்கிறார். எவனைக் கடினப்படுத்தச் சித்தமாயிருக்கிறாரோ அவனைக் கடினப்படுத்துகிறார். 19. இப்படியானால், அவர் இன்னும் ஏன் குற்றம்பிடிக்கிறார் ? அவர் சித்தத்திற்கு எதிர்த்து நிற்பவன் யார்? என்று என்னுடனே சொல்லுவாய். 20. அப்படியானால், மனுஷனே, தேவனோடு எதிர்த்துத் தர்க்கிக்கிற நீ யார் ? உருவாக்கப்பட்ட வஸ்து உருவாக்கினவனை நோக்கி: நீ என்னை ஏன் இப்படி உண்டாக்கினாயென்று சொல்லலாமா? 21. மிதியிட்ட ஒரே களிமண்ணினாலே குயவன் ஒரு பாத்திரத்தைக் கனமான காரியத்துக்கும், ஒரு பாத்திரத்தைக் கனவீனமான காரியத்துக்கும் பண்ணுகிறதற்கு மண்ணின்மேல் அவனுக்கு அதி காரம் இல்லையோ? 22. தேவன் தமது கோபத்தைக் காண்பிக்கவும், தமது வல்லமையைத் தெரிவிக்கவும் 23. தாம் மகிமைக்காக எத்தனமாக்கின கிருபா பாத்திரங்கள் மேல் தம்முடைய மகிமையின் ஐசுவரியத்தைத் தெரியப்படுத்தவும் சித்தமாய், அழிவுக்கு எத்தனமாக்கப்பட்ட கோபாக்கினைப் பாத்திரங்கள் மேல் மிகவும் நீடிய சாந்தத்தோடே பொறுமையாயிருந்தாரானால் உனக்கென்ன? 24. அவர் யூதரிலிருந்து மாத்திரமல்ல, புறஜாதிகளிலுமிருந்து நம்மை அழைத்திருக்கிறாரே 25. அந்தப்படி : எனக்கு ஜனங்களல்லாதவர்களை என்னுடைய ஜனங்கள் என்றும், சிநேகிக்கப்படாதிருந்தவளைச் சிநேகிக்கப்பட்டவள் என்றும் சொல்லி அழைப்பேன். 26. நீங்கள் என்னுடைய ஜனங்களல்லவென்று அவர்களுக்குச் சொல்லப்பட்ட இடத்திலே அவர்கள் ஜீவனுள்ள தேவனுடைய பிள்ளைகள் என்னப்படுவார்கள் என்று ஓசியாவின் தீர்க்கதரிசனத்தில் சொல்லியிருக்கிறது. 27. அல்லாமலும் இஸ்ரவேல் புத்திரருடைய இலக்கம் சமுத்திரத்தின் மணலத்தனையாயிருந்தாலும், மீதியாயிருப்பவர்கள் மாத்திரம் இரட்சிக்கப்படுவார்கள் என்றும், 28. அவர் நீதியோடே சீக்கிரமாய்த் தம்முடைய காரியத்தை நிறைவேற்றுவார்; கர்த்தர் பூமியிலே சீக்கிரமாகவே காரியத்தை நிறைவேற்றி முடிப்பார் என்றும் ஏசாயா இஸ்ரவேலரைக்குறித்துச் சொல்லுகிறான். 29. அல்லாமலும் ஏசாயா முன்னே சொன்னபடி; சேனைகளின் கர்த்தர் நமக்குள்ளே ஒரு சந்ததியை மீதியாக வைக்காதிருந்தாரானால் நாம் சோதோமைப் போலாகி கொமோராவுக்கு ஒத்திருப்போம்.

## நீங்கள் கேட்டுக்கொள்வதெதுவோ .....

# Ask What Ye Will

T. Pierce Brown

**யோ**வான் 15 ம் அதிகாரத்தின் ஆச்சரியமான வசனப்பகுதி ஏழாம் வசனத்தில் உள்ளது. " நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால் நீங்கள் கேட்டுக்கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும். " Albert Barnes என்னும் வேதவல்லுனர் இந்த வாக்குத்தத்தம் குறிப்பாக அப்போஸ்தலர்களுக்குத் தான் பொருந்துமென்றும், அவர்களுக்கு ஏற்பட்ட சூழ்நிலைபோல் கிறிஸ்தவர்களுக்கும் ஏற்பட்டால் அப்போது இது கிறிஸ்தவர்களுக்கும் பொருந்தும் என்று சொன்னார்.

Albert Barnes என்பவர் இவ்வசனம் அப்போஸ்தலர்களுக்கு மட்டுமே பொருந்துமென்று சொல்லியிருந்தாலும், இவ்வசனத்தை நாம் எல்லாக் கிறிஸ்தவர்களுக்கும் பயன்படுத்துகிறோம். ஆயினும் அப்போஸ்தலர்களுடைய காரியத்தில் இவ்வாக்குத்தத்தம் என்ன பொருள்படுகிறதென்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும். இது ஒருவரிடம் வெற்று காசோலையைக் கொடுத்து விரும்பிய பணத்தை பூர்த்தி செய்துகொள் என்று சொல்லும் பாணியில் இருக்கிறதா? அப்போஸ்தலனாகிய பவுல் துரோப்பீமுவை மிலேத்துவில் வியாதிப்பட்டவனாக விட்டு வந்ததை எடுத்துக்கொண்டு, பவுல் துரோப்பீமுக்கா ஜெபிக்கவில்லையென்று நியாயமாக முடிவெடுக்க முடியுமா? ஆதி கிறிஸ்தவர்களும், அப்போஸ்தலர்களும் எதற்காக ஜெபித்தார்களோ அவைகளுக்கெல்லாம் தேவனால் பதில் கொடுக்கப்பட்டதா? இல்லையென்று வெளிப்படையாக தெரிகிறது. அப்படியென்றால் இவ்வாக்குத்தத்தத்தின் பொருள் என்ன? இது நமக்கு எந்த அளவு மதிப்புள்ளதாயிருக்கிறது? Albert Barnes என்றும் வேதவல்லுனர் சொல்லுகிறது சரியாக இருந்தால் அப்போஸ்தலர்களைப் போன்ற சூழ்நிலைகள் நமக்கு என்பதன் பொருள் என்ன? நம்மில் யாராவது இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் இருக்கிறோமா?

இந்த வசனப்பகுதியில், " நீங்கள் என்னிலும் என் வார்த்தைகள் உங்க

ளிலும் நிலைத்திருந்தால் " என்று இயேசு கிறிஸ்து சொன்னதன் பொருள் என்ன என்பதைப் புரிந்துகொள்வது அவசியமாயிருக்கிறது. ஒருவர் தேவனை அறிகிற அறிவுக்கு விரோதமாய் எழும்புகிற எல்லா மேட்டிமைகளையும் நிர்மூல மாக்கி, எந்த எண்ணத்தையும் கிறிஸ்துவுக்கு கீழ்ப்படியச் சிறைப்படுத்துகிறவர் களாயிருந்தால் ( II கொரி.10:5 ). சாவுக்கினமான மாம்சத்திலே இயேசுவினு டைய ஜீவனும் விளங்கும்படிக்கு இயேசுவினிமித்தம் மரணத்திற்கு ஒப்புக் கொடுக்கிறவராகயிருந்தால் ( II கொரி.4:11 ). பிதாவின் சித்தத்தைச் செய்வ தையே தன் சித்தமாகக் கொண்டிருந்தால் ( லூக். 22:42 ). அவர்களுக்கு இவ்வாக்குத்தத்தம் சொந்தமென்பதை நாம் நிச்சயப்படுத்திக்கொள்ள முடியும்.

இன்னொரு கேள்வி நம் மனதில் எழுகிறது. அதென்னவென்றால் தேவன் சில காரியங்களை நம் வாழ்வில் செய்யத் திட்டமிட்டுவிட்டார் என்றால் அந்தக் காரியங்களுக்காக நாம் ஏன் ஜெபிக்கவேண்டும்? என்பது தான். இக்காரியத் தைக் குறித்து நாம் இன்னும் தீவிரமாக ஆராய்ந்தால் தேவன் எவைகளையெல் லாம் நம் வாழ்வில் செய்ய விரும்புகிறாரோ, அவைகளையெல்லாம், அவரு டைய சித்தத்திற்குப் புறம்பாக நாம் வாழும்போது செய்யமாட்டார். இந்தக் காரி யத்தில் கால்வின் கொள்கைக்காரர்கள் மிகப்பெரிய தவறை இழைத்திருக் கிறார்கள். தேவன் சர்வவல்லவராயிருக்கிறபடியால். தேவன் எதை விரும்புகி றாரோ அது நடக்கும் என்று தவறாகப் போதிக்கிறார்கள். ஆனால் இது உண்மை யல்ல என்பதை வேதாகமம் பல உதாரணங்களில் சொல்லுகிறது. இதற்கு மிகச் சிறந்த உதாரணம் II பேதுரு 3:9 - ல் இடம்பெற்றிருக்கிறது. " தாமதிக்கிறார் என்று சிலர் எண்ணுகிறபடி, கர்த்தர் தமது வாக்குத்தத்தத்தைக் குறித்துத் தாமதமாயிராமல், ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்ப வேண்டுமென்று விரும்பி நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார் " என்று நாம் வாசிக்கிறோம். எல்லோரும் மனந்திரும்ப வேண்டுமென்பது தேவனுடைய சித்தமாயிருக்கிறது. ஆனால் அது நடப்பதில்லை. ஏனென்றால் மனிதர்கள் அவருடைய சித்தத்திற்கு எதிராகச் செய்கிறார்கள்.

இயேசு கிறிஸ்துவின் வாக்குத்தத்தங்களில் மூன்று காரியங்கள் கவனிக்கப்படவேண்டியவைகள். முதலாவது, நாம் கிறிஸ்துவோடு சரியான ஐக்கியம் கொண்டிருக்க வேண்டும். அதிலே நிலைத்திருக்க வேண்டும். இவ்வச னப்பகுதி ஒருவர் ஒருமுறை இரட்சிக்கப்பட்டுவிட்டால் அவர் மறுபடியும் விழுந்து போவதற்கு வாய்ப்பே இல்லை என்னும் கள்ள உபதேசத்திற்குச் சாவு மணி அடிக்கிறது. எனவே கிறிஸ்துவின் உபதேசங்களுக்கு கீழ்ப்படிவோம், ஏற்ற சமயத்தில் அவர் நம்மை உயர்த்தும்படியாக! ✝

# நான் யார்?

## Who Am I?

Rebecca Rushmore

என்னை உங்களால் அடையாளம் கண்டுகொள்ள முடிகிறதா? கொடுக்கப் பட்டுள்ள ஒவ்வொரு குறிப்புகளையும் கவனமாக வாசித்து யோசியுங்கள். என் பெயரை நீங்கள் முதல் குறிப்பிலேயே யூகித்து விட்டால். 100 மதிப்பெண்களை உங்களுக்கு நீங்களே கொடுத்துவிடுங்கள். ஐந்தாவது குறிப்பிற்குப்பிறகு நான் யாரென்பதைக் கண்டுபிடித்தால் உங்கள் மதிப்பெண் 60. என் அடையாளத்தை நீங்கள் உறுதிசெய்துவிட்டால் தேவனுடைய வார்த்தையிலிருந்து உண்மையைச் சரிபார்க்க வேத வசனங்களை ஆராய்ந்து பாருங்கள்.

1. ராஜாவாகிய அகாஸ்வேரு என்னை மேன்மைப்படுத்தி தன்னிடத்திலிருக் கிற சகல பிரபுக்களுக்கும் மேலாக என்னை உயர்த்திவைத்தான். ஆகை யால், ராஜாவின் அரமனை வாசலிலிருக்கிற ராஜாவின் ஊழியக்காரர் எல்லாரும் என்னை வணங்கி நமஸ்கரித்து வந்தார்கள் (எஸ்தர் 3:1.8).

2. மொர்தெகாய் தன்னை வணங்கி நமஸ்கரியாததைக் கண்டபோது மூர்க்கம் நிறைந்த வனானேன்; அதனால் ராஜ்யமெங்கும் இருக்கிற மொர்தெகாயின் ஜனமாகிய யுதரையெல்லாம் சங்கரிக்க வகைதேடினான் (எஸ்தர் 3:5-9).

3. ராணி என்னை ராஜாவோடு தொடர்ந்து இரண்டு நாட்கள் விருந்தில் பங்கேற்க அழைப்பு விடுத்தார் (எஸ்தர் 5:4-8).

4. ராஜாவோடும் ராணியோடும் விருந்தில் பங்கேற்க எனக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தாலும் அது என்னை வணங்காத மனிதன் மீது நான் கொண்ட கோபத்தைத் தணிக்கவில்லை (எஸ்தர் 5:10-13).

5. என் மனைவியும் என் நண்பர்களும் என்னைக் கோபப்படுத்தின மனிதனை

தூக்கில்போட ஒரு தூக்குமரம் செய்யவேண்டுமென்று எனக்கு ஆலோசனை சொன்னார்கள் (எஸ்தர் 5:14).

6. ராஜா என்னைப்பார்த்து: ராஜா கனம் பண்ண விரும்புகிற மனுஷனுக்குச் செய்யவேண்டியதென்ன என்று கேட்டார் (எஸ்தர் 6:7)

7. ராஜா என்னை நோக்கி: " நீ சொன்ன எல்லாவற்றிலும் ஒன்றும் தகாதபடி பார் என்றார் " (எஸ்தர் 6:10).

8. ராஜாவின் பிரதானிகள் வந்து, எஸ்தர் செய்த விருந்துக்கு வர என்னைத் துரிதப்படுத்தினார்கள் (எஸ்தர் 6:14).

9. ராணியின் ஜனங்களை அழிக்க நான் சதிபண்ணினேன் என்பதை ராஜா கண்டுபிடித்துவிட்டார் (எஸ்தர் 7:3-6).

10. மொர்தெகாயுக்காக நான் தூக்குமரம் செய்ததை ராஜாவின் மனிதர்களுள் ஒருவன் ராஜாவுக்குத் தெரிவித்து விட்டான்; ராஜா என்னை அதில் தூக்கிப்போட்டார் (எஸ்தர் 7:9-10).

✞

---

## பரலோக வாழ்வை ருசியாதவர்கள்

| | |
|---|---|
| பிசாசும் அவனுடைய தூதர்களும் | மத் 25:41 |
| தேவனை அறியாதவர்கள் | 2 தெச 1:7 |
| சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்கள் | 2 தெச 1:7 |
| துன்மார்க்கத்தை நடப்பிக்கிறவர்கள் | வெளி 21 : 8 |
| உண்மையில்லாத கிறிஸ்தவர்கள் | 2 பேது 2:20 - 22 |
| கீழ்ப்படியாதவர்கள் | ரோமர் 2:8,9 |
| அக்கிரமத்தைச் செய்கிறவர்கள் | மத் 7:21 - 23 |

# Fragile : Handle with Care

# எளிதில் உடைந்துபோகக்கூடியது ; கவனமாகக் கையாளவும்

Curtis Camp

**முன்னுரை:**

A. சில கண்ணாடிப்பொருள்களின் மேல் எளிதில் உடைந்துபோகக்கூடியது: கவனமாகக் கையாளவும் " என்று எழுதப்பட்டிருப்பதை நீங்கள் பார்த்திருப் பீர்கள். வாழ்க்கையும் அப்படித்தான். எனவே அது மிகவும் கவனமாகவும், ஜெபத்துடனும் கையாளப்பட வேண்டும்.

B. வேதாகமம் நம்மை ஜெபிக்கும்படி உற்சாகப்படுத்துகிறது.

1. லூக்கா 18:1, " சோர்ந்து போகாமல் எப்பொழுதும் ஜெபம் பண்ண வேண்டும் ... ".

2. மாற்கு 14:38 , " நாம் விழித்திருந்து ஜெபம் பண்ணவேண்டும் ".

3. கொலோசெயர் 4:2, " இடைவிடாமல் ஜெபம் பண்ணவேண்டும் ".

4. I தெசலோனிக்கேயர் 5:17 " இடைவிடாமல் ஜெபம்பண்ணவேண்டும் " இப்போ நாம் எளிதில் உடையக்கூடிய ஜெபத்தோடு கையாளப்படவே வண்டிய காரியங்களை நாம் பார்க்கலாம்.

I சரீரப்பிரகாரமான வாழ்க்கை

A. நாம் அன்றாட வாழ்க்கையை மிக லேசாக எடுத்துக்கொள்கிறோம் ஆனால் அது எளிதில் அழிந்து போகக்கூடியாதாகயிருக்கிற படியால் ஜெபத்தோடும் கவனத்தோடும் அதை கையாள வேண்டும்.

1. எளிதில் அறுந்து போகக்கூடிய நூல் போன்ற வாழ்க்கை வாகன விபத்து, விமானவிபத்து, மாரடைப்பு மற்றும் நூற்றுக்கணக்கான காரியங்களால் காணமல் போய்கிவிடுகிறது.

a. யாக்கோபு 4:13-15 திருமணம்

II. **திருமணம்**

A. திருமணம் எளிதில் முறிந்துபோகக்கூடிய ஒன்றாக இருக்கிற படியால் அது ஜெபத்தோடு கையாளப்படவேண்டும்.

இன்றைய நாட்களில் திருமணங்கள் அதிகமாக பரிசுத்த குறைச்சலாக் கப்படுகிறது.

a. விவாகரத்து இன்று சகஜமாகிவிட்டது. பெரும்பாலான திருமணங்கள் விவாகரத்தில் போய் முடிகின்றன பல குடும்பங்கள் முறிந்து பல ஜீவன்கள் காயப்படுத்தப்பட்டு அழிந்துபோகின்றன.

b. திருமணம் பரிசுத்த உறவாக அங்கீகரிக்கப்பட்டு பரிசுத்தமாக அதற்குள் பிரவேசிக்க வேண்டும்.

1. I பேதுரு 3:5-7. " பரிசுத்த ஸ்திரீகளும் தங்களுடைய புருசர்களுக்கு கீழ்ப்படிந்து தங்களை அலங்கரித்தார்கள் ".

III. **பிள்ளைகள்**

A. ஜெபமில்லாமல் என் பிள்ளைகளை வளர்க்க நான் பயப்படுவேன்.

1. அவர்கள் மென்மையானவர்கள் எளிதில் இரையாகிவிடுவார்கள். அவர்கள் எளிதில் வளையக்கூடியவர்கள் இணங்கக்கூடியவர்கள். இன்றைய நாட்களில் பலவிதமான உலகத்தின் காரியங்கள் அவர்கள் மீது தாக்கத்தை ஏற்படுத்துவதால் கர்த்தருடைய உதவியில்லாமல் அவர்களை வளர்ப்பதை யோசித்துப்பார்க்கவே வெறுக்கிறேன். அவர்களுடைய வாழ்க்கை உதிர்ந்துபோவதற்கும், நாசமாவதற்கும் வாய்ப்புகள் அதிகமாக உள்ளன.

2. சங்கீதம் 27:3 பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்தரம்.

a. பிள்ளைகள் கர்த்தரால் தரப்பட்டவர்களாயிருக்கிறபடியால் அவருடைய உதவியில்லாமல் அவர்களை வளர்ப்பதைக் குறித்து யோசிக்கக்கூட என்னால் எப்படித் துணியமுடியும் ?

b. அவர்களை கடுமையாக கொடூரமாக நடத்தக்கூடாது. அவர்களுக்குத்

தேவைமென்மையான வழிநடத்துதலும் ஜெபமும்தான். நம்முடைய வீட்டிலும் அனுதின வாழ்க்கையிலும் தேவபக்தியுள்ள வாழ்க்கையை நாம் வாழும்போது அது பிள்ளைகளுக்கு தூண்டுகோலாக இருக்கும். நாம் அவர்களுக்கு தேவன்மீதும் அவருடைய வார்த்தையின் மீதும் நமக்கு இருக்கும் மரியாதையைக்காட்ட வேண்டும்.

c. நீதிமொழிகள் 22:6 " பிள்ளையானவன் நடக்க வேண்டிய வழியிலே அவனை நடத்த வேண்டும் ".

## IV. ஆத்துமா

A. சரீரப்பிரகாரமான வாழ்க்கை அழிந்து போகக்கூடியதாயிருக்கிறபடியால், ஜெபத்தோடும் கவனத்தோடும் அதை கையாள வேண்டியதாயிருக்க, ஆவிக்குரிய வாழ்க்கையையும் ஆத்துமா சம்பந்தமான காரியங்களையும் எவ்வளவு ஜாக்கிரதையாக கையாளவேண்டும்?

1. சபைக்கு வெளியே இருப்பவர் ஜெபத்தினால் இரட்சிக்கப்படுவதில்லை, ஆனால் விசுவாசத்தினாலும் , சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிவதினாலும் இரட்சிக்கப்படுகிறார். ஆயினும் ஒரு கிறிஸ்தவன் ஆத்துமாவுக்காக அக்கறைப்படாமலும் அதற்காக ஜெபிக்காமலும் இருந்தால் அதை இரட்சிக்க முடியாது.


2. 1 கொரிந்தியர் 10:12, " தன்னை நிற்கிறவனென்று எண்ணுகிறவன் விழாதபடிக்கு எச்சரிக்கையாயிருக்கக்கடவன் ".

a. ஒரு நாளின் முடிவில் அந்நாளில் செய்த பாவங்களுக்காக தேவனிடம் மன்னிப்பைக் கேட்காமல் தூங்கத் துணியமாட்டேன். அவர் என்மீது பொழிந்தருளின ஆசீர்வாதங்களுக்காக அவருக்கு நன்றி செலுத்து கிறேன். சோதனையை மெற்கோள்ள பெலனை அவரிடம் கேட்கிறேன், என் பிள்ளைகளை சரீரப்பிரகாரமாகவும், ஆவிக்குரிய பிரகாரமாகவும் ஆசீர்வதிக்கும்படி அவரை வேண்டிக்கொள்கிறேன்.

b. யாக்கேபு 5:16, " நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது ".

✝

## சத்திய வழி



❖ பேச்சாளர் : சகோ. P.R. சுவாமி (ஊழியர்)

❖ ரேடியோ : ஞாயிறு to வெள்ளி 5.30 p.m.

❖ நிகழ்ச்சி : வேதாகமக் கல்வி & அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

தொடர்புக்கு : சத்திய வழி, அஞ்சல் பெட்டி 8405, பெங்களூர் – 560084.

போன் : 080-25463507, செல் : 098440 70763

## கிறிஸ்துவின் வசனம்




❖ பேச்சாளர் : சகோ. B. அர்ஜூனன்

❖ தமிழன் : திங்கள் காலை 6:00 மணி & சனி மாலை 6:15 – 6:30 மணி

❖ மாத இதழ் : கிறிஸ்துவின் வசனம்

❖ ரேடியோ : SW 25 & 41 M (சனி மாலை 5.30 5.45)

Srilanka all Asia Service



ஆவிக்குரிய புத்தகங்கள் கிடைக்குமிடம் ;

கிறிஸ்துவின் சபை, தபால் பெட்டி 5, வத்லகுண்டு – 624 206.

திண்டுக்கல் மாவட்டம். போன் : 04543 263278 செல் : 94435 58041

## கிருபையுள்ள வார்த்தை



❖ பேச்சாளர் : சகோ. B. பிலேமோன் ராஜா

❖ தமிழன் : ஞாயிறு காலை 6:45 மணி & வெள்ளி காலை 6:00 மணி

❖ பைபிள் பாடங்கள் : அடிப்படை மற்றும் மேல்நிலை தபால் பாடங்கள்

❖ பார்வையற்றோருக்கு THE VOICE OF TRUTH ப்ரைல் இதழ் (தமிழ் / English)

❖ தமிழ் மாதப் பத்திரிக்கை : THE VOICE OF TRUTH INTERNATIONAL

❖ **English Quaterly Magazine** : கிறிஸ்தவர்களுக்கான சுவிசேஷப் பணி

❖ **J.C. School of Evangelism** : தபால் பெட்டி 15, அரசரடி, மதுரை – 625 016.

தொடர்புக்கு : செல் : 92 4421 4424, 92 4431 4431, 92 4420 4420

## திருமறை தியானம்



**தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்**

| | | | | |
|---|---|---|---|---|
| தமிழன் | TV | திங்கள் | காலை | 7:15 மணி |
| தமிழன் | TV | வியாழன் | இரவு | 9:30 மணி |
| தமிழன் | TV | சனி | காலை | 7:00 மணி |

## அஞ்சல் வழி வேதாகமகல்வி

*வேதாகமஅஞ்சல் வழிக் கல்வியில் ஒரு புதிய அத்தியாயம் ஆம், வேதாகமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு ஏழு பகுதிகளாப் பிரிக்கப்பட்டு, மிக ஆழ்ந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட 100 பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.*


தொடர்புக்கு : இயக்குனர், அஞ்சல் வழி வேதாகமக் கல்வி
த.பெ. எண் 27, காங்கேயம் 638 701.
தமிழ்நாடு, இந்தியா.


பேரிசுத்த வேதாகமத்தின் தெளிவான உபதேசத்தை வெளிப்படுத்தும் **பல்வேறு தலைப்புகளில்** வெளியிடப்பட்டுள்ள பல வண்ணங்களில் ஆன **கைப்பிரதிகள்** (Tracts) வேண்டுவோர் எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள்


| | |
|---|---|
| E.Z.S. ராஜநாயகம்: 98427 30382 | P.C. பிலேமோன் ராஜா: 9244204420 |
| P.R. சுவாமி : 098440 70763 | B. அர்ஜுனன் : 994435 58041 |

## " சத்தியத்தின் குரல் " சந்தா விண்ணப்பம்

☐ "சத்தியத்தின் குரல்" காலாண்டு இதழுக்கு நான் சந்தாதாரராக இருக்க விரும்புகிறேன். இத்துடன் ரூ. 100 (4 இதழ்கள்) (அ) ரூ. 200 (8 இதழ்கள்) க்கான காசோலையை இத்துடன் இணைத்துள்ளேன். என் விலாசம் கீழே உள்ளது.

☐ "சத்தியத்தின் குரல்" காலாண்டு இதழுக்கு என்னுடைய .................................... முன்னிட்டு ஒருதரம் வெகுமதி (A Gift) கொடுக்க விரும்புகிறேன். அதற்கான ரூ. ..................... காசோலையை இத்துடன் இணைத்துள்ளேன் என் விலாசம் கீழே உள்ளது.

☐ "சத்தியத்தின் குரல்" நூலை காலாண்டு தோறும் 25 பிரதிகள் பெறுவதற்காக ரூ. 500 அனுப்ப விரும்புகிறேன். அல்லது ஒவ்வொரு வருடமும் ரூ. 1500 அனுப்பி நான்கு காலாண்டுகளுக்கு 25 பிரதிகள் பெற்றுக்கொள்ள விரும்புகிறேன். (சபையார் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திப் பயன்பெறுங்கள்)

(இந்தப் படிவத்தை உங்கள் காசோலையுடன் இணைத்து அனுப்புங்கள்)

கடிதங்களும், காசோலைகளும், வரைவோலைகளும் அனுப்ப வேண்டிய முகவரி

**E.Z.S. ராஜநாயகம்**

"சத்தியத்தின் குரல்" காலாண்டு இதழ்

**288, தாராபுரம் ரோடு, காங்கேயம் – 638 701.**

**Ph : 04257 230030, Cell : 98427 30382, 99655 30385**

**E-mail : rajarichal@yahoo.co.in**

பெயர் : ____________________

தெரு / ரோடு : ____________________

நகரம் : ____________________ பின் கோடு : ____________

மாநிலம் : ____________________